
# என் இனிய இந்துமதம்



## இந்திரா சௌந்தர்ராஜன்

# என் இனிய இந்து மதம்!

## 1

*வாசக உலகிற்கு என் வந்தனங்கள் !*

*இப்புதிய தொடர் வாயிலாக உங்கள் உள்ளங்களில் உலாவரும் எனது இந்த முயற்சி ஒருவகையில் உங்கள் முயற்சி என்றும் சொல்லலாம்.*

*ஆச்சரியமாயிருக்கிறதா? எனக்கும்தான் !*

*நம்முன்னே எவ்வளவோ கேள்விகள் !*

*எல்லாக் கேள்விகளுக்கும் நமக்கு விடை தெரிந்து விடுவதில்லை. தெரிந்திருக்கும் விடைகளுக்குள்ளும் பூரண திருப்தியில்லை.*

*பள்ளிப் பாடங்களுக்கான கேள்விகளுக்கு பதில் கூறிட பாடப் புத்தகங்கள் உள்ளன. புரியவைக்க ஆசிரியர் களும் இருக்கிறார்கள். அம்மட்டில் ஆங்கிலம், தமிழென்று தொடங்கி விஞ்ஞானம், பூகோளம் என்று எல்லாப் பிரிவு களிலும் கடைத்தேறி, பள்ளியிலும் கல்லூரியிலும் முதல் வகுப்பில் தேறியவர்களுக்கு அவர்கள் கற்ற பாடங்களுக் கான கேள்விகளுக்கு வேண்டுமானால் விடை தெரிந்திருக் கலாம்.*

*ஆனால், எவ்வளவு பேருக்கு 'நான் யார்?' என்கிற கேள்விக்கு சரியான விடை தெரிந்திருக்கிறது? நம்மில் எவ்வளவு பேருக்கு நமது இறைதொடர்பான விஷயங் களில் ஒரு தெளிவு உள்ளது? கோயில் இல்லா ஊரில்*

குடியிருக்க வேண்டாம் என்று சொன்னதன் ஆழமான காரணம் எத்தனை பேருக்குத் தெரியும்?

இறைவன் என்பவன் ஒருவனே ! பரம்பொருள் என்றும், பரமாத்மா என்றும் நம் மதமும் அம்மட்டில் அந்த ஒன்றையே வலியுறுத்துகிறது. ஆனபோதிலும் பிரம்மா, விஷ்ணு, சிவன், பார்வதி, லட்சுமி, சரஸ்வதி என்று எதற்கு இத்தனை தெய்வங்கள்?

அமாவாசை, பௌர்ணமி என்பதெல்லாம் விண்ணில் நிகழும் வழக்கமான நிகழ்வுகள். ஆனால், இவைகளை விசேஷ நாட்களாக கருதி சில வழிபாடுகளையும், கர்ம காரியங்களையும் இந்த நாட்களில் புரிவது ஏன்?

இந்த இரண்டுக்கும் இடையில் பதினான்கு திதிகள், அன்றாடம் ஒரு நட்சத்திரத்தின் ஆதிக்கம். இதுபோக.. ராகுகாலம், எமகண்டம், சித்தயோகம், அமிர்தயோகம், குளிகை காலம் என்றெல்லாம் காலப் போக்குக்கு பிரத்தியேக அடையாளங்கள்! இது எதற்காக? இதனால் மனிதனுக்கு ஆகப் போவதுதான் என்ன?

ஆதி அந்தம் காணமாட்டாத இறைவனுக்கு எதற்கு சிவலிங்க வடிவம்?

பரந்தாமன் பாற்கடலில் பாம்பின் மேல் ஏன் பள்ளி கொண்டிருக்க வேண்டும்?

அன்பே வடிவான இறைவர்களுக்கு எதற்கு தங்கள் கைகளில் வேல், கம்பு, சக்ராயுத, சூலாயுதங்கள்?

மனிதன் தன் புத்தியால் சக்கரத்தை கண்டறிந்து பின் வாகனங்களைக் கண்டறிந்து அதனால் பயணம் புரிகிறான். தூரங்களைக் கடந்திட மனிதனுக்கு வாகனம் பயன்படுகிறது. இறைவனுக்கு எதற்கு வாகனம்? அதுவும் விலங்கு, பறவை என்கிற உயிர் வடிவங்களில்?



கோயில்களில் எதற்கு ஸ்தோத்திர துதி? அங்குள்ள கற்சிலைகளுக்கு எதற்கு அபிஷேக, ஆராதனைகள்?

ஏன் ஒரு சாரார் விபூதியும், ஒருசாரார் திருமண் காப்பும் தரிக்கின்றனர். வேதியர் என்று தனியே ஒரு பிரிவினர் எதற்கு? அவர்களுக்கு எதற்கு சிகையும், பூணூலும்?

ஒன்றாகிய இறைவனை அடைய நமது மதத்தில் மட்டும் எதற்கு ஆறு வழிமுறைகள்?

அன்றாட வாழ்க்கை முறையில் வீட்டு பூஜையறையில் விளக்கேற்றுதல், கோலமிடுதல் எல்லாம் எதற்காக?

தீபாவளி, பொங்கல், வருடப்பிறப்பு, ஆவணி அவிட்டம், ஆடிப்பெருக்கு, கார்த்திகை தீபம், வைகுண்ட ஏகாதசி, சிவராத்திரி, நவராத்திரி என்று பண்டிகை கொண்டாட்டங்கள் எதற்கு?

நவராத்திரி என்றால் பொம்மைக் கொலு, நாளுக்கொரு சுண்டல், இசை மணக்க பாடுதல்; மார்கழி என்றால் அதிகாலை துயிலெழல், பெரிய பெரிய கோலங்களைப் போட்டு சாணியைப் பிடித்து வைத்து அதில் பூசணிப் பூவைச்செருகி வைத்தல்; கார்த்திகை என்றால் இல்லம் முழுக்க விளக்கேற்றுதல்; தீபாவளி என்றால் அதிகாலையில் எண்ணெய் தேய்த்துக் குளித்து இனிப்பு உண்ணுதல், புத்தாடை அணிதல்; பொங்கல் என்றால் சூரியனுக்கு மட்டுமல்ல, மாட்டுக்கும் ஆட்டுக்கும் கூட பொங்கலிடல் என்கிற ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் பின்னாலே என்னதான் உள்ளது?

அமர்ந்து சாப்பிடும்போது ஏன் கையை ஊன்றக் கூடாது? தூங்கப் போவதற்கு முந்தைய இரவுச் சாப்பாட்டில் ஏன் தயிர் கூடாது? காக்கைக்குச் சோறு வைப்பது ஏன்? வடக்கே ஏன் தலை வைத்துப் படுக்கக்கூடாது?

வெளியே கிளம்பிவிட்டவரை வலிந்து அழைத்து, எங்கே போகிறாய் என்று ஏன் கேட்கக் கூடாது?

சாவு விழுந்த வீட்டுக்குப் போய் வந்தால் ஏன் குளிக்க வேண்டும்? மாதவிலக்கான பெண்கள் ஏன் ஒதுங்கி இருக்க வேண்டும்?

கோயிலில் உள்ள சாமிக்கு எதற்கு தேர்?

அதற்கு மட்டுமே எதற்கு திருவிழா? சுமங்கலிகள் பூச்சூடலாம், விதவைகள் ஏன் சூடக்கூடாது? சடங்குகளின் போது அக்னி வளர்க்கப்படுவது எதற்காக?

மாய மந்திரம், சித்து வேலை, பீதாம்பர ஜாலம் என்பதெல்லாம் என்ன?

யந்திரம், தாயத்து, கறுப்புக்கயிறு போன்ற சமாசாரங்களில் ஏதாவது பொருளோ, இல்லை திறமோ உள்ளதா?

விரத நாட்களில் பட்டினி கிடப்பதில் அர்த்தம் உள்ளதா? ஜாதகம், ஜோதிடம் எல்லாம் உண்மையா, இல்லை பிழைப்பு நிமித்தம் கண்டறியப்பட்ட கப்சா சரக்கா?

பாவம், புண்ணியம் என்றெல்லாம் உள்ளதா? பாவம் செய்தால் நரகம், புண்ணியம் செய்தால் சொர்க்கம் என்பதெல்லாம் மனிதர்களை நெறிப்படுத்துவதற்காக அழகிய பொய்களா.. இல்லை, சத்தியமான உண்மைகளா?

தலைவிதி, தலையெழுத்து இதெல்லாம் என்ன?

விதியை மதியால் வெல்ல முடியுமா? இறந்தபின் உயிர் எங்கு செல்கிறது? பேய், பிசாசுகள் இருக்கின்றனவா? மறு ஜென்மம் உண்டா? கடவுள் ஏன் எல்லோரும் பார்க்கும்படியாக கண்களுக்கு புலனாவதில்லை?



நிச்சயம் ஒரு நாள் மரணமுண்டு என்று தெரிந்தும் வாழ விரும்புவது எதனால்? எதையும் கொண்டு செல்ல இயலாது என்று நன்றாக தெரிந்திருந்தும் பொருட்களின் மேல் பற்று உருவாவது ஏன்?

ஏன் இளமையோடு எப்பொழுதும் இருக்க முடிவதில்லை?

பெண் பாவம் மட்டும் பொல்லாதது எனப்படுவது எதனால்?

தர்மம் தலை காக்குமா? பக்திதான் பலமா?

அடேயப்பா ! இப்படித்தான் எத்தனை எத்தனை கேள்விகள் !

இவை அவ்வளவுக்கும் துளியும் ஐயமின்றி விடை தெரிந்தவர்கள் இருக்கிறார்களா? அந்த விடைகள் அப்பழுக்கற்றவையா... அசைக்க முடியாதவையா?

தெரியாது !

எல்லோருக்கும் தெரிந்துவிடுவதில்லை.

தெரிந்துவிட இந்த வாழ்க்கையும் விடுவதில்லை. உடன் இருக்கும் சத்ருவாக வயிறு! இதற்கு தீனி போட்டுக் கொண்டேயிருக்க வேண்டும். அதன் நிமித்தம் உழைக்க வேண்டியிருக்கிறது. பணம் தேடிப் பறந்துகொண்டே இருக்க வேண்டியுள்ளது. இந்த முயற்சியின்போது ஏற்றத் தாழ்வுகளை கண்டு அதன் காரணமாய் மனம் திகைத்துப் போகிறது. நோய், நொடி என்கிற தாக்கங்களுக்கும் உடம்பும் மனமும் இலக்காகிறது.

ஆசாபாசங்கள் வேறு ஆட்டிவைக்க முயல்கின்றன. உயிர் வாழ்வதே பெரும்பாடாக இருக்கிறது. இந்த நிலையில்

மேற்காணும் கேள்விகள்தான் எதற்கு? அவற்றுக்கு விடை தெரிந்துதான் ஆகப்போவதென்ன?

நான் யார்... என்ன இனம்? தனக்கென்ன பேர் என்று எதுவுமே தெரியாத ஆடு, மாடுகள் இந்த உலகில் வாழாமலா போய்விடுகின்றன?

மண்ணுக்குள் நெளியும் புழுவிற்கு நீர், நிலம் என்கிற இரண்டு மட்டும் போதுமானதாக உள்ளது. அது என்ன வாழாமலா போய்விட்டது?

நின்ற இடத்தில் தழைத்து வளர்ந்து நிழலோடு கனியையும் தருகிறது மரம். எங்கும் எதையும் அது தேடிச் செல்வதே இல்லை. அது வாழாமலா போய்விட்டது?

இப்படியும்கூட சில கேள்விகள் !

எல்லாவற்றுக்கும் விடை தேடித்தான் இந்த தொடரைத் தொடங்குகிறேன். எனக்குக் கிடைத்த விடைகளை உங்களோடு பங்கு போட்டுக் கொள்ளப்போகிறேன். இந்த விடைகளில் நீங்கள் பிழையிருப்பதாக உணர்ந்தால், உடனேயே தெரிவிக்கலாம். நான் காணப்போகும் விடையை விடவும் ஒரு மிகச் சிறந்த விடை யாருக்குத் தெரிந்திருந்தாலும் சரி... தெரிவிக்கலாம்.

என் நோக்கமும் ஒன்றுதான்.. அறிவது - அறிவிப்பது என்பதே அது !

*எப்பொருள் யார்யார்வாய் கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்ப தறிவு.*

என்கிறது வள்ளுவம்.

இத் தொடரில் வள்ளுவம் இது போல வழிகாட்டப் போகிறது. அறம் செய விரும்பு, ஆறுவது சினம் - செட்டும் சீருமான வார்த்தைகளில் அறநெறியை நமக்கு போதித்த ஔவைப் பாட்டியும் அவ்வப்போது துணைக்கு வரப் போகிறாள்.



*'எதைக் கொண்டு வந்தாய் அதை இழப்பதற்கு?*
*எதை நீ படைத்திருந்தாய் அது வீணாவதற்கு*
*எது இன்று உன்னுடையதோ அது நாளை*
*மற்றொருவருடையதாகிறது.*
*மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்'*

இப்படி வாழ்க்கையின் நிலையாமை, மனம், அதன் குணம், அதற்கு தேவையான வாய்மை, நேர்மை திண்மையை போர்க்களத்தில் நின்றபடி உபதேசித்த கண்ணனின் கீதையும் விளக்கொளி பாய்ச்சப் போகிறது.

120 ஆண்டுகள் வாழ்ந்த வைணவ மாமுனி ராமானுஜர், 100 ஆண்டு வரை வாழ்ந்து தன் வாழ்க்கையையே தவமாக்கி அந்த தவத்தையே செய்தியாக்கிய காஞ்சி மாமுனிவர், 'நான் யார்?' என்கிற கேள்வியின் பொருட்டு ஒரு வேள்வியே நடத்திய ரமணர், எளிய போதனைகளால் மன இருட்டை நீக்கிய ராமகிருஷ்ண பரமஹம்சர் என்று ஒரு கூட்டமே.. விடையறியாத நமது கேள்விகளுக்கு விடையளிக்கத் தயாராக உள்ளது.

இதுபோக நம் கண்முன்னே வாழ்ந்து மறைந்த சான்றோர்களும், வாழ்ந்து கொண்டிருக்கும் சான்றோர்களும் வேறு தயாராக உள்ளனர்.

பிறகென்ன?

விடைதேடி ஒரு யாத்திரையைத் தொடங்குவோம். நாம் அறியப் போகும் விடைகளை நம் பிள்ளைகளிடமும் பகிர்ந்துகொள்வோம். வரும் காலம் என்பது இளைஞர் கைகளில்தானே எப்போதும் உள்ளது! அவர்களை கல்லூரிப் பாடத்திலும் சரி, வாழ்க்கைப் பாடத்திலும் சரி... மேதை களாக்குவதுதானே கடமை?

## 2

## எதற்கு இந்த அடையாளங்கள்?

ஏராளமாய் கேள்விகள் எழுப்பி, அதற்கெல்லாம் விடை காணவும் புறப்பட்டுவிட்ட எனக்கு.. வாசக உலகில் பலமான வரவேற்பு! பலரும் தங்களது மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொண்டதோடு, இந்தத் தொடருக்கு வாழ்த்துகளை யும் தெரிவித்துக் கொண்டனர்.

அவர்களுக்கெல்லாம் என் நன்றி!

பொதுவில் ஒருவர் இந்து என்று அறிய காரணமாக இருப்பதே, உடம்பின்மேல் அகத்தில் தெரியும் சில சின்னங் கள்தான்! இவற்றில் எல்லோரிடமும் பெரும்பங்கு வகிப்பது நெற்றித் திலகம்!

பெண்களாக இருந்தால் குங்குமப்பொட்டு.. ஆண் களிடம் விபூதி மற்றும் திருமண் ஸ்ரீ சூரணம் எனப்படும் நாமம்! சில உபாசகர்கள், மந்திர ஜபம் புரிபவர்கள் கூடுத லாய் செந்தூரமும், அஞ்சன மையும் தரித்திருப்பார்கள்! மேற்கொண்டு உச்சிக்குடுமி, பஞ்சகச்சம், மார்புப் பூணூல்.. இவையெல்லாமும் ஒருவன் இந்து என்பதற்கான அடை யாளங்கள்தான். பெண்கள் வரையில் கழுத்தில் தாலி, காலில் மெட்டியும்கூட நமக்கான பிரத்தியேக அடையா ளங்கள் !

இந்த அடையாளங்கள் எதற்கு? ஓர் இந்துவின் இறை யுணர்வு ஏன் பிறருக்கு தெரிய வேண்டும்? மனதுக்குள் பக்தி உணர்ச்சி இருந்தால் போதாதா? உள்ளத்தில் இறை நம்பிக்கையுடன் எவ்வளவோ பேர் எந்தவித அடையாளங் களும் இன்றி இருக்கத்தான் செய்கின்றனரே.. அவர்கள் எல்லாம் கெட்டா போய் விட்டனர்? இப்படி கேள்விகள் எழலாம்.



இந்த அடையாளங்கள் எல்லாவற்றுக்குமே ஆழமான பொருளும், அதனூடே நமக்கென சில நன்மைகளும் இருப்பதை புரிந்துகொண்டால் இவற்றை தவிர்த்துவிட்டு வாழ்பவர்கள் எவ்வளவு பெரிய இழப்பாளிகள் என்பதும் புரியும்.

எண்சாண் உடம்புக்கும் சிரசே பிரதானம் என்பது ஒரு பழமொழி. இந்த சிரசை கூர்ந்து பாருங்கள். பாப்பது கண்களின் பணி, கேட்பது காதுகளின் பணி, மூச்சுவிடுவது மூக்கின் பணி, உண்பது வாயின் பணி - இத்தனை பணி களோடு உடம்பின் இயக்கத்தை கண்காணித்தபடி உணர்வு களை பிரதிபலிக்கின்ற ஓர் உறுப்பாக மொத்த முகமும், எண்ணங்களை உள்ளடக்கிக்கொண்ட ஒரு பாகமாக நமது மூளையும் இருப்பது புரியவரும்.

அடுத்து, ஒருவர் உடம்பை வைத்து பிரத்தியேகமாக அடையாளம் காண்பது கடினம். முக அமைப்புதான் அடை யாளம் கண்டுகொள்ள பெரிதும் காரணமாக உள்ளது. முகம் அடையாளம் காண மட்டுமல்ல, அது ஒருவர் மனதில் என்ன உள்ளது என்பதையும் காட்டக்கூடியதாக உள்ளது. அதனால்தான், வள்ளுவரும் 'அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சம் கடுத்தது காட்டுமாம் முகம்' என்று முகத் துக்கு தனி இடம் தருகிறார்.

இப்படிப்பட்ட முகத்தில் இரு புருவ மையத்தில் உள்ள இடத்திற்கு பெயர் லலாடம் என்பதாகும். இந்த பாகத்திற்கும் நம் மூளைக்கும் ஒரு விநோத தொடர்பு உள்ளது.

தீவிரமாய் ஒருவர் சிந்திக்கும்போது நெற்றிப் பொட்டை தன்னையும் அறியாமல் தட்டிவிட்டுக்கொள் வதை பலரிடம் பார்க்கலாம்.

இந்த பாகம் மிக உணர்வுபூர்வமானது. மின்காந்த அலைகளை நுணுக்கி இழுக்க வல்லதும்கூட. சாதாரண மாக இந்த நெற்றிப் பொட்டுக்கு மேல் ஆட்காட்டி விரலால் நெற்றிப் பொட்டை தீண்டாமல் கையை வேகமாக அசைத்தாலேகூட.. புருவமையத்தில் நமக்கு குறுகுறுப்பு தோன்றும். சிலருக்கு மயக்கம்கூட வந்துவிடும். பல மனோவசியக்காரர்கள் கண்களால் கூர்மையாக பார்க்கச் செய்து, அவர்கள் நம் மனதை தன் வசமாக்கிக் கொள்ள முனைவது இந்த லலாடப் பகுதியை வைத்துத்தான்!

இந்த பாகத்தில் ஒரு குங்குமமோ, சந்தனமோ, விபூதியோ நாம் தரிக்கும்போது.. அது கவசம் போல அங்கே அமைந்துவிடுகிறது. அது மட்டுமல்ல.. இந்த பாகத்தில் மிக மெல்லிய அளவில் ஒரு ஈரப்பசை உள்ளது. சிலரது முகத்தை கவனித்தால் தெரியும்.. எண்ணெய்ப் பசை நிறைய இருக்கும். நாம் இடைவிடாமல் நமக்கான சின்னங்களை தரிக்கும்போது இந்த ஈரப்பசை, எண்ணெய் பசை எல்லாமே மறைந்துவிடுகின்றன. சிலர் வரையில் குறைந்து விடுகின்றன. முகமும் பளிச்சென்று துடைத்த கண்ணாடிபோல திகழ ஒரு வாய்ப்பாகிறது. கண்களிலும் பளிச்சென்று ஒளி பொருந்திய ஒரு தன்மை ஏற்படுகிறது.

இதை எல்லாம் நுட்பமாக உத்தேசித்தே சின்னங்கள் தரிக்கும் ஒரு வழக்கத்தை நம் முன்னோர்கள் ஏற்படுத் தினர். சின்னம் தரிப்பதன் முக்கியத்துவத்தை உணர்த்த அந்த ஈசனே தனது பிரதிபிம்ப சொரூபமாகிய சுந்தரரை கைலாயத்தில் விபூதிச் சம்புடத்தை தாங்கி நிற்பவராக படைத்துள்ளார். இதை புராணங்களில் இருந்து அறியலாம்.



வைணவர்கள் நெற்றியில் மட்டுமின்றி உடம்பின் மற்ற பாகங்களிலும் திருமண் ஸ்ரீ சூரணத்தை இட்டுக் கொள்வதை பார்த்திருக்கலாம். அதாவது, பன்னிரண்டு இடங்களில் இட்டுக் கொள்வர். இந்த பன்னிரண்டு இடங்களும் உடம்பின் சக்தி ஆதாரமான பகுதிகள். அங்கே திருமண் ஸ்ரீ சூரணமானது ஒரு கவசம் போல திகழ்கிறது. மொத்த மேனியும் இதனால் திருமேனி ஆகிறது.

பெண்களின் நெற்றிக் குங்குமத்தில் மஞ்சளும் வாசனைப் பொருட்களும் உள்ளன. இது ஒரு வகையில் கிருமிகள் அழிக்கும் குணமுடையது. மேற்கண்ட காரணங் கள் எல்லாம் பௌதிகமானவை. நுட்பமான உட்பொருள் ஒன்றுதான். இந்த உடம்பு ஒரு நாள் சாம்பலாகப் போகிறது; இந்த மண்ணோடு மண்ணாக கலக்கப் போகிறது. தினமும் இதை நாம் ஞாபகப்படுத்திக் கொள்ளவே நாமும் இதை நாள் தவறாது அணிகிறோம் எனலாம்.

நினைவுபடுத்துதல், படுத்திக் கொள்ளல் என்கிற இரண்டுமே மனிதன் தன் அறிவின் நிமித்தம் அவசியம் என்று உணர்ந்துகொண்டு கண்டறிந்திருக்கும் வழிகள் ஆகும். அதனால்தான் பிற மதத்தவர்களிடம்கூட மத அடையாளங்கள் தலையில் குல்லாய், கழுத்தில் சிலுவை என்கிற ரீதியில் காணப்படுகிறது. இவற்றை எல்லாம் மறுப்பவனும் தன்னை கறுப்புச் சட்டைக்குள் அடையாளப் படுத்திக் காட்டுகிறான்.

எனவே, அடையாளங்களுடன் இருப்பது என்பது ஒரு வழிமுறை. அதேசமயம், அந்த வழிமுறையாலும் ஒரு நன்மை நமக்கு ஏற்படவேண்டும் என்று நம் முன்னோர் கள் புத்தி பூர்வமாக நடந்துகொண்டிருப்பதை இதில் உணரலாம்.

இன்றைக்கு பெண்கள் கழுத்தில் தாலியோடு இருப்பது குறித்து பெரும் விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. அதை ஒரு அடிமைச் சின்னமாககூட சிலர் கோபத்தோடு குறிப்பிடுகிறார்கள்.

உண்மையில் 'தாலம்' என்னும் சொல்லில் இருந்து வந்ததே தாலி ஆயிற்று. அந்த நாளில் பனை ஓலையால் ஆன அணியாக தாலி விளங்கிற்று. காலப்போக்கில் அது மஞ்சள் கயிறுடன் கூடிய இறை சின்னங்கள் பொறிக்கப்பட்ட தங்கமாக மாறிவிட்டது. இன்று ஒரு படி மேலே போய் மஞ்சள் கயிறு இருக்கும் இடத்திலும் தங்கம் நுழைந்துவிட்டது. ஒரு பெண்ணின் கழுத்தில் ஒரு மஞ்சள் கயிறு இருந்தவரை.. அவளைப் பார்த்த மாத்திரத்தில் அவள் மணமானவள்; அவளுக்கென்று ஒரு குடும்பம் உள்ளது போன்ற எண்ணங்கள் நொடிப்பொழுதில் ஏற்பட்டுவிடும். அதற்கு ஏற்ப பிறரும் அந்தப் பெண்ணிடம் நடந்துகொள்வார்கள்.

அழகான பெண்களைப் பார்த்த மாத்திரத்தில் சிலருக்கு காதல் உணர்வு ஏற்பட்டுவிடுவது சகஜம். அதே சமயம், பிறன்மனை நோக்குதல் பெரும்பாவம். இந்த பாவத்தை ஒரு ஆணைச் செய்யவிடாமல் தடுப்பதுதான் தாலியின் பின்னால் உள்ள பலம். இதனால் அந்தப் பெண்ணும் நன்மை அடைகிறாள். ஒரு ஆணும் வழிப்படுத்தப்படுகிறான்.

சரி, தாலியை இருசாராரும் கட்டிக் கொள்ளலாமே... பெண்ணுக்கு மட்டும் அதை பணித்திருப்பது எந்த வகையில் சரி என்று சிலர் கேட்கலாம். உடற்கூறு, அன்றாட வாழ்க்கை முறை, மன இயல்பு என்று பல விஷயங்கள் இதன் பின்னணியில் உள்ளன.



பெண்ணுக்கு வீடுதான் உலகம். ஆணுக்கோ உலகம்தான் வீடு. பொருள் ஈட்டுவதற்காக அவன் இந்த உலகை சுற்றிவரும் கட்டாயம் உள்ளது. அவன் உடற்கூறும் அதற்கு ஏற்றதாக உள்ளது. பெண்கள் வரையில் கலைத் தொழில் புரிபவர்களாகவே அவர்களை நமது சமுதாயம் கருதியது. காலை கண்விழித்தல், வாசல் தெளித்தல், கோலம் இடுதல், அடுப்பு மெழுகுதல், சமைத்தல், பிள்ளைகளை அலங்கரித்தல், வீட்டை அழகாய் வைத்துக் கொள்ளுதல் என்கிற எல்லாமே கலையுடன் தொடர்பு உடையவை. இதற்கு முரட்டு பலம் தேவையில்லை. வைக்கோல் வண்டி இழுக்க எதற்கு யானை?

பெண்களை மெல்லியர்கள் என்போம். மெல்லியர்களுக்கு ஏற்றது மெல்லிய பணிகளே! நாளை நமக்கான வாரிசுகளை தரப்போகிறவர்கள் அவர்கள். ஆரோக்கியம், அழகு, அமைதி இந்த மூன்றும் அவர்களிடம் கட்டாயம் இருந்தாக வேண்டும். 'அதெல்லாம் இல்லை.. இன்றைக்கு பெண்ணானவள் விண்ணுலகுக்கே போய் வந்துவிட்டாள்; கார் ஓட்டுகிறாள்; ராணுவத்தில்கூட பணிபுரிகிறாள்.. எனவே, இப்படிப் பெண்களை அடுப்படி பூனைகளாய் மட்டுமே பார்ப்பதை நிறுத்திக்கொள்ளுங்கள்..' என்று யாராவது கூறுவார்களானால் அவர்களது அறியாமையை எண்ணி சிரிக்கத்தான் முடியும்.

எந்த நாளும் இந்து மதம் பெண்களை அடுப்படி பூனைகளாய் எண்ணியதே இல்லை. பெண்களை அது மகா சக்தி என்கிறது. தாய்மையே ஒரு பெண்ணுக்கு பரிபூரணம் என்பதால் அவளை மாதா என்று கொண்டாடுகிறது. இன்றைக்கும் தாய்ப்பாசத்துக்குப் பிறகுதான் எல்லா உணர்வுகளும் செயல்பட்டு வருகின்றன.

பெண்களை ஒரு பேழைக்குள் இருக்கும் நகையை போல பாதுகாக்கவே அது சொல்லித் தந்திருக்கிறது. ஆண் சமுதாயம் என்பதே பெண் சமுதாயத்தை பாதுகாக்க படைக்கப்பட்ட ஒன்று என்பதே இந்து மதத்தின் அடிப் படை கருத்து. இதனை வலியுறுத்தவே திருநாள் கொண் டாட்டங்களில் பெண்களின் திருநாளான நவராத்திரி ஒன்பது நாட்களுக்கு கோலாகலமாக கொண்டாடப் படுகிறது. மற்ற எல்லா திருநாட்களுக்கும் நீளம் 24 மணி நேரம்தான் !

எனவேதான், பெண் கழுத்தில் தாலியும் காலில் மெட்டியும் அணிவிக்கப்பட்டு அவள் திருமணமானவள் என்பதை சொல்லாமல் சொல்லும் அடையாளங்களாக அவை அவளுக்கு அமைந்தன. இவற்றைப் புறக்கணித்து விட்டு ஆணுக்கு சமமாய் வாழும் பெண்களும் இன்று உள்ளனர். இவர்கள் என்ன வாழாமல் போய்விட்டனரா என்று ஒரு கேள்வியும் எழுப்பலாம். உண்மையில் இவர்கள் எப்படி எல்லாம் பார்க்கப்படுகின்றனர் என்பது தெரியவந்தால் இந்த கேள்வியே கேட்கத் தோன்றாது!

பொருளாதார நிமித்தம் இன்று இருசாராரும் சம்பா தித்தாலே குடும்பம் நடத்த முடியும் என்பது நாட்டு நடப் பாக உள்ளது. இதில் வேலைக்குச் செல்லும் ஆணை விட பெண்கள் சந்திக்கும் துன்பங்கள் மிக அதிகம். சொற்ப சம்பளத்துக்காக அவர்கள் தங்களின் பவித்ரமான பல விஷயங்களை இழந்து கொண்டிருக்கிறார்கள்.

பார்ப்பதற்கு வெளித்தோற்றத்திற்கு அவர்கள் ஆரோக்கியமாக இருப்பது போல தெரிவதெல்லாம் உண்மையல்ல.. இன்று நூற்றுக்கு இருபது பெண்களிடம் கருப்பையே இல்லை. நூற்றுக்கு முப்பது பெண்களிடம் மார்பக புற்றுநோய் காணப்படுகிறது. நூற்றுக்கு எண்பது



பிரசவங்கள் இயற்கைப் பிரசவங்கள் அல்ல. சிசேரியன் தான்! சரிபாதி பெண்களுக்கு மாதவிலக்கு என்பதே அதற்குண்டான கால கதியில் இல்லை.

ஆண்களின் முதுமையைவிட பெண்களின் முதுமை மிக மோசமானதாக உள்ளது. சாதாரணமாய் பெண்களுக்கு தொப்பை விழாது. தலையில் வழுக்கையும் விழாது. அது ஆண்களுக்கென்றே உள்ள குறைபாடு. ஆனால், இன்று பல பெண்கள் தொந்தியும் தொப்பையுமாக உள்ளனர். இத்னைக்கும் அவர்கள் முன்பு நமது தாயும், பாட்டியும் பார்த்த எந்த வேலைகளையும் செய்வதில்லை. எல்லாவற்றுக்கும் மெஷின் வந்துவிட்ட காலமாயிற்றே இது?

பிறகு ஏன் இந்த நிலைப்பாடு? இங்கேதான் நமது கலாசாரம் அவர்களை எவ்வளவு ஆரோக்கியமாக வைத்திருந்தது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டி யுள்ளது!

* * *

## 3

## கட்டுப்பாடுகளை காப்பாற்றுவதற்குத்தான்!

இந்த வேளையில் நான் என் வீட்டுப் பெண்கள் எப்படி வளர்க்கப்பட்டார்கள் என்பதை சற்று திரும்பிப் பார்க்க விரும்புகிறேன். அதுவே எனக்கு பிற உண்மை களை உணர்த்துவதாகவும், பிரமிப்பைத் தருவதாகவும் உள்ளது.

நான் கூட்டுக் குடும்பத்தில்தான் பிறந்து வளர்ந் தேன். எனக்கு மூன்று அத்தைகள்.. அவ்வளவு பேருக்கும் என் பிறப்புக்கு பிறகே திருமணம் நடந்தது. முன்னதாக நான் வாழ்ந்த வீட்டில் வாசலில் ஒரு திண்ணை! அந்த திண்ணையில் எப்பொழுதும் யாரோ ஒரு பெண்மணி உட்கார்ந்திருப்பார்கள். திண்ணை முன் ஒரு சாக்குப் படுதாவின் மறைவில் அவர்கள் இருப்பது தெரியாது. அவர் களுக்கு முன்னாலே நல்ல பித்தளைப் பூண்போடப்பட்ட உலக்கை ஒன்றும் போடப்பட்டிருக்கும். பக்கத்திலேயே ஒரு தட்டு, தம்ளர், கல்கி, கலைமகள் தீபாவளி மலர் புத்தகம் என்று ஏதாவது ஒன்றும் கட்டாயம் இருக்கும்.

தப்பித் தவறி அவர்கள் மேல் நான் பட்டுவிட்டால் என் ஆடையைக் கழற்றி துவைக்க வேண்டும். குளிக்க வேண்டும்.

இந்த நாட்களில் அவர்களுக்கு என் பாட்டி பசலைக் கீரை கூட்டும், நிறைய நெய் விட்டு மிளகு ரசம் சாதமும், பிரண்டைத் துவையலையும் கட்டாயம் சாப்பிடச் செய்வார். நான்காம் நாள் அவர்களுக்கு தலைநிறைய எண்ணெய் வைத்து ஊறவிட்டுத்தான் குளிக்க வைப்பார்.



அன்று லேக்யம் என்று ஒன்றைக் கொடுப்பாள். பின் பசுந்தயிரில் சாதம் போடுவாள். இரவு பெரும்பாலும் அரிசி உப்புமா, இல்லாவிட்டால் உசிலி, அடை போன்ற சமாசாரங்கள்தான். தப்பித் தவறியும் பால், தயிர் சேராத படி மதியச் சாப்பிட்டுக்கு நேர்எதிர் கொண்ட ஒன்றாக பார்த்துக் கொள்வார்.

பெண்கள் தங்களின் உடல் சக்தியை பெருமளவில் இழந்து அவர்களது கருப்பைக்குள் ஒரு ரசாயன மாற்றம் நிகழும் ஒரு தருணமே மாதவிலக்குக் காலம். அப்போது அவர்களுக்கு நல்ல ஓய்வு தேவை. இவ்வேளையில் தீய சக்திகள் எளிதாக அவர்களை தாக்கும் என்பதால் அவை அணுகக் கூடாது என்பதற்காகவே உலக்கை! பின்னாளில் தாய்மைக்கு ஆளாகப்போகிறவர்கள் என்கிற காரணத் தாலேயே அந்த வேளையில் சத்தான ஆகாரங்கள்.. நோய்த் தொற்றுக்கும் நிறைய வாய்ப்பிருப்பதால் யாரும் அவர் களை தீண்டக்கூடாது என்று அவர்களை 'தூர'த்தில் இருத்தினர்.

இந்த தீண்டாமை பாவத்திற்குரிய ரகமல்ல.. இது அவர்களைக் காப்பாற்றக் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு வழிமுறை. இன்று இந்த வழக்கம் போயே போய்விட்டது. தொலைக்காட்சி விளம்பரங்களில் பெரும்பாலானவை பெண்களுக்கான நாப்கின் விளம்பரங்களாகத்தான் உள்ளன. இந்த விஞ்ஞான வழிமுறை அவர்களுக்கு ஒரு கோணத்தில் நன்மையை செய்தபோதிலும், அவர்களுக் கான ஓய்வை இது இன்னொரு கோணத்தில் தர மறுக்கிறது.

இவை அவ்வளவும் மேல்நாடுகளிலிருந்து நுழைந்த விஷயங்கள்! மீடியாக்கள் விரிவுபடப் போய் வீட்டுக்குள்

ளேயே மொத்த உலகமும் தெரியவந்ததால் வந்து நிற்கும் வினை.

அந்நிய தேசத்தில் வசிக்கும் மேரிக்களும், பார்பராக் களும் அந்த நாட்டுப் பருவச் சூழல், உணவுப் பழக்கம், கலாசாரம் காரணமாக அப்படி இருக்கிறார்கள். அவர்களுக்கு நம் கலாசாரம் அளவு ஒரு ஆழமோ ஒரு பெரிய வரலாறோ கிடையாது. நமது மண்ணின் சீரான பருவங்களோ, மூலிகைக் காடுகளோ, முதிர்ந்த நாகரிகப் போக்கோ, அறநெறி சார்ந்த ஒரு வாழ்க்கைக்கான பெரும் வற்புறுத் தல்களோ அங்கு கிடையாது.

மிகப் பெரிய நாகரிகமும் தொன்மையும் நமக்கிருக்கக் காரணம், நமது சனாதனம்தான்! அதாவது, எப்போது தோன்றியது என்பதே தெரியாத அளவு ஒரு ஆரம்பம் நமக்கிருப்பதுதான்!

அதனாலேயே நாம் மற்ற நாட்டவர்களைவிட ஒரு மிகப் பெரிய முன்னோர் கூட்டத்தை கொண்டிருக்கிறோம். அவர்கள் பட்டு பட்டு அனுபவித்தறிந்து நமக்காக விட்டுச் சென்றனர். அவை பாடல்களாய், பழம் நூல்களாய் நம்முன் கொட்டிக் கிடக்கின்றன.

ஆனால், இன்று... நம் பிள்ளைகள் நல்ல தமிழில் பேசவும், படிக்கவும் பாடாய்ப் படுகின்றன.

இன்று பெரும்பாலான பிள்ளைகள் தாய்ப்பால் அருந்தி வளர்வதே இல்லை. க்ரீச் எனப்படும் பிள்ளைகள் காப்பகத்தில் வளர்கின்றன. சற்று வளர்ந்த பிள்ளைகள் ஹாஸ்டலில் வளர்கின்றன.

ஒரு கூட்டுக் குடும்பத்தில் உறவினர்களுக்கு நடுவில் நல்லொழுக்கங்களோடு வளர்க்கப்பட்டவர்கள்



வாழ்க்கையை அர்த்தச் செறிவோடு தொடங்குகிறார்கள். ஆனால், பெற்றோர், உறவினர் தொடர்பு இல்லாது வளர்கிற பிள்ளைகள், பசித்தால் சாப்பிடுபவர்களாகவும், தூக்கம் வந்தால் தூங்குகிறவர்களாகவும், உணர்வுகளால் மட்டுமே வாழ்பவர்களாகவும் உள்ளனர். ஒரு வெறுமை இவர்களிடம் காணப்படுகிறது.

நல்ல கண்காணிப்பில் வளர்கின்ற பிள்ளைகளில் சிலரேகூட இந்த கலிகால மாயைக்குப் பலியாகிவிடும் போது, பெற்றோரைப் பிரிந்து வளர்கின்ற பிள்ளைகளின் நிலையை எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. ஒரு குடும் பத்தில் தந்தை என்பவன் இல்லாது போனாலும் தாய் என்பவள் இருந்துவிட்டால் அந்த குடும்பத்தை மீட்டெடுத்து விடுவாள். ஒரு குடும்பத்தில் பெண்ணின் பங்கு அந்த அளவு இன்றியமையாதது.

அதனாலேயே, நமது வாழ்க்கைக்கு ஆதாரமான கல்வி, செல்வம் வீரத்தைக்கூட கலைமகளும் அலை மகளும் மலைமகளும் வழங்குவதாக பெண் தெய்வங் களையே நமது மதம் பிரதானப்படுத்தியது. அவர்கள் மிக உயர்ந்தவர்கள் ஆனதாலே தங்கம், வைரம், மாணிக்கம், வைடூரியம் என்கிற செல்வங்களும் அவர்களுக்கே உரித் தானவை.

எப்படிப் பார்த்தாலும் நமது மதத்தில் பெண்களே பெரியவர்கள்! உண்மையில் அவர்களே வலிமையானவர்கள். வலிமை என்பது மனோதிடம், ஆரோக்கிய உடலமைப்பு, நோயற்று நெடிது வாழ்வது ஆகியவற்றுள்தான் உள்ளது. அதனாலேயே அவர்களைப் பத்திரமாய் பாதுகாக்கும் நோக்கில் அவர்களுக்கான இலக்கணங்கள் அச்சம், மடம்,

நாணம், பயிர்ப்பு, கற்பு எனும் ஐவகையாக கண்டறியப் பட்டன.

ஒரு வைரக் கட்டியைக் கள்வர்கள் கொண்டு போகாமல் இருக்க பெட்டியில் வைத்து பாதுகாப்பது போல, பெண் ணினத்தை இந்த ஐவகை அம்சங்கள் பாதுகாத்தன. அத்தனை உயர்வானது பெண்மை!

வீட்டுக் கொல்லையில் தண்ணீர் இறைப்பது, கோலம் போடுவது, பாடுவது, ஆடுவது எல்லாம் இன்று போயே போய்விட்டது. இவை எல்லாமே ஒரு பெண்ணை அவளுக்கே தெரியாமல் மிக மிக ஆரோக்கியமாக வைத்திருந்தன.

இன்றைக்கு பெண்கள் உரிய காலத்தில் பிள்ளைகள் பெற்றுக் கொள்வதில்லை. பெற்றுக்கொண்டாலும் ஒழுங் காக தாய்ப்பால் தருவதில்லை. அடுத்து, மாதவிலக்கை மாத்திரைகள் மூலம் தள்ளிப்போடுகின்றனர். பிள்ளை பெற்றுக்கொண்டாலும் ஒரு குழந்தையோடு நிறுத்தி விடுவதால், கர்ப்பப் பைக்கு வேலையே இல்லாமல் போய் அதில் நச்சு போல கட்டிகள் கிளம்பிவிடுவதாக ஒரு மருத் துவரே என்னிடம் சொன்னார்.

உண்மையில் நமது தாயைப் போல, பாட்டியை போல ஆரோக்கியமான பெண்களை இனிவரும் காலத்தில் பார்க்க முடியாது. விஞ்ஞானம் உதவி எனும் பேரில் அவர்களை மெல்ல விழுங்கி வருகிறது என்பது நிதர்சன மான உண்மை!

* * *



4

## மார்கழி மகத்துவம்!

'மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன்' என்றான் கண்ணன்.

கண்ணனுக்கு உகந்த மாதமாக மார்கழி பிறந்திக்கிறது. இந்து மதத்தின் ஞானச்செறிவை, அது இந்த மாதத்தை கொண்டாடும் விதத்தை வைத்தே புரிந்துகொள்ளலாம்.

நான் சிறுபிள்ளையாக இருந்த காலத்தில் அறியாமை காரணமாக இந்த மாதத்தை வெறுத்திருக்கிறேன். காரணம், இதனுடைய குளிர் மட்டுமல்ல, என் வீட்டுக்கு பக்கத்தில் உள்ள கோயிலில் நாலு மணிக்கு 'விநாயகனே! வினை தீர்ப்பவனே' என்று ரேடியோ அலறத் தொடங்கிவிடும். தூக்கத்தைக் கலைக்கும் அந்த சத்தமும் ஒரு காரணம்.

மாலை வேளையில் சேலம் வாசவி மஹாலில் உபன் யாசம். என் தாயும், பாட்டியும் ஐந்து மணிக்குப் போனால் இரவு பத்து மணிக்குத்தான் வருவார்கள். பெரும்பாலும் இரவு வேளையில் உப்புமா. இல்லாவிட்டால் உசிலிதான். சமையலில் மொத்த மாதமும் வெங்காயத்துக்குத் தடா! பெரும்பாலும் மோர்க்குழம்பு, வத்தக்குழம்பு, பிரண்டைத் துவையல். அதிலும், ஏகாதசி கழிந்த மறுநாளான துவாதசி அன்று அகத்திக்கீரை கூட்டு, நெல்லிக்காய் பச்சடி ஒரு கட்டாய உணவு.

திருவாதிரை ஒரு நாள் மட்டும் களியும், கூட்டும் பக்கத்து ஸ்மார்த்தர் ஒருவர் வீட்டில் இருந்து வந்து சேரும்.

காலை ஐந்து மணிக்கே என்னை எழுப்பிவிட என் தாய் பாடாய்ப்படுவாள். ஆனால், அப்போதுதான் தூக்கமும் களை கட்டும். 'நாளைக்கு எழுந்து கொள்கிறேன்' என்று சொல்லியே ஒவ்வொரு நாளையும் தூங்கக் கழிக்க முயல்வேன்.

இப்போது போல குளிர் என்பது அப்போது அபூர்வமாகிவிட்ட விஷயமுமில்லை. எனவே, ஜலதோஷம் வேறு பிடித்துக்கொண்டு விடும். அதைக் காரணம் சொல்லியே மிளகு ரசமாக செய்வாள் என் அம்மா. எனக்கோ அதை அறவே பிடிக்காது. வம்படியாக ஒரு டம்ளர் ரசத்தைக் குடிக்க வைக்க வீடே போராடும்.

இதுதான் என் இளமைக் கால மார்கழி! 'இந்த மாதத்தையா அந்த கண்ணன் தனக்குப் பிடித்த மாதம் என்றான்?' என்று எனக்கு வியப்பாகவும் இருக்கும்.

இதன் ஒட்டுமொத்த அருமையும் எனக்கு நாற்பது வயதுக்கு மேல்தான் புரிய ஆரம்பித்தது.

புரட்டாசிக்குப் பின்வரும் ஐப்பசியும், கார்த்திகையும் அடைமாத காலங்கள். மார்கழி என்பது பனிக்கான காலம். கார்த்திகை மாதத்தை கூர்ந்து கவனித்தால் ஒரு உண்மை புலனாகும். அதாவது, இந்த மாதத்தின் மாலைப்பொழுதுகளில் வீட்டுக்கு வீடு கட்டாயமாக விளக்கேற்றுவார்கள். அதிலும், திருக்கார்த்திகை அன்று கட்டாயமாக விளக்கேற்றுவார்கள். அவ்வளவும் நல்லெண்ணெயால் ஏற்றப்படும் தீபங்கள். இந்தத் தீபச்சுடரில் இருந்து பிரியும் வாயுவும், அந்த மாதம் முழுக்கவே வெளி முழுக்கப் பரவும். தென்மேற்கு பருவக் காற்றால் பெய்யும் அடைமழையும் ஒரு முடிவுக்கு வந்து இந்த வாயுக் கலப்போடுதான் மார்கழி பிறக்கிறது.



இதன் காலை வேளையில் ஒரு மனிதன் கட்டாயம் ஆழ்ந்து சுவாசிக்கவேண்டிய ஜீவ வாயுக்கள் மிகுதியாக இருக்கும். உறக்கத்தில் நம்மிடம் சீரான சுவாசம் இருக்கும். உடம்பில் இயக்கம் இல்லாத நிலையில் அந்த ஜீவ வாயுக்கள் நம் உடம்பின் எல்லா பாகங்களிலும் கலப்பதற்கும், இயக்கம் உள்ள நிலையில் கலப்பதற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. அதுமட்டுமல்ல, கை கால் மூட்டுக்கள் செயலற்ற நிலையில் இருப்பதால் குளிரின் தாக்கம் காரணமாக மூட்டுப்பசை உறைந்து விடும். அவ்வாறு, அது உறையாதிருக்க நாம் அவ்வேளையில் எழுந்து நடமாட்டமுடன் இருப்பது நலம் தரும் ஒன்று (மருத்துவர்கள் இதையெல்லாம் மறுக்கக்கூடும்).

இப்படி நமது உடம்பின் ஆரோக்கியத்துடன் தொடர்புடைய இந்தக் காலை வேளையில் உள்ளத்தின் ஆரோக்கியத்துக்கும் தொடர்புடைய பக்திப்பூர்வமான விஷயங்கள் நடப்பதுதான் இதில் முக்கியமானது.

மொத்தத்தில் இம்மாதம் அதிகாலை எழுந்து துடிப்போடு செயல்படுபவர்களுக்கு உடல், உள்ளம் இரண்டுமே மிகவும் ஆரோக்கியமாக இருக்கும். இருக்கும் என்ன, இருக்கும். இருக்கிறது என்பதை நான் என் அனுபவத்தில் பலரிடம் பார்த்துவிட்டேன்!

இதை உத்தேசித்தே அதிகாலை நான்கு மணிக்கே நடை திறத்தல், பல்லாண்டு பாடுதல் போன்ற நிகழ்வுகளை சான்றோர்கள் வகுத்து வைத்தார்கள்.

அத்துடன், தேவர்கள் பூஜிக்கும் காலப் பகுதியாக இந்த மாதம் இருப்பதால் அருளம்சம் பொங்கிப் பெருகியபடி இருக்கும். எனவே, அருளும் நலமும் பெற்றிட மார்கழியை விட்டால் கதியே இல்லை என்பதுதான் உண்மை.

இந்த மாதத்தின் அவ்வளவு காலைப்பொழுதுமே நம்மை ஆரோக்கியமாக்குகிறது என்றால், இந்த மாதத்தில் வரும் வைகுண்ட ஏகாதசி திருநாளோ அந்த ஆரோக்கி யத்தை நமக்கு நிலைப்படுத்தித் தருகிறது. இந்த நாளில் கண்விழித்து பரிபூரண விரதம் இருப்பதுதான் பிரதான சிறப்புக்குரிய விஷயம்.

பொதுவாகவே, உறங்காமல் கண் விழித்திடும்போது உடம்பில் உஷ்ணம் கூடும். புலன்கள் ஓய்வின்றி இயங்கிக் கொண்டே இருப்பதன் எதிரொலி அது.

நல்ல குளிருள்ள மாதத்தில் உடம்பின் இயல்பான சூட்டை இந்த ஏகாதசி விரதம் சற்று அதிகரிக்கச் செய் திடும். இந்த சூட்டோடு மறுநாள் துவாதசியன்று பெருமாள் சேவை முடிக்க... அந்த சேவையில் தீர்த்தம், துளசி மிக முக்கிய பங்கு வகிக்கிறது. துளசி ஒரு மூலிகை என்பதை யும் மறந்துவிடக்கூடாது. கோயிலில் துளசித் தீர்த்தம், வீட்டுக்கு வந்த பின் பால்-பழம்! லேசாக முன்பசி அடங்கிட, முழுப் பசியை அடக்கத்தான் துவாதசியில் பாரணை என்னும் விசேஷ சமையல்! இதில் அகத்திக் கீரையும் நெல்லிக்காய் பச்சடியும் முக்கிய உணவு. இதைச் சாப்பிட்டு முடிக்க உடம்பு ஆரோக்கியத்தின் நிலைக்கள னாகிறது.

அதாவது, ஏகாதசி நாளில் விண்வெளியில் ஏற்படும் தட்பவெப்ப மாறுபாடுகளால் நமது உடம்புக்குள்ளே சுரப்பி களின் செயல்பாடும், அவை சுரக்கும் திரவங்களில் விஷத் தன்மையும் இருக்கிறது. அன்று நாம் உணவு உண்ணும் பட்சத்தில் அந்த விஷத்தன்மை உணவு செரிப்பதன் மூலம் உடல் முழுக்க பரவி அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. அதே திரவமே மறுநாள், துவாதசி திதியன்று அமிர்தத் தன்மைக்கு மாறுகிறது. அப்படி அமிர்தத் தன்மை அடைந் ததை உடம்பு உடும்பு போல பற்றிக் கொள்ளத்தான் அகத்தியும், நெல்லியும்!



அந்த நாளில் கட்டடங்களின் இறுக்கத்துக்கு நெல்லிச் சாற்றையும், ஒரு விஷயமாக பயன்படுத்துவார்கள். அகத் தியை மருந்து சாப்பிடும் நாளில் சாப்பிடக்கூடாது என்பார் கள். மருந்தின் வீரியத்தை அது முறித்துவிடும். இங்கே யும் அகத்தி விஷத்தின் வீரியத்தை முறித்து, பின் அமிர்த மானதை நெல்லியின் உதவியோடு உடம்பின் அவ்வளவு எலும்பு பாகங்களுக்கும் கொண்டு சென்று சேர்க்கிறது.

தவறாமல் ஏகாதசி விரதம் இருக்கும் ஒருவர் நிச்சயம் நூறு வயதிலும் நல்ல பார்வையுடன் துளியும் தள்ளாமை இன்றி திடமாக இருப்பதை இப்போதும் நாம் பார்க்கலாம்.

இப்படி இந்த மாதம் மானிட சமுதாயத்துக்கு நேர்முக மாகவும், மறைமுகமாகவும் புரியும் நன்மைகளுக்கு அளவே யில்லை. நல்ல மார்க்கத்தில் பொழுதை கழிக்கச் செய்யும் மாதம் என்பதால் மார்க்க் கழி என்பது மார்கழியானது என்று சற்று இலக்கியச் சுவையோடு குறிப்பிடுவார்கள். கழி என்பதற்கு ஒழுகுதல், பின்பற்றுதல் என்று பொருள் கூறு வோர் உண்டு.

மாதம் முழுக்க அதிகாலை நீராடல், ஆலய வழிபாடு, பின் பிரசாதமே முதல் உணவு, மாலையில் கருத்துக்கினிய உபன்யாசங்கள், இரவில் புழுக்கமில்லாத தூக்கம்.. இப்படி கழிக்கப்படும் ஒரு மாத காலம்.. அதன் பின் ஒரு வருடத்துக்கு துணை வருகிறது. ஒரு பருவச் சூழலை எல்லோருக்கும் பொதுவாக்கிப் பயன்படுத்திக் கொள்ள வழிசெய்து தந்த நம் சான்றோர்களை நினைக்க மனது பெருமிதம் கொள்கிறது.

இந்த மாதம் மனனம் செய்தல், ஒப்புவித்தல், மொழி வளம் உணர்தல் போன்றவற்றுக்கும் பெரிதும் காரணமாக உள்ளது. திருப்பாவை முப்பதையும் படியுங்கள். அப்போது இதற்கான பொருள் விளங்கும்.

'இளம்பிராயத்தில் மார்கழியைக் கொண்டாடும் பிள்ளைகள் விதிவழியை மிகமிகச் சுலபமாக கடந்து விடுவார்கள்' என்பார் முக்கூர் லக்ஷ்மி நரசிம்மாச்சாரியார்! அது ஒரு மாபெரும் உண்மை என்பதை அனுபவித்து உணர்வோம்!

* * *



## 5

## வழி பிறக்கட்டும்!

மார்கழி மாதத்தின் சிறப்பை சிந்தித்தோம்... இப்போது, அடுத்த மாதமாகிய தை மாதம் பிறந்துவிட்டது. 'தை' என்ற உடனேயே 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்கிற ஒரு தன்னம்பிக்கை தரும் பழமொழிதான் எல்லோருக்கும் நினைவுக்கு வரும்.

இந்த தையில் எந்த வழி பிறக்கப் போகிறதென்ற கேள்விகள் எழுவது இயற்கையே!

உண்மை என்ன தெரியுமா? வயல்வெளிகளில் விளைந்து கிடக்கும் நெல்லும் கரும்பும் வரப்பு வழி தெரியாத அளவு தழைத்து வளர்ந்து மூடியிருக்கும். அவைகளை அறுவடை செய்து விற்பனைக்காக சந்தைக்கு கொண்டு செல்லும் மாதம் இந்த தை மாதம்!

அதனாலே மூடிக்கிடந்த வயல்வெளிகளில் நடப்பதற்கு வழி பிறக்கிறது. அடுத்து, தழைத்து வளர்ந்த இந்த தாவரங்களாலே ஒரு விவசாயிக்கு அந்த வருடம் முழுவதும் பசியின்றி உண்ண வழி பிறக்கிறது.. மூன்றாவதாக அவன் விளைவித்த பொருட்களாலே அவனுக்கு பொன்னும் பணமும் கிடைக்கப் போய், வாழ்க்கைக்கே வழி பிறக்கிறது.

அடுத்து இந்த மாதம் வந்திடும் முகூர்த்த நாட்களுக்கு விசேஷ சிறப்பு உண்டு. இந்த மாதம் திருமணம் கண்டு கூடுபவர்களுக்கெல்லாம் ஐப்பசி கார்த்திகையில் பிள்ளை பிறக்கும். அதாவது, தலை தீபாவளியையே இவர்கள் பிள்ளையோடு கொண்டாடி விடலாம்.

ஒரு பெண்ணுக்கு பேறுகாலம் என்பது இரண்டாவது பிறப்பு. அந்த பிறப்புக்குரிய காலம் அடைமழை காலமாக இருப்பதால் உஷ்ணமில்லாத ஏகாந்த காலமாக இந்த கால கட்டம் இருக்கும். எனவே, பிரசவமும் சுகப்பிரசவ மாக அமைந்துவிடும். இப்படி ஏராளமான வழிகளையும், வழிமுறைகளையும் காட்டும் மாதமாக, இந்த தை மாதம் இருக்கிறது.

இந்த மாதத்தில்தான் மிக உன்னதமான மகர சங்க ராந்தி என்னும் பொங்கல் திருநாள் வருகிறது. பொங்கல் திருநாளை கொண்டாட்டங்களின் சிகரமாய் வர்ணிக்க லாம். அந்த அளவுக்கு அதில் ஆழ்ந்த பொருள் உள்ளது.

அரிசியை வெல்லம் சேர்த்துப் பொங்கி இனிப்பை எப்போது வேண்டுமானாலும் உண்ணலாம். ஆனால், தை முதல் நாள் சூரியனை வழிபட்டு பொங்கும் பொங்கல் இருக்கிறதே.. அது அந்த ஆண்டுக்கே மகிழ்ச்சியைத் தருவதாக இருப்பதுதான் ஒரு ஆச்சரியமான உண்மை! மற்ற கொண்டாட்டங்களில் இறைவர்களுக்கு முதலிடம். ஆனால், பொங்கலில் இயற்கைக்குதான் முதலிடம்! குறிப் பாக, மனித வாழ்வுக்கு ஆதாரமாக விளங்கும் வயலுக்கும், அந்த வயலில் மனிதனோடு சேர்ந்து உழைக்கும் மாட்டிற் கும் நாம் நன்றி கூறுவது இந்த நாளில்தான். இது வேறு எங்குமே காணப்படாத ஒரு உயர்ந்த பண்பாடு.

அடுத்து, ஒளிக்கடவுள் என்றும்.. இருள் நீக்கும் ஜோதி என்றும் போற்றப்படும் சூரியனைத்தான் கண்கண்ட கடவுள் என்பர்.

முனிவர்கள், ரிஷிகளிடம்கூட சூரிய வழிபாடு என்பது பிரத்தியேகமாக உண்டு. சூரிய நமஸ்காரம் என்பது சில முத்திரைச் சிறப்பு கொண்ட ஒருவித யோகப் பயிற்சி யும்கூட... தினமும் சூரிய நமஸ்காரம் புரியும் ஒருவர் ஆரோக்கியத்தின் நிலைக்களனாகவே இருப்பார் என்பதே பேருண்மை.

தை மாதத்தின் முதல் நாளை சூரியனுக்கு உகந்த தினமாக ஆக்கி அவனுக்கே பொங்கலிட்டு நாம் படையல் இடுகிறோம். அடுப்பில் பொங்கல் பொங்குவது என்பது சாதாரண வினைச் செயல் அல்ல.

அதனுள் நுட்பமாய் ஏராளமான உட்பொருட்கள் பொதிந்துள்ளன. அரிசியோடு பருப்பு, இத்தோடு பால்.. இந்த மூன்றோடு வெல்லம்! ஒன்று, விளைந்தது (அரிசி). இன்னொன்று, சுரந்தது (பால்). இன்னொன்றோ, பிழிந் தெடுக்கப்பட்டது (வெல்லம்).

நாமும் அன்னையின் வயிற்றில் விளைந்தவர்கள் தாம். இந்த உலகம் நம்மை பிழிந்தெடுத்த பின்பே இன்பம் தருகிறது. இதனால் நமக்குள் ஞானம் சுரக்கிறது. நம்முள் உள்ள இந்த மூன்றின் பிற வடிவம்தான் அரிசி, பால், வெல்லம். மூன்றும் கூடிப்பொங்கிட.. அடுப்பில் அக்னி உதவுகிறது. நம் மனம் பொங்கிட சூரியன் உதவுகின்றான்.

அடுப்பில் பொங்கல் எந்த அளவு சிறப்பாக பொங்கு கிறதோ, அந்த அளவு சூரியனின் கருணையால் நம் மனமும் பொங்கி மகிழ்ந்திடும். மிகுந்த விஷய ஞானம் உள்ள பெரியவர்கள் பொங்கல் பானை பொங்கி முதலில் வழியும் திசையை வைத்து நற்பலன்களை பட்டியல் போட்டுக் கூறுவார்கள். அவை அப்படியே பலிப்பதை வாழ்வில் உணரலாம்.

அரிய இந்த உண்மைகளை எல்லாம் நம்முள் தைக்கும் மாதமாக இந்த மாதம் இருப்பதால் காரணப் பெயராகவே தை என்று வந்ததோ என்று எண்ணத் தோன்றுகிறது. தை என்ற வார்த்தை இந்த மாதத்தின் பெயரில் மட்டும் இல்லை.. விதை, சிதை, புதை, கதை, வதை எனும் சொற்களிலும் தையில் என்கிற சொல்லுக்குள் ளும் ஒளிந்திருக்க காணலாம்.

'வி' என்பது விருத்தியைக் குறிக்கும். விருத்தியை தைத்துக் கூடிட விதை வந்தது.. விதையும் மண்ணில் புதைந்து விருத்தியைத்தானே காண்கிறது?

'சி' என்பது சிதைவை குறிக்கும் - உயிரற்ற உடம்பும் அழிந்துதானே போகிறது? அதனாலேயே அதை சிதை என்கிறோம்.

'க' என்பது கற்பனையை குறிக்கும். இந்த கற்பனை யோடு தை கூடிட கதை வந்தது. கதை என்பது கற்பனை யானதுதானே?

'பு' என்பது புண்ணைக் குறிக்கும். நிலத்தை புண் படுத்தும்போதுதான் குழி தோன்றுகிறது. அதில் ஒன்றைப் போட்டு மூடுவதை புதைப்பது என்கிறோம்.

இப்படி தை எனும் சொல் தன் முன் சேரும் எழுத்துக்கு ஏற்ப பொருள் கொள்ளும் விந்தையை கவிஞர்கள் கவிதை களில் எழுதி மகிழ்வர். கவிதை என்பதே மனதில் விழுந்து பலவித எண்ணங்களை உருவாக்குவதுதானே? எப்படிப் பார்த்தாலும் 'தை' என்பதுடன் ஒரு எழுத்து கூடும்போது அதற்கேற்ப பொருள் கொள்கிறது. சொல்லுக்கு பல பொருள் தரும் தை, மனிதர்களின் செயலுக்கும் பல பொருள் தரும் ஒன்றாக இருக்கிறது. எனவேதான், இதை பண்டைத் தமிழர்கள் மாதங்களின் தலைமாதமாக இதைப் போற்றினர்.

இந்த மாதத்து வெள்ளிக்கிழமைகளும், இந்த மாதத்து அமாவாசையும், இந்த மாதத்து பூச நட்சத்திரமும்கூட பெரிய சிறப்பை உடையவைதான்!

எல்லோரின் வாழ்விலும் இனி வழி பிறக்கட்டும்!



## 6

## சிவராத்திரியின் சிறப்பு!

ஒரு ஆள் செய்யாததை நாள் செய்யும் என்பது நம் சான்றோர் வாக்கு! இதே வரிசையில் 'பொன் கிடைத் தாலும் புதன் கிடைக்காது' என்றும் ஒரு பொன்மொழி நினைவுக்கு வரக்கூடும்.

உண்மையில், இந்த இரண்டு பொன்மொழிகளும் நம்மவர்களின் சூட்சும ஞானத்திற்கு பெரிய சான்றாகும்.

மாசி மாதத்து சிவராத்திரி இரவானது மாசி அமா வாசைக்கு முன் வருவதாகும். இந்த இரவில் கண்விழித் திருப்பதும், சிவ நாமம் ஜெபிப்பதும் மிகுந்த சிறப்பைத் தரவல்லது. இது, சிவராத்திரி என்னும் ஒரு நாளின் அருட் சக்தியை நாம் பெற்றிட வேண்டி நம் முன்னோர்கள் செய்து வைத்திருக்கும் ஏற்பாடாகும்.

'பகலில் புரியும் பூஜைகள் போதாதா.. இரவிலும் பூஜிக்க வேண்டும் என்னும் இந்த இரவு வழிபாடு எதற்காக? அந்த சிவனுக்கு நம்மை கண்விழிக்கச் செய்வதில் அப்படி என்ன ஆனந்தம்?

- இப்படி சிவராத்திரி கண்விழிப்புக்கு பின்னாலே நிறைய கேள்விகள் எழும்!

சைவர்களுக்கு சிவராத்திரி என்றால், வைணவர் களுக்கு ஏகாதசி! ஏகாதசி அன்றும் இரவு கண் விழித்து, மறுநாள் துவாதசியில் நெல்லிச்சாறும், அகத்திக்கீரைக் கறியும் உண்டிட.. உடம்பில் ஆரோக்கியம் மிகும். இதைச் சொல்லும்போது, 'இந்த நெல்லிச்சாற்றையும், அகத்திக்

கீரையையும் எப்போது உண்டாலும் அது தன் சக்தியை நமக்குத் தரத்தானே செய்யும்?' என்றும் நமக்குள் கேள்வி எழலாம்.

ஆனால், இதனுள் பொதிந்திருக்கும் சூட்சுமமே வேறு.. நமது சான்றோர் பெருமக்களுக்கு எந்த அளவுக்கு காலவெளிக் கணக்கு போடத் தெரிந்திருந்தது என்பதே இதனுள் நாம் உணரப் போகும் உண்மைகளாகும்.

அதற்கு முன்பு, காலம் என்றால் என்ன என்று பார்க்க வேண்டியுள்ளது.

கழிந்துகொண்டே இருக்கும் ஒவ்வொரு நொடிப் பொழுதையும்தான் காலம் என்கிறோம். அது இரவாகவும், பகலாகவும் உள்ளது. பகலைகூட காலை, மதியம், மாலை என்கிற மூன்று பிரிவுகளிலும், இரவைகூட 'முன்னிரவு, நள்ளிரவு, பின்னிரவு' என்றும் பிரித்து அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. ஒருபடி மேலே போய் ஒரு நாளைய பொழுதை இருபத்து நான்கு மணி நேரம் என்றாக்கி, ஒரு மணிக்கு அறுபது நிமிடங்கள், ஒரு நிமிடத்துக்கு அறுபது நொடிகள் என்பது வரை அதைப் பகுத்து வைத்திருக் கிறோம். ஒட்டுமொத்த இருபத்து நான்கு மணி நேரத்துக்கு ஒரு பெயர் சூட்ட விரும்பி அவற்றுக்கு கிழமைப் பெயர் களைச் சூட்டி, வாரத்துக்கு ஏழு நாட்கள், மாதத்துக்கு சாரசரியாக 30 நாட்கள், வருடத்துக்கு 365 நாட்கள் என்றும் நாம் அடையாளப்படுத்தியுள்ளோம்.

இதுதான் உலகம் முழுவதிலும் உள்ள நிலை. இப்படி காலக் கணக்கு இருந்தால்தான் நம்மால் திட்டமிட்டு செயலாற்றவும் முடியும். இல்லாவிட்டால் எதை எப்போது செய்வது என்பதில் பெரிய அளவில் குழப்பம் ஏற்படும். இதனுள் நம்மவர்கள் கண்டிருக்கும் காலவெளிக் கணக்கு இருக்கிறதே.. அதுதான் ஆச்சரியத்தின் உச்சம்!



இந்த வருடக் கணக்கு, மாதக் கணக்கு, வாரக் கணக்கு, நாட்கணக்குக்கு நடுவில் சொட்டுச் சொட்டாய்க் கழிந்தபடி இருக்கும் நொடிகளுக்குப் பின்னாலே வான்வெளி யில் காணப்படும் நட்சத்திரங்களின் ஆதிக்கம் இருப் பதையும், அந்த நட்சத்திர ஆதிபத்தியத்துக்கு நடுவிலே ஒன்பது கோள்களின் குறுக்கீடுகளும் அதனால் ஒவ்வொரு மணி நேரமும் குறிப்பிட்ட கதிர்வீச்சுக்களுடன் திகழ்வதை யும் அவர்கள் உணர்ந்ததுதான் ஆச்சரியம்! அந்தக் கதிர் வீச்சை நாம் துல்லியமாக அறிய நட்சத்திரம், திதி, ஹோரை, யோகம், கரணம் என்கிற அடையாளங்களை அவற்றுக்கு ஏற்படுத்தினார்கள்.

இதையெல்லாம் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே.. அதாவது, இன்றுபோல விதம்விதமான சௌகரி யங்களும், தொலைநோக்குக் கருவிகளும், வானில் பறந்து திரிய ஊர்திகளும் இல்லாத காலத்திலேயே நம்மவர்கள் கண்டறிந்து, அதை பஞ்சாங்கம் எனும் பெயரில் அளித் ததும்தான் பேராச்சரியம்!

அதுமட்டுமல்ல.. ஆண்டுக்கு ஒரு முறை சித்திரை முதல் நாளன்று பஞ்சாங்கம் வாசிப்பது என்று ஒரு பழக் கமும் இருந்தது. அன்று, அடுத்த ஆண்டு பஞ்சாங்கம் வாசிக்கப்படுவதற்கு முன்வரை காலநிலையில் ஏற்படப் போகும் மாற்றங்களை.. எவ்வளவு மழை பெய்யும்? எந்த அளவு தானியங்கள் விளையும்? அரசனின் நலம் எப்படி இருக்கும்? குடிமக்கள் எந்த அளவு நோயின்றி வாழ்வார் கள்? இவ்வளவுக்கும் காரணமான கிரகம் எது.. என்பது முதல் பட்டியல் போட்டு கூறியும் விடுவார்கள்.

இந்த கால ஞானம் வேறு எங்கும் பார்க்கப்பட முடியாது, ஒரு மிகப் பெரிய சிறப்பம்சம். இந்த கால ஞானத்தின் தளத்தில் நின்று சொல்லப்பட்டதுதான் 'ஒரு

ஆள் செய்யாததை.. ஒரு நாள் செய்யும்’ என்னும் சொல வடை!

திரும்ப சிவராத்திரிப் பக்கம் செல்வோம்.

மாசி மாதத்து அமாவாசைக்கு முன்வரும் கிருஷ்ண பட்ச இரவுக் காலமே சிவராத்திரி எனப்படுகிறது. அவ் வேளையில் மனமானது பஞ்சாட்சரம் எனப்படும் சில நாமாவை ஜெபித்தபடியே சிவனின் உருவான லிங்க வடிவை மனதுக்குள் எண்ணிக் கொண்டிருப்பதில் சூட்சு மம் உள்ளது. நாமஜெபம் மட்டுமல்ல.. சிவராத்திரி இரவு காலத்தில் அபிஷேக ஆராதனைகள் மிகச் சிறப்பாக நடைபெறும். அந்த அபிஷேக ஆராதனைகளை நம் கண் ணும் அதன் வழி மனமும் கண்டிடும்போது நம் மனதுக் குள்ளும் அது நிகழ்ந்தபடி இருக்கும். இதனால் ஏற்படும் சிலிர்ப்பு.. இதனால் ஏற்படும் உஷ்ணம்.. இதனால் ஏற்பட்டு ஒட்டுமொத்த தாக்கமும் நம்மைப் பிடித்தபடி இருக்க, மறுநாள் பொழுது விடிகிறது. சரி, இந்த தாக்கங்கள் ஒரு மனித வாழ்வில் அப்படி என்ன பெரிய மாற்றத்தை ஏற்படுத்திவிடும் என்பவர்களுக்கு சிவ புராணக் கதை ஒன்றே சாட்சியாக நிற்கிறது.

ஒரு சிவராத்திரி இரவு வேடன் ஒருவன் காட்டுக் குள் வேட்டைக்குச் செல்கிறான். அவனுக்கு சிவராத்திரி பற்றியோ, சிவபெருமான் பற்றியெல்லாமோ எதுவும் தெரியாது.

வேட்டைக்குச் சென்றவன் ஒரு வில்வ மரத்தின் மேல் ஏறி அமர்ந்து கொண்டான். மரத்தில் இருந்து கீழே பார்க்க முடிந்த தூரத்தில் ஒரு நீர்ச்சுனை. அந்த நீர்ச் சுனைக்கு மிருகங்கள். நீர் அருந்த வரும்போது அவை களை தன் அம்பால் தாக்கி வீழ்த்திவிட வேண்டும் என்பது அவன் எண்ணம்.



மரத்தின் மேல் அமர்ந்திருக்கும்போது தாகம் எடுத் தால் குடிப்பதற்கு தோதாக ஒரு சுரைக்குடுக்கையில் அந்த சுனைநீரை நிரப்பிக் கொண்டுதான் அவன் மரத்தின் மேல் ஏறியிருந்தான். அவன் அமர்ந்திருந்த மரக்கிளைக்கு நேர் கீழே ஒரு சிவலிங்கம் ஒன்றும் இருந்தது. அதை அவன் பார்க்கவில்லை!

கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டிருந்தவன் எதிரில், முதல் ஜாமத்தின்போது ஒரு மான் அந்த சுனைக்கு நீர் அருந்த வந்தது. இவனும் அதை வீழ்த்த வேலையும், அம்பையும் எடுத்தான். அப்போது சுரைக்குடுவை அசைந்து ஒரு கையளவு நீர் கீழேயிருக்கும் சிவலிங்கம் மேல் சிந்தி யது. அந்த மரக் கிளை ஆடியதில் ஒன்றிரண்டு வில்வ இலைகளும் உதிர்ந்து அந்த லிங்கம் மேல் அர்ச்சிப்பது போல் விழுந்தன.

அதேசமயம், அந்த வேடனை மானானது பார்த்து விட்டது. அது உடனேயே துள்ளிக் கொண்டு ஓடாமல் அந்த வேடனிடம் அவகாசம் கேட்டது. தன்னை எதிர் பார்த்து காத்திருக்கும் குட்டிகளுக்கு உணவிற்கு ஏற்பாடு செய்துவிட்டால் திரும்ப வந்து அவன் அம்புக்கு இரை யாகத் தயார் ஆவதாக சொன்னது. வேடன் நம்ப மறுத்த போது ‘நான் வாய்மை தவற மாட்டேன்’ என்று சத்தியம் செய்தது. அந்த வேடனும் அதை போகவிட்டான்.

அடுத்த இரண்டாம் ஜாமத்தில் இன்னொரு மான்.. முன்பு போலவே அவன் சுரைக்குடுவையில் இருந்து நீர் சிந்தி, லிங்கம் அபிஷேகத்துக்கு ஆட்பட்டது. வில்வ இலைகளும் உதிர்ந்தன. அந்த மானும் அவனிடம் அவகாசம் கேட்டுப் பிரிந்து சென்றது.

இப்படியே மூன்று, நான்கு என்று நான்கு ஜாமத்திலும் மான்கள் வந்து அவகாசம் கேட்டுச் சென்றிட.. அவனும் அவனை அறியாமல் லிங்கத்துக்கு சிவராத்திரி இரவில் புரிய வேண்டிய அபிஷேக ஆராதனையைப் புரிந்தவன் ஆனான்.

மறுநாள் காலை..

அந்த மான்கள் வாக்குக் கொடுத்தது போலவே திரும்பி வந்து தங்கள் உயிரைத் தர தயாராக நின்றன. ஆனால், வேடன் உள்ளத்திலோ பெரும் மாற்றம். மிருகங்களே சொன்ன சொல்லில் இவ்வளவு தூரம் நின்றால், மனிதன் நான் எவ்வளவு பெரிய மனதோடு நடந்துகொள்ள வேண்டும் என யோசித்தான்.

பிறகு, ''மான்களே! நீங்கள் செல்லலாம்.. நான் உங்களை மட்டுமல்ல... இந்த வேட்டைத் தொழிலையே விட்டுவிடப் போகிறேன். ஒரு உயிரைக் கொன்று தன்னுயிரைக் காத்துக் கொள்வது சரியான மனிதச் செயல் அல்ல. நீங்கள் செல்லலாம்..'' என்றான்.

அடுத்த கணமே சிவபெருமான் அவன்முன் தோன்றி அவனையறியாது செய்த அபிஷேக ஆராதனைக்ககாக மட்டுமன்றி, அவனுக்குள் தோன்றிய கருணைக்குப் பரிசாக அந்த வேடனுக்கு முக்தியை அளித்தார்.

அதாவது, சிவராத்திரி இரவானது ஒரு வேடனுக்குள் கருணையை உருவாக்கி முக்தியையும் அவன் அடையக் காரணமாக இருந்தது. இந்தக் கதையில் உள்ள சூட்சுமப் பொருளோ வேறு..

அன்றைய இரவுப்பொழுது வேட்டையாடும் உள்ளம் கொண்டவனைக்கூட மாற்ற வல்லதாகவும், அதனால் அந்தக் கருணையால் வாயில்லா ஜீவன்களுக்குக்கூட வாழ்க்கை வதையின்றி நேர்ப்படுவதையும் நமக்கு உணர்த்துகிறது.



இறை நினைப்பென்றால் என்னவென்றே அறியாத வேடுவனே இத்தனை பெரிய சிறப்பைப் பெற்றிருக்கிறான் என்றால், அந்த நாளின் சிறப்பை உணர்ந்து கொண்டாடுபவர் பின் வாழ்வில் எத்தனை சிறப்புகள் ஏற்படும் என்பதையே நாம் உணர வேண்டும்.

இதைத்தான் ஆள் செய்யாததை நாள் செய்யும் என்றனர்.

பொன் கிடைத்தாலும், புதன் கிடைக்காது என்பதும் ஒரு சூட்சுமமான பழமொழிதான்.

ஒருவர் ஜாதகத்தில் புதன் என்னும் கிரகம் நல்ல நிலையில் இருக்க வேண்டும். அப்போதுதான் அவர் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்க முடியும். பொன் என்பது இங்கே பொன்னன் என்றாகி, குரு என்னும் கிரகத்தைக் குறிக்கும். கல்வி, கேள்விகளை நமக்கு அளிப்பவர் குருதானே! அவர் நமக்கு நல்லவிதமாக கிடைத்திட அவர் எவ்வளவுதான் சொல்லித் தந்தாலும் புதன் கிடைக்காத நிலையில், நன்றாக இல்லாத பட்சத்தில் நம்மால் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்க முடியாது. அப்படி அது கிடைத்துவிட்டால் அது பொன்னைவிடப் பெரியது என்பதை உணர்த்தும் பொருளில்தான் அப்படி ஒரு சொலவடையை சொல்லிச் சென்றார்கள்.

* * *

7

## காரணமில்லாமல் காரியமில்லை..

வீட்டை உத்திரம்தான் தாங்கிப் பிடித்தபடி உள்ளது. அதேபோல, மனித வாழ்வில் அவர்களது அகமாகிய வீட்டைத் தாங்கிப் பிடிக்கும் உத்திரம் திருமணம்தான்!

மனித வாழ்வில் ஆணும், பெண்ணும் இல்வாழ்க் கைக்குள் கருத்தொருமித்து ஒன்றுசேரும் இந்த சுபநிகழ்வு, திருப்பம் வாய்ந்தது. ஒரு ஆணையும், பெண்ணையும் முழுமையானவர்களாக்குவதும் இந்த திருக்கல்யாண நிகழ்வுதான். இல்லற இன்பம் தந்து அதன் காரணமாக சந்ததிகளைத் தந்து ஒரு மனிதனை வாழ்வாங்கு வாழ வைக்கிறது!

இப்படிப்பட்ட இல்லறத்தை நமது சான்றோர்கள் ஆயிரம் காலத்துப் பயிர் என்றார்கள். உண்மைதானே?

ஆணும், பெண்ணும் திரியும் நெருப்பும் போன்ற வர்கள். தீபம் போல் எரிந்தால் அதுவே சிறப்பு.. மாறாக, கூரைத் தீ போல எரிந்து தானும் சாம்பலாகி, சூழ்ந்த நிலையில் கிடக்கும் அவ்வளவையும் எரித்து சாம்பலாக் கினால் யாருக்கு என்ன நன்மை?

எனவேதான், திருமண விஷயத்தில் நம் சான்றோர்கள் அநேக நியதிகளை உருவாக்கினார்கள். இவற்றை சற்றே ஊடுருவிப் பார்த்தால், நம் சான்றோர்கள் எவ்வளவு பெரிய மேதைகள் என்பது புரியும்.

ஆயிரங்காலத்துப் பயிர் என்று அவர்கள் சொன்ன தற்கு ஆயிரம் காரணங்கள் உண்டு. உண்மையில் நமக்கு



வாய்த்த கணவனோ, இல்லை மனைவியோ உடல்நல மின்றியும், மனநலமின்றியும் இருந்தால், நம்மால் கருத் தொருமித்து வாழ முடியுமா? அது விவாகரத்தில்தானே முடியும்! இடையில் பிள்ளைகளும் பிறந்துவிட்டால், அவர்கள் நிலை? இப்படி ஒரு சூழலை யோசித்துத்தான் பொருத்தம் பார்ப்பது எனும் சம்பிரதாயம் மணவாழ்வைத் தொடங்குவதில் பெரும் பங்கு வகிக்கிறது.

இந்தப் பொருத்தம் நிறம், உயரம், பருமன் சார்ந்தது மட்டுமல்ல... குணநலம், கல்வி, செல்வம் என்கிற மற்ற நலங்கள் சார்ந்ததும்கூட! எனவேதான், முதலில் ஜாதகம் பார்ப்பது, பொருத்தம் இருப்பின் பெண் பார்ப்பது, அதன் பின் இருவருக்கும் விருப்பம் என்றால் நிச்சயித்துக் கொள் வது, பின் நல்ல முகூர்த்த நாளில் இணைத்து வைப்பது என்று அதனுள் படிப்படியாகச் சென்றார்கள்.

அதிலும், திருமணச் சடங்கிலும்கூட மாப்பிள்ளை அழைப்பு என்று ஒன்றை வடிவமைத்ததுதான் நம்மவர் களின் நுட்பத்துக்கு பெரும் சான்று. ஊர் பார்க்க ராஜா போல மாப்பிள்ளையை அழைத்து வருவது என்பது இந்த சடங்கில் மேலாகத் தெரிவது.. ஆனால், உள்ளாகத் தெரிவது வேறு!

அந்த மாப்பிள்ளை ஏற்கெனவே திருமணம் ஆனவ னாகவோ.. களவொழுக்கம் உள்ளவனாகவோ இருந்தால், தெருவில் வருவதற்குத் தயங்குவான். இதுவே அவன் எப்படிப்பட்டவன் என்பதை காட்டிக் கொடுத்துவிடும். அதேசமயம், சிறந்தவனாக இருக்கும்பட்சத்தில் ‘இவன் தான் இனி என் மாப்பிள்ளை’ என்று ஊருக்கே அறிமுகப் படுத்தும் படலமாக அமைந்துவிடுகிறது.

அடுத்து, திருமணச் சடங்குகள்! இதில் அம்மி மிதிப்பது, அருந்ததி பார்ப்பது, மேடை வலம்வருவது, அட்சதைகளில் ஆசீர்வதிக்கப்படுவது என்று அடுக்கடுக் காக இணைப்பு விஷயங்கள்.

இதனைத் தொடர்ந்து ஊர் கூட்டி போடப்படும் விருந்து.. வயிறார உண்டபின் தாம்பூலம் தரித்துக்கொண்டு வந்தவர்கள் சிவந்து நிரம்பிய வாயில், நல்ல மூச்சுக் காற்றோடு வாழ்த்துவது என்பது இதன் உச்சம்!

இதோடு திருமணச் சடங்கு முடிந்து விடுவ தில்லை..

நள்ளிரவில் சாந்தி முகூர்த்தம் என்று ஒரு சம்பவம்! அந்த முகூர்த்த காலத்தில் தாம்பத்திய உறவுகொள்ளும் போது கிட்டும் சிலிர்ப்பும், பரவசமும் ஒருமுறைதான் கிட்டும். அதன்பின் அந்த தம்பதிகளுக்கே அது பழகி விட்ட ஒரு சுகமாகத்தான் தெரியும். இந்த முதல் பரவச இனபத்தில் விளையும் முதல் காப்பத்தில் உருவாகும். வாரிசு, மிகுந்த உடல் ஆரோக்கியமும், மனவளமும் கொண்ட ஒரு வாரிசாக இருக்கும் என்பதுதான் குறிப்பிடப் பட வேண்டிய அழுத்தமான உண்மை!

இதற்குப் பின் பிறக்கும் பிள்ளைகள் சவலைகளாக இருக்கலாம். சுப அசுப வேளைகளில் பிறக்கவும் வாய்ப்பு கள் உள்ளது. ஆனால், முறைப்படி திருமணம் நடந்து, சாந்தி முகூர்த்தம் நடந்து அதில் முதல் முதலாக பெண் ஸ்பரிசம் ஏற்பட்டு, பின் நிகழ்ந்த தாம்பத்தியத்தால் பிறந்த பிள்ளையிடம் நிச்சயமாக சுபத்தன்மை மிகுதி.

அதனாலேயே, பெற்றவர்களுக்கு கர்மகாரியங்கள் செய்வது முதல், திவச தர்ப்பணங்கள் செய்கிற கடமை



வரை மூத்தவர்களுக்கானதாக சான்றோர்கள் வகுத்து விட்டுப் போயிருக்கிறார்கள்.

இன்று, மனதைப் பதற்றமும், சபலமும் படுத்தும் திரைப்படத் தொலைக்காட்சி காட்சிகள் வீடு தேடி வருகின்றன. காலமாற்றம், விஞ்ஞான வளர்ச்சி, மீடியாக் களின் தாக்கம், பலவிதமான உணவுப் பழக்கங்கள்.. இதெல்லாம் மேற்கண்ட வலுவான அடிப்படையை மாற்றிவிட்டன. தனிநபர் சுதந்திரம் என்கிற பெயரில் கட்டுப்பாடுகள் தொலைந்துவிட்டன. பழமை என்று நல்லவைகளைப் புறந்தள்ளிவிட்டோம். இதன் காரண மாக சுபமான யோகங்களுடன் கூடிய மூத்த குழந்தை ஜனனம் என்பதும் அமைந்தால் உண்டு என்றாகிவிட்டது.

ஆனால், நம் சான்றோர்கள் இந்த மண்ணுக்கு வரும் ஒவ்வொரு உயிருமே பிரபஞ்ச சக்தி, ஆத்ம சக்தி, ஸ்தூல சக்தி என்கிற சக்திகளுடன் பிறந்து வாழ்வில் சிறக்க வேண்டும் என்று கருதியே கால ஞானத்தோடு திருமணம் என்கிற ஒன்றை வடிவமைத்தார்கள்.

இன்று ஒரு குழந்தைக்கு மேல் பெற்றுக்கொள்ள அஞ்சுகிறார்கள். திருமணமாகி மெல்ல பிள்ளை பெற்றுக் கொள்ளலாம்.. எங்கே போய்விடப் போகிறது என்று தங்கள் ஆரோக்கிய தாம்பத்தியத்தைக் கழிவுப்பொருளாக்கி விடுகின்றனர். அதன் பிறகோ பலருக்கு பிள்ளையே பிறப்பதில்லை. பின்னால் பிறப்பதும் சவலையாக பல குறைபாடுகளுடன் உள்ளது.

இன்று, குழந்தைகளுக்கு சோறு ஊட்டுவது ஒரு சவாலான விஷயமாகி விட்டது. தாய்ப்பாலும் சரியாகச் சுரப்பதில்லை. சத்தான உணவுகள் பிள்ளைகளுக்குப்

பிடிப்பதில்லை. அவர்களுக்கு பிடித்த உணவுகள் பெரும் கேடு விளைவிப்பனவாக உள்ளன. எடுத்ததற்கெல்லாம் தடுப்பூசிகள்! பத்து வயதுக்கு உள்ளாகவே ஒரு பிள்ளைக்கு மருந்து வடிவில் ஏராளமான ரசாயனங்கள் சேர்ந்துவிடுகின்றன.

அந்த நாளில் பிள்ளைகளைக் குளிர்ப்பாட்டுவதில், தாய்ப்பால் ஊட்டுவதில், எண்ணெய் தேய்த்து விடுவதிலேயே ஊட்டமும், உற்சாகமும் பெற்றுவிடும். அதோடு, உள்ளுக்குள் சினைப்பையைத் தூண்டிவிடுவதற்காகவே காது குத்தும் பழக்கத்தை கொண்டு வந்தார்கள்.

மூக்கு குத்துவதும், காது குத்துவதும் ஒருவித வர்ம முறை. இதுதான் பெண்ணைப் பூரணமான பெண்ணாகவும், ஆணைப் பூரணமான ஆணாகவும் ஆக்குகிறது. காது நரம்புகளுக்கும், கர்ப்பப்பைக்கும், சினை உறுப்புகளுக்கும் தொடர்பு இருக்கிறது! காலுக்குப் போடப்படும் கொலுசு, கைக்குப் போடப்படும் கங்கணம் என்று எல்லாவற்றுக்குப் பின்னாலும் ஓர் ஆரோக்கிய ரகசியம் இருக்கிறது.

இந்த செயல்பாடுகளைகூட பெண்ணைச் சார்ந்த சகோதரன் - மாமன் உறவு கொண்டு வந்து செய்ய வேண்டும் என்று நியமனம் செய்தனர். தன்னோடு பிறந்த சகோதரிக்கு ஒரு நல்ல துணை கிடைத்து, அவள் முழுமையான பெண்ணாகி பிள்ளையும் பெற்றுவிட்டதை அந்த பிள்ளையை மடியில் தாங்கும்போது மாமன்காரன் ஆத்மார்த்தமாக உணரத் தொடங்குகிறான்.

ஒரு சகோதரனாக சகோதரியை வாழவைத்து விட்டதன் அடையாளம்தானே அந்த பிள்ளை? அந்தப்



பிள்ளையை அவன்தான் சீராட்ட வேண்டும் என்பதற்கே அந்த சடங்கு. அதனால்தான், 'மாமன் சீர் என்றால் அது மாடி மனைக்கும் மேல்' என்று ஒரு சொலவடை பழக்கத்தில் வந்தது. இதே பொருளில்தான் அத்தை சீரையும் வடிவமைத்து, 'காலுக்குக் காப்பை அத்தை இட வேண்டும்' என்றனர்.

காது குத்தப்பட்ட குழந்தையை காலில் காப்புடன் பார்க்கும் ஒருவருக்கு யாரும் கூறாமலே இந்த குழந்தைக்கு தாய், தந்தை மட்டுமல்ல.. மாமன் இருக்கிறான்; அத்தை இருக்கிறாள். இது சீராட்டப்பெற்ற பிள்ளை.. இத்தனை பேர் இருந்திருக்கும்போது திருமணம் மட்டும் தப்பும், தவறுமாக நடந்திருக்குமா? அதுவும் நாள் பார்த்து, ஊர் பார்க்க மட்டுமே நடந்ததாக இருக்க முடியும் என்பது தெரிந்துவிடும்.

இப்படி கட்டுக்கோப்பான அர்த்தம் செறிந்த, மிக திடமான ஆரோக்கியம் சார்ந்ததுதான் ஓர் இந்துவின் திருமணம்.

மனிதர்கள் வரையில் இந்த சம்பிரதாயங்கள் சரி.. இறைரூபங்களுக்கு இடையே கல்யாணம் செய்து பார்ப்பது என்னும் திருக்கல்யாண வைபவம் எதற்கு?

பங்குனியில் முருகனுக்கும் தெய்வானைக்குமான கல்யாண உற்சவமாக ஒரு புறமும், மறுபுறம் அநேக பெருமாள் கோயில்களில் குறிப்பாக திருவரங்கத்தில் ரங்கநாதருக்கும், ரங்கநாயகி தாயாருக்கும் இடையிலான கல்யாண உற்சவமாக பங்குனி உத்திரத்தன்றும் நடைபெறுகிறதே, ஏன்?

கடவுளுக்குக் கூடவா திருமணம்?

மனிதன் இந்த மாய உலகில் நெறிபிழன்று வழி தவறிவிட வாய்ப்புகள் அதிகம். ஆகையாலே திருமணத்தை ஒரு அரிய நெறிமுறைப்படுத்தி நம்மவர்கள் வடிவமைத் தார்கள். கடவுளர்களுக்கு எதற்கு இந்த நடைமுறை? எதற்கு அவர்களுக்கும் திருக்கல்யாண வைபவச் சடங்கு கள்.. இதனால் மானுடத்துக்கு ஆகப் போவது என்ன?

அடுத்த அத்தியாயத்தில் சிந்திப்போம்...

***



8

## மனிதனை முழுமையாக்கும் திருமணங்கள்!

என்னுடைய நண்பர் ஒருவருக்கு ஒரு தங்கை இருந் தாள். அவளுக்குத் திருமணம் செய்து வைக்கும் கடமை அவருக்கு இருந்தது. நல்ல நெறிப்பாடுள்ள இந்துக் குடும் பங்களில் சகோதர, சகோதரிகள் கிட்டத்தட்ட சமவயதில் இருக்கும்போது மூத்தவனாக ஆண்பிள்ளையே இருந் தாலும் இளைய வயதில் உள்ள தங்கைக்கு திருமணம் முடித்த பிறகுதான் மணம் செய்துகொள்வார்கள். இது ஒரு நாகரிகம்!

நண்பரும் இந்த நாகரிகம் அறிந்தவர். ஆனால், அவர் தங்கைக்கோ ஜாதகப் பொருத்தமே அமையவில்லை.

இந்த இடத்தில் ஜாதகம் என்பதைப் பற்றியும், ஓர் இந்து வரையில் அது எந்த அளவுக்கு முக்கிய பங்கு வகிக் கிறது என்பதையும் பார்த்துவிடலாம்.

இன்று ஜாதகம் பார்ப்பதை ஒரு பிற்போக்குத் தனமாக கருதி ஏளனம் செய்பவர்கள் பெருகிவிட்டார்கள். ஆனால், ஜோதிடம் என்பது கணிதமாகும். அதாவது கணக்கு!

இந்த உலகிலேயே கணக்கு ஒன்றிடம்தான் மாறாத நியாயம் உள்ளது. எண்கள் வரையில் வகுக்கப்படுவது, கூட்டப்படுவது, பெருக்கப்படுவது, கழிக்கப்படுவது என்கிற நான்கு நிலைப்பாடுகள்தான் அடிப்படை. இதை எங்கே யார் செய்தாலும் விடை மாறாமல்தான் வரும்! வந்தாக வேண்டும். அதனாலேயே எண் அளவை உலகம் முழுக்க ஒன்றாகவே உள்ளது.

ஜாதகமும், ஜோதிடமும் இந்த எண் கணக்குக்குள் தான் உள்ளது.

இந்த உலகில் பிறந்த எவருக்கும் அவர் பிறந்த நேரம், பிறந்த தேதி, பிறந்த இடம்.. இந்த மூன்றையும் கொண்டு அவர் ஆயுள் காலம் எவ்வளவு, அதில் அவர் எப்படியெல்லாம் இருப்பார் என்பதை மட்டுமல்ல, அவரது முன்ஜென்மத்தையேகூட கணக்கு போட்டுக் கூறமுடியும்.

ஆனால், அப்படி கணக்கு போடுவது என்பதில்தான் ஒரு ஜோதிடரின் அறிவுக் கூர்மை, அவரது பிரபஞ்ச ஞானம், அவரது அருள் அம்சம் ஆகியவை உள்ளது. அது கணக்காக இருப்பதாலேயே சரியாகக் கூட்டாதபோது, அல்லது சரியாகக் கழிக்காதபோது விடை தவறாக வந்து ஜோதிடர் சொன்னது நடக்காமல் போகிறது. தவறு ஜோதிடர் மேல்தான்.. ஜோதிடம் மேல் அல்லவே அல்ல!

என்றைக்கு ஜோதிடம் தொழிலாக மாற்றப்பட்டதோ அப்போதே அது தன் சூட்சுமத்தை ஒளித்துக் கொண்டு விட்டது. இதனாலேயே மேலோட்டமான பலாபலன்களை கூற முடிகிறது. துல்லியமாக கூற முடிவதில்லை. ஒருவர் இந்த மண்ணில் அதிகபட்சம் எழுபதில் இருந்து எழுபத்தி இரண்டு வருடங்கள் வாழ்வார் என்று கூறுபவர்களால், இந்த நாளில் இந்த நேரத்தில் அவர் உயிர் பிரியும் என்று கூற முடியவில்லை.

ஆனால், அப்படிக் கூற முடிந்தவர்களும் இருந்தார்கள். இருக்கிறார்கள்! இவர்கள் எக்காரணம் கொண்டும் தங்களை காலஞானம் மிக்க ஜோதிடர்களாக வெளிக் காட்டிக் கொண்டதே இல்லை. 'மரணம் ஒரு மனிதனின் வாழ்நாளைக் கணக்கெடுத்து அவன் இவ்வளவு சிரிப்பான், இவ்வளவு அழுவான் என்று கூறுவதால் எதுவும் ஆகி



விடப் போவதில்லை.. எதுவும் மாறிவிடப் போவதில்லை. நடப்பது நடந்தே தீரும்' என்பதே இவர்கள் தீர்மானமான கருத்து.

பிறகு எதற்கு ஜாதகம் கணித்துக் கொண்டு என்ற கேள்வி எழுகிறதல்லவா?

அங்கேதான் உலகில் வேறு எங்கும் இல்லாத ஒரு சிறப்பை நமது இந்து மதம் பெற்றிருக்கிறது.

காலஞானம் பெற்ற நமது முன்னோர்கள் இந்த ஞானத்தால் இந்த மண்ணில் ஒவ்வொரு உயிரும் நல்லவிதமாக வாழவேண்டும் என்று விரும்பிய அந்த ஞானத்தை ஜோதிட நூல்களாக எழுதி வைத்துவிட்டுச் சென்றார்கள்.

குறிப்பாக, ஒரு மனிதன் முழுமையான மனிதனாவதே திருமணத்திற்குப் பிறகுதான். ஒரு பெண் முழுமை அடைவது, தாய்மைப்பேறு அடைவதில்தான்! இந்த நிகழ்வுக்கு அடிப்படையே திருமண பந்தம்தான்.

இந்த பந்தத்தை 'ஆயிரம் காலத்துப் பயிர்' என்று அதனாலேயே கூறினர். எத்தனை பேருக்கு இந்த ஆயிரம் காலத்துப் பயிர் என்பதற்குப் பொருள் தெரியும். ஏதோ எல்லோரும் கூறுகிறார்கள், நாமும் கூறுவோம் என்றுதானே கூறிக் கொண்டிருக்கிறோம்.

அந்தப் பழமொழியை கூர்ந்து பாருங்கள்! இதை நாம் நம்மை வைத்தேகூட விளங்கிக் கொள்ளலாம்.

நாம் இன்று இருக்கிறோம் என்றாலே ஒரு தாய், தந்தை இருக்கப் போய்தானே வந்தோம்? அவர்களுக்கும் ஒரு தாய் தந்தை இருக்கப் போய்தானே அவர்களும் வந்தனர். இப்படியே நூல் பிடித்துக் கொண்டே இந்த

உலகம் தோன்றிய காலகட்டத்துக்கே போய்விட முடியும் அல்லவா?

என்றால், நாம் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக விடு படாத ஒரு தொடர்பில் வந்தவர்கள்தானே? நாமே ஒரு ஆயிரம் காலத்துப் பயிர்தானே?

இதில் நம்மில் ஒருவருக்கு பிள்ளைப்பேறு இல் லாமல் போகிறது. அல்லது திருமணமே நிகழாமல் அவர் பிரம்மச்சாரியாகவே வாழ்ந்து முடிகிறார் என்னும்போது அந்த நீண்ட தொடர் பயணம் ஒரு முடிவுக்கு வந்துவிட்ட தாகத்தானே பொருள்?

எனவேதான், ஆணும், பெண்ணும் இணையும் திருமண பந்தத்தை நம் சான்றோர்கள் மிகப் பெரிய ஒரு சம்பவமாக கருதினார்கள். அதற்கான காலத்தை, பொருத் தத்தை முதன்மையாக கருதினார்கள்.

ஒரு யுத்தத்தால் நாடே அழிகிறது. சில காலங்களில் அந்த நாடே திரும்பி எழுந்துவிடலாம். பொன்னும், பொருளும் களவு போய்விடுகிறது. அதை காலத்தால் சம்பாதித்துக் கொண்டுவிடலாம். ஆனால், மனித உறவுக் குள் தவறு நிகழ்ந்துவிட்டால் அது தொடர்ந்துகொண்டே இருக்கும்.

நாம் பெற்றிருக்கும் இந்த உடம்பு நாம் திட்டமிட்டு வடிவமைத்துக் கொண்டது இல்லை. இது நம் பெற்றோர் களின் தயாரிப்பு. அவர்கள் உடம்பில் சர்க்கரை நோய் இருந்தால் நம் உடம்புக்குள்ளும் அது தொடர்ந்து வந்திருக் கும். அவர்களுக்குக் கணக்குப் பாடம் சரியாக வராது என்றால் அந்த பாதிப்பு நமக்கும் தொடரும். அவர்களது உடல் சார்ந்த, மனம் சார்ந்த விஷயங்கள் மட்டும் அல்ல.. அவர்களது கர்மங்களும்.. அதாவது, பாவ புண்ணியங் களும் நம்மைத்தான் வந்து சேரும். இதையே 'மாதா பிதா பாவம் மக்களைச் சாரும்' என்றனர்.



இதனால்தான் ஒரு வகுப்பில் ஓர் ஆசிரியர் நூறு பேருக்கு பொதுவாக பாடம் நடத்தும்போது அது அப்படியே நூறு பேரிடம் முழுமையாக போய்ச் சேர்ந்துவிடுவ தில்லை. கிரகித்துக் கொள்ளும் ஆற்றல் ஆளுக்கு ஆள் வேறுபடுவதால் ஒவ்வொருவரும் மாறுபட்ட மதிப்பெண் களை எடுக்கிறோம்.

ஒரு மனிதன் என்பவன் பார்ப்பதற்கு தனியான வனாக கண்களுக்குத் தெரியலாம். ஆனால், அவனை நமது மதம் ஒரு பரம்பரைச் சங்கிலியின் ஒரு கண்ணியாகத் தான் பார்க்கிறது. அப்படிப் பார்த்தால்தான் அவனை நிம்மதி யாக வாழவைக்கவும் முடியும்.

எனவேதான், பிறப்பு முதல் மரணம் வரை அது நியமங்களை உருவாக்கியது.

ஒரு பெண் கருவுற்றுவிட்டாள் என்றாலே அவள் வரையில் நியமங்கள் தொடங்கி விடுகின்றன. வளைகாப் பும், சீமந்தமும் அதனுள் மிகப் பெரிய பங்கினை வகிக் கின்றன.

ஐந்தாம் மாதம் நிகழ்த்தப்படும் வளைகாப்பு, வயிற் றில் வளரும் குழந்தைக்கு கேட்கும் திறனை அதிகரிக்கச் செய்யும். இரு கைகளும் வயிறு அருகே அசையும் போதெல்லாம் அந்த சிணுங்கல் ஒலி குழந்தை காதுக்கு சென்று சேர்கிறது. அதுமட்டுமல்ல.. அந்த வளையல் களை ஒரு காப்பாக சுமங்கலிப் பெண்கள் தங்கள் ஆசிகளோடு அணிவகுத்திருப்பார்கள். இதனால் கண் களுக்கு புலனாகாத தீய சக்திகள் அந்த பெண்ணை

நெருங்கவிடாதபடி அந்த சப்தமே அவளுக்கும் ஒரு காப்பு ஆக இருக்கிறது.

அடுத்து, சீமந்தம். இதனை ஸ்ரீ மகவின் அந்தம் என்று பிரித்தும் கூறலாம். ஆதி என்றால் தொடக்கம். அந்தம் என்பது முடிவு.

அதாவது, ஒரு தாயின் வயிற்றில் தோன்றிய மக வானது எட்டாம் மாதத்தில் முழுவடிவை எட்டி விடும். மீதியுள்ள ஒன்பதாம் மாதத்தில் அது உள்ளுறுப்புகளுக் கான பலத்தை தாயிடம் இருந்து எடுத்துக்கொள்கிறது. அடுத்த ஒன்பது நாட்களில் அது இந்த பூமிக்கு குழந்தை யாக தாயின் வயிற்றை விட்டு வந்துவிடுகிறது. இந்த ஒன்பதாம் மாத கால கட்டத்தில் ஒரு கர்ப்பவதி இப்படித் தான் இருக்கவேண்டும் என்று காலஞானத்தோடு திட்ட மிட்டதும் நமது இந்து சமயத்தில் மட்டும்தான்!

இப்படி கருத்தரித்தவளுக்கே ஒரு பெரும்கணக்கு இருக்கும்போது அதற்கு அடிப்படையான திருமண பந்தம் என்பது எத்தனை பெரிய கணக்கைக் கொண்டிருக்க வேண்டும். இப்படிப்பட்ட பந்தத்திற்கு ஒரு ஆணுக்கு ஏற்ற துணை யார் என்பதையும், பெண்ணுக்கு ஏற்ற துணை யார் என்பதையும் அவரவர் ஜாதகங்களே கூற முடியும்.

இந்த ஜாதகம்தான் என் நண்பர் தங்கை வரை யிலும் தவறாக இருந்து திருமணம் நல்லவிதமாக நடக்காத படி தடுத்துக் கொண்டே வந்தது. இப்படி இன்றைக்கு வீட்டுக்கு ஒருவராவது இருக்கக் கூடும்.

இவர்களுக்கெல்லாம் ஒரு தீர்வைத் தருவதுதான் தெய்வத் திருமணங்கள்! எப்படி?



9

## கடவுளுக்கு ஏன் கல்யாணம் செய்கிறோம்?

ஒருவரது ஜாதகத்தில் ஏழாமிடம் எனப்படும் சப்தமஸ்தானத்தை வைத்தே அவரது திருமண வாழ்க்கை தீர்மானம் ஆகிறது. இந்த இடத்தில் சுபகிரகங்கள் இருந் தால் ஒருவிதமாகவும், பாவகிரகங்கள் இருந்தால் ஒருவித மாகவும் அவரது திருமண வாழ்க்கை அமையும்.

அந்த கிரமம் நாம் பிறந்த நேரத்துக்கு ஏற்ப நம் மீது ஆதிக்கம் செலுத்துகிறது. இதை விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்க முடியாது. ஆனால், நமது கடந்த கால வாழ்க்கை யைத் திரும்பிப் பார்த்து புரிந்துகொள்ளலாம். குறிப்பாக, நம் எண்ண ஓட்டத்தில் கிரகங்கள் செலுத்தும் ஆதிக்கத்தை நன்றாக உணரலாம். ஒருவரது வாழ்நாளில் சந்திர திசை வரும்போதும், மற்ற திசைகளில் சந்திர புக்தி நடக்கும் போதும் அவரது எண்ணங்கள் ஸ்திரமாக இருக்காது. மனது அலைபாயும்.

கிரகங்கள் நம்மை வழிநடத்துவது நாம் பிறந்த நேரம் மற்றும் அந்த நேரத்தில் நிலவிய நட்சத்திர ஆதிக்கம்.. இவற்றைப் பொறுத்ததே. இதை ஒருவர் நம்புவதும் நம்பா ததும்கூட அவரவர் ஜாதகப்படியேதான் நடக்கும்.

சுருக்கமாய்க் கூறுவதானால், ஒவ்வொரு பிறப்பும் அச்சடித்து முடிக்கப்பட்டுவிட்ட ஒரு புத்தகம் போலத்தான். அதில், இருக்கும் எழுத்துப் பிழைகளைத் திருத்த முடியாது. இதில் சிலருக்கு சில பக்கங்கள் காலியாக இருக்கும். அதில் விருப்பம்போல எழுதிக் கொள்ளலாம். அதுவும் அந்தப் பக்கம் உள்ள நீளத்திற்குத்தான்.

இது ஒரு கசப்பான உண்மை. இந்த உண்மைக்கு தித்திப்பான பொய் எவ்வளவோ மேலானது. 'கடுமை யாகப் பாடுபடு.. நீ மேலே போய்விடலாம். இதைச் செய், உன் கஷ்டம் போய்விடும்..' என்பதெல்லாம் தித்திப்பான பொய்கள்.

கூர்ந்து கவனித்தால் இது எவ்வளவு மாய்மாலம் என்பது தெரியவரும். வியர்வை ஆறாய்ப் பெருகப் பாடு படும் ஒருவரால் ஒரு குடிசையைக்கூட வாங்க முடியாத நிலையையும் பார்க்கிறோம். மேனி அலுங்காமல் வாழும் ஒருவர் கோடி கோடியாய் சம்பாதிப்பதையும் பார்க்கிறோம்.

இவ்வளவு விஸ்தாரமாக பேசுவதற்குக் காரணம், கோள்களின் சக்தி எப்படிப்பட்டது என்பதை உணர்த்தவே..

இந்தக் கோள் ஏழாம் இடத்தில் சரியாக அமை யாதபோது தோஷம் உருவாகிறது. இந்த தோஷம் பல வகைப்பாட்டில் உள்ளது. நித்ய தோஷம், தற்காலிக தோஷம், குறிப்பிட்ட விஷயத்தில் மட்டும் படுத்தி எடுக்கும் தோஷம் என்று இதை வகை பிரிக்கலாம்.

எது எப்படியோ களத்திர ஸ்தானம் கெட்டுப் போய் இருந்தால் உரிய காலத்தில் திருமணம் நடக்காது. தாம்பத் திய இன்பத்தை சரியாக அனுபவிக்கும் காலம் முழுக்கத் திருமணம் என்பது கனவாகவே இருக்கும். 38-ல் இருந்து 40 வயதில் மெல்ல அந்த தோஷம் விலகியபிறகு சிலருக் குத் திருமணம் நடக்கும். சிலருக்கு சரியான காலத்தில் நடந்தும் கணவன், மனைவி கருத்து வேறுபாடு கொண்டு பிரிந்து இருப்பார்கள். வேறு சிலருக்கோ கணவன் சூதாடி யாக, குடிகாரனாக இருப்பான். எல்லாமே நாம் முற்பிறப்பில் செய்த தீவினைச் செயலில் வந்தவையே!

'சரி, களத்திரம் கெட்டு கஷ்டமும் வந்துவிட்டது. அதற்கு விமோசனமே இல்லையா?' என்று ஒரு கேள்வி



எழும். இங்கேதான் தெய்வத் திருமணங்கள் விடையாக வந்து நிற்கின்றன.

ஒரு திருமணத்தில் பங்கேற்கும் நூறு பேர் ஜாதகமும் வெவ்வேறாக இருந்தாலும், அந்தத் தேதியில் அவர்கள் புத்தாடை, விருந்து, சந்தோஷம் என்று இருப்பதற்கான விதி இருந்தால்தான் அவர்கள் ஒன்றுகூடுவார்கள். இல்லா விட்டால், ஒருவரால் அந்த சந்தோஷமான இடத்தை நெருங்க முடியாது. குறிப்பாக, தோஷம் உள்ளவர்களால் முடியவே முடியாது.

தெய்வத் திருமண நிகழ்விலும் இந்த அம்சங்களே உள்ளன. இதில் கலந்துகொள்ள முயலும்போதும் நம் தப்பான விதிப்பாடு தடுக்க முனையும். அதை அடக்கி நம்பிக்கையோடு அந்தத் திருமணத்தில் பங்கெடுத்தால், நம் தப்பான விதிப்பாடு தன் சக்தியை இழக்கும்; நல்ல விதிப்பாடு பலப்படத் தொடங்கும். இதை வைத்தே நாம் களத்திர ஸ்தானம் பலம் பெறத் தொடங்குவதை உணர லாம்.

குறிப்பாக, தெய்வத் திருமணங்களின்போது வெளிப் படும் நற்சக்தி அம்சங்கள் மிக அதிகமானது. கோள்களும் தெய்வத் திருமணம் நடைபெறும் இடங்களில் தீவினை களைப் பெரிய அளவில் தராது. மொத்தத்தில் ஒரு கோயி லில் நடைபெறும் ஒரு தெய்வத் திருமணமானது அதைக் காண்பவர் மனங்களில் புத்துணர்ச்சி, ஆன்மா, உடல் சேர்க்கை, வம்ச விருத்தி சார்ந்த வாழ்க்கைமுறை அது அருளோடு இருந்தால் எப்படி சிறப்பாக இருக்கும் என்பதை எல்லாம் புரிய வைப்பதாக உள்ளது.

கோயில்கள் பொதுவானவை. எனவே, தெய்வத் திருமணங்களும் பொதுவானவை. எவர் வேண்டுமானாலும்

பங்குபெற உரிமை வந்துவிடுகிறது. ஒரு தனிநபர் திரு மணத்தில் உற்றார், உறவினர்களுக்கே உரிமை இருக்கிறது.

இதை எல்லாம் உத்தேசித்தே நம் சான்றோர்கள் இறைவன் - இறைவிக்கே திருமணம் என்னும் சடங்கை வடிவமைத்தார்கள்.

அதற்கென பங்குனி உத்திரம் போன்ற வலுவான நாட்களையும் கண்டறிந்து அந்த நாளில் ஆலயங்களில் அந்த சடங்கை நிறைவேற்றினார்கள்.

திருப்பதி போன்ற தலங்களில் தினமுமே பெருமா ளுக்கு கல்யாண உற்சவம் நடக்கிறது. 'இருந்தும் பல தெய்வத் திருமணங்களுக்கு சென்றும் பலரது களத்திர தோஷம் தீரவில்லை.. பலருக்கு வாழ்க்கை சரியாக அமைய வில்லை. இதற்கு என்ன சொல்கிறீர்கள்?' என்கிற கேள்வி களையும் சிலர் கேட்கக் கூடும்.

அது மட்டுமா? 'வாழ்க்கை ஒரு அச்சடிக்கப்பட்டு விட்ட புத்தகம்; அதில் பிழை இருந்தால் இருந்ததுதான். மாற்ற முடியாது என்று கூறிவிட்டு, தெய்வத் திருமணங் களில் பங்கு கொள்ளும்போது களத்திர தோஷம் தீர்கிறது என்று கூறினால் எப்படி? முரண்பாடாக உள்ளதே' என்றும் சிலர் கேட்கலாம்.

மாறவே மாறாத அல்லது மாற்ற முடியாத விதிக்கு நடுவிலும் ஒருவர் ஆன்மிகப் பயிற்சியின் மூலம் இறை வனின் திருவடிகளைப் பற்றிவிட்டால் எப்படிப்பட்ட விதி யும் அவரை எதுவும் செய்துவிட முடியாது என்று சொல்லி சென்றிருக்கிறார்கள் நம் முன்னோர்கள்.

அதை அவர்கள் உணர்ந்து வைத்து இருந்த விதமும், அதைச் சொல்லிச் சென்ற விதமும் சிலிர்ப்பூட்டக் கூடியது.

அது...



10

## வாழ்க்கை எனும் மாய விளையாட்டு!

ஒரு பிராமணனுக்கு தினமும் சந்தியாவந்தனம் செய்வதும் வேதம் ஓதுவதும் பெரியவர்களை வணங்கு வதும் கடமை. இதை அவன் எப்போதாவது செய்வது தவறு. எப்போதுமே செய்யாமல் போவது தப்பு. இரண் டுமே தோஷம். தவறு, பரிகாரங்களால் சீராகிறது. தப்புக் குப் பரிகாரமே இல்லை. அதை அனுபவித்துத்தான் தீர்க்க முடியும்.

இந்த வினைகளை ஈடேற்றித் தரத்தான் கோள்கள் உள்ளன. ஓர் உயிர் பிறந்ததில் இருந்து அதன் வினைப் பாடு ஆரம்பமாகிறது. அதற்கென்று ஒரு தசாபுக்தி, அதில் அந்தரம், சூட்சுமம் என்று அடுக்குகள். இவை மனதை ஆட்சி செய்ய ஆரம்பிக்கின்றன. இதை வைத்தே நமது பேச்சு, செயல் எல்லாம் தீர்மானமாகிறது.

நம் வாழ்வில் 'புலனாவது, உணரமட்டுமே முடிவது' என்கிற இரு விதம் உண்டு. இதில் பசி, தாகம் போன் றவை உணர மட்டுமே முடிந்தவை. நாம் உணர்வதைப் பிறருக்கு உணர்த்த இயலாது. வார்த்தைகளால் எனக்குப் பசிக்கிறது, தாகமாக இருக்கிறது என்று கூற முடியும்.. அவ்வளவுதான்!

வாசனை - நாற்றம் போன்றவற்றைப் பிறரை முகர வைத்து உணர வைக்கலாம். ஆனால், இவை கண்களுக் குப் புலனாவதில்லை. தசை, அந்தரம், சூட்சுமம் போன் றவையும் இந்த ரகமே. இவை நம்மை வழிநடத்துவதை நம் செயல்பாடுகளை வைத்துத்தான் உணர முடியும்.

நடுநிலையோடு நம்மை நாமே கவனித்தால் இதை உணரமுடியும். ஏன் நொடிக்கு நொடி நம் எண்ணம் மாறிக்கொண்டே இருக்கிறது?

உதாரணத்துக்கு, நாம் தெருவில் போகும்போது எச்சில் துப்பிவிடுகிறோம். அதைப் பார்க்கும் ஒருவர் இது தவறு என்று நம்மைக் கண்டிக்கிறார். அப்போது நம் மனம் 'இதெல்லாம் ஒரு விஷயமா?' என்று கேட்கும். அடுத்து ஒரு படிமேலே போய், 'இதைச் சொல்ற நீ யோக்கியமா?' என்று கேட்கும். 'யார் இந்தத் தவறைச் செய்யவில்லை?' என்று சமாதானத்துக்குத் தாவும். ஆனால், 'நான் தவறு செய்துவிட்டேன்' என்று மட்டும் ஒப்புக்கொள்ளாது!

இப்படி நாம் இருக்கக் காரணம் 'மாயா'. இந்த மாயைதான், மனிதர்கள் ஏற்றத்தாழ்வோடும், அழகோடும், அழகற்றும், நல்லவர்களாகவும், கெட்டவர்களாகவும் இருக்கக் காரணம்.

மாயையை முற்றாக விளங்கிக்கொள்ள மகாபாரதம் ஒன்று போதும். மனித வாழ்வில் இன்பமும் துன்பமும் எப்படிப்பட்டதாக இருக்க முடியும் என்று வார்த்தைகளில் மட்டும் கூறாமல் வாழ்க்கையாகவே காட்டிவிட்டது பாரதம்.

உலக வாழ்க்கை சுவையாவதே மனிதர்களின் தேடுதல்களால்தான். தேடுதல் என்பது ஒவ்வொருவரிடமும் ஒவ்வொருவிதமக உள்ளது. ஒருவர் பொருளைத் தேடுவார். இன்னொருவர், பொன். இன்னொருவருக்குப் புகழ்.. இந்த வேற்றுமைக்கு எது காரணம்? ரசனை என்று பதில் கிட்டும்.



ரசனைக்கு எதைக் காரணம் சொல்வது? அவர் பிறந்த நேரம் அப்படி என்பதைத் தவிர வேறு காரணம் கூறவே முடியாது.

பரந்த இந்த உலகில், ஒரு குறிப்பிட்ட ஊரில், குறிப்பிட்ட தெருவில், குறிப்பிட்ட தாய் வயிற்றில் ஒருவர் பிறக்கவும், அந்தச் சூழலில் அவர் வளரவும் எது காரணம் என்று கேட்கும்போதுதான்.. அது நம் கைகளில் இல்லாத, காலத்தின் கைகளில் இருக்கிற ஒரு விஷயம் என்பது நமக்குப் புரியும்.

மனிதன் சுயமாகச் சிந்திக்கத் தொடங்குவது பதினைந்தில் இருந்து இருபது வயதுக்குப் பிறகுதான். அதற்கு முன்வரை அவன் வாழ்வில் அவன் இருந்த விதம் என்பது அவனுடைய அமைப்பாகும்!

நல்ல குடும்பச் சூழலில் பிறக்கும் பிள்ளைகள் பெற்றோர்களால் கவனமாய் வளர்க்கப்பட்டு எல்லாவித நலங்களோடும் இருப்பார்கள். வேறு சூழலில் பிறந்தவர்கள் அதற்கேற்ப வளர்ந்திருப்பார்கள்.

இந்த வளர்ச்சிக்கு ஏற்பவே அடிப்படை மன அமைப்பு இருக்கும். மொத்தத்தில் நமக்கான மன அமைப்பு என்பது நாம் உலகம் புரிந்து, பின் அதற்கேற்ப உருவாக்கிக் கொள்வது இல்லை. அது சூழலுக்கேற்ப உருவாகிறது. பிறகே நாம் அதைப் புரிந்துகொள்ள முயல்கிறோம். பலர் இறுதி வரை புரிந்துகொள்ள முயற்சிப்பதே இல்லை. அப்படியே மனம்போகிற போக்கில் வாழ்ந்துவிட்டுப் போகிறவர்களாகவே இருக்கிறார்கள். இதைத்தான் மாயை என்கின்றனர்.

'மாயையை வெல்வது அல்லது மாயையில் வீழ்வது' -

இதுதான் உலக வாழ்க்கை. மாயை என்பது ஒரு விளை யாட்டு. இந்த விளையாட்டில் பங்கு கொள்ளவே நாம் பூமிக்கு வந்திருக்கிறோம். இதில் நாம் வெற்றி பெறவோ.. தோல்வி அடையவோ காரணமாக இருப்பவைதான் கால நேரங்கள்!

காலநேரங்களுக்குப் பின்னே இருப்பவை கோள்கள்! நாம் முற்றாக நல்வினைகளையே செய்பவராக இருக்கும் போது கோள்களும் நற்பலன்களைத் தந்து இந்த மாயா விளையாட்டில் துணை நிற்கும். நாம் தீவினைகள் புரியும் போதும் இதே கோள்கள் நமக்குத் தீய பலன்களைத் தந்து நாம் தோல்வி அடையக் காரணமாக இருக்கும்.

கைலாயத்தில் ஈசனோடு ரிஷிகளும் பூதகணங் களும் உடன் இருப்பார்கள். இவர்களில் ஒருவர் சுந்தரர்! கைலாயத் தோட்டத்தில் மலர் பறிக்கும்போது இரண்டு அழகான பெண்களைப் பார்த்து மயங்கிப் போகிறார் சுந்தரர்.

இது மாயையின் செயல்! அதன் விளைவாக பூவுலகில் அவர் பிறந்து வளர்ந்து நாயன்மார்களில் ஒருவராகத் திகழ்ந் தார். முற்றாக மாயா வாழ்க்கையை வாழ்ந்தே தெளிந்தார்.

இந்த மாயைதான் ஒருவரை உண்டென்று நம்பவும் வைக்கிறது; இன்னொருவரை இல்லையென்று மறுக்க வும் வைக்கிறது. உண்டென்று நம்ப வைப்பவர்களை அதிலேயே வைத்திருக்க அதற்கான காரணங்கள் வேண்டு மல்லவா? அந்தக் காரணங்கள்தான் ஹோமங்கள், யாகங் கள், திருக்கல்யாண வைபவம் மற்றும் தேர்த்திருவிழா போன்ற சம்பவங்கள்!

இதில் கல்யாண வைபவங்கள், ஒருவர் ஜாதகத் தின் சப்தம ஸ்தானத்தில் அதற்கான தோஷம் இருந்தால்



அந்த தோஷத்திற்கான மருந்தாகத் திகழ்வது போல, நிறை வேறாத ஆசைகளுக்கு மருந்தாக இருப்பவை தேர்த் திரு விழாக்கள்!

தேர்த் திருவிழாவுக்குப் பின்னே மிகப் பெரும் தத்துவம் பொதிந்துள்ளது. பலர் கூடி இழுக்கும் ஒரு தேரை நாமும் பற்றி இழுக்கும்போது, இழுக்க முடியாதபடி மிகுந்த வினைப்பாட்டுடன் இருக்கும். பல விஷயங்கள் நமது வாழ்வில் தீர்ந்துபோகிறது.

எப்படி என்பதை காஞ்சிப் பெரியவரின் வாழ்வில் நடந்த ஒரு சம்பவத்தோடு அடுத்துப் பார்ப்போம்!

* * *

11

## தேர்த் திருவிழா!

பிரசித்தி பெற்ற கோயில்களில் தேர் இருக்கும். தேரடி இருக்கும். தேர் ஓட அகலமான வீதிகள் இருக்கும். இந்த வீதிகள், பிரதான வீதிகளாக, அங்காடிகள் உள்ளதாக இருக்கும். தேரடி என்பது ஊரின் அடையாளமாகவும் மக்கள் சங்கமிக்க ஏற்றதாகவும் இருக்கும்.

தேரடியையும் தேரடி வீதிகளையும் வைத்தே அந்த ஊரின் செல்வச் செழிப்பையும் கலாசாரத்தையும் உணர்ந்து கொள்ளலாம்.

தேர், அசைந்துவருவது கண்கொள்ளாக் காட்சி. பல உணர்வுகளும் கலந்தது வாழ்க்கை. இந்த உணர்வு நிலை அவ்வளவும் தேரில் சிற்பங்களாக சித்திரிக்கப்பட்டிருக்கும்.

தேர் வரும் காட்சியை, வீதிகளில் வசிப்பவர்கள் மாடிகளில் நின்று கண்டு மகிழ்வார்கள். கை கால் இழந்தவர்கள், முதுமை காரணமாக நடமாட முடியாதவர்கள், ஆலயத்துக்குள் சென்று இறைவனை தரிசிக்க முடியாதவர்களுக்கு எல்லாம் அன்று ஜெகஜ்ஜோதியான தரிசனம்!

எல்லா நாளிலும் ஊருக்குள் இருக்கும் கோயிலுக்குள்தான் தெய்வசக்தி வெளிப்படுகிறது. தேர்த் திருவிழாவன்று ஊர் முழுக்க அது வெளிப்படும். இதனால், ஊருக்குள் ஏதேனும் தீயசக்திகள் புகுந்திருந்தால் அவை அலறிக் கொண்டு ஓடிவிடும்.

தேரை இழுப்பவர்களில் ஏழை பணக்கார பேதம் கிடையாது. சாதி பேதங்கள் கிடையாது. தெய்வம் பெரிது;



அந்தப் பெரிதான தெய்வத்தை பேதங்களற்ற மனிதர்களாலேயே தம் பக்கம் இழுக்க முடியும் என்பதே தேரோட்டம் உணர்த்தும் உண்மை.

இந்த தேர்த் திருவிழாவில் பங்கு கொள்பவர்களுக்கு சூட்சுமமாகவும் பல நன்மைகள் ஏற்படுகின்றன. இதை காஞ்சிப் பெரியவர் வாயிலாக நாம் உணர ஒரு சம்பவம் சாட்சியாக உள்ளது.

நிலக்கிழார் ஒருவரின் பூர்வீக சொத்துக்களை, 'தங்களுக்குச் சொந்தமானது' என்று நிலக்கிழாரின் பங்காளிகள் உரிமை கொண்டாடினர். போலிப் பத்திரங்களையும் தயாரித்து வைத்திருந்தனர். நிலக்கிழார் வழக்கு தொடுத்திருந்தார்.

அந்த வழக்கு பெரிதும் இழுத்தடித்துக் கொண்டிருந்தது. இதனால் நிம்மதி இழந்த நிலக்கிழார், ஒரு தருணத்தில் தற்செயலாக காஞ்சி மகாபெரியவர் சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளை தரிசிக்க நேர்ந்தது.

பெரியவர், நிலக்கிழாரின் முகக்குறிப்பை வைத்தே அவரது வேதனையைப் புரிந்துகொண்டு விசாரித்தார். நிலக்கிழாரும் தனது வழக்கு தொடர்பான சிக்கலை கூறினார். ''பங்காளிகளின் மோசடியைத் தாங்க முடியாமல் தான் வழக்குத் தொடர்ந்தேன். என் நியாயம் ஜெயிக்குமா என்று தெரியவில்லை. இதனால் சத்தியம், தர்மம் எல்லாமே வெறும் கற்பனையோ என்று நான் எண்ணும்படியும் ஒரு சூழல் இருக்கிறது. எனக்கு நியாயம் கிடைக்காமல் போனால் நாம் எப்படியும் மாறலாம்'' என்று தன் மனதில் உள்ளதைப் பெரியவரிடம் கொட்டி முடித்தார்.

பெரியவர் அவரிடம், ''நீங்கள் தேர் இழுத்திருக்கிறீர்களா?'' என்று கேட்டார்.

தன் பிரச்னைக்கும் தேர் இழுப்பதற்கும் என்ன சம்பந்தம் என்று அவருக்குப் புரியாவிட்டாலும் 'இழுத்த தில்லை' என்கிற உண்மையைக் கூறினார்.

''ஒருமுறைகூட இழுத்ததில்லையா?''

''ஆமாம். எனக்குக் கூட்டம் என்றாலே ஒவ்வாது'' என்றார் அவர்.

பெரியவரும், ''எங்காவது தேர்த் திருவிழா நடக்கும் ஊருக்குப் போய், தேர் வடம் பிடித்து இழுத்துவிட்டு பிறகு உங்கள் வேலையைப் பாருங்கள். எல்லாம் நல்லபடி யாக முடியும்!'' என்றார்.

''சரி'' என்று கூறிவிட்டுச் சென்றவர், மூன்று மாதம் கழித்து பெரியவரைப் பார்க்க வந்தார். அவர் முகத்தில் நிம்மதி தவழ்ந்தது. வழக்கு முடிந்து தனக்கு சாதகமாக தீர்ப்பாகிவிட்டதாகக் கூறினார். பெரியவர் அதைக் காதில் போட்டுக் கொள்ளாமல், பழையபடியே ''தேர் இழுத் தாயோ?'' என்று கேட்டார்.

''இழுத்தேன்.. அதன் பிறகே எல்லாம் மாறியது. எப்படி என்றுதான் புரியவில்லை'' என்றார் அவர்.

தேர் இழுக்கவும், அப்போது சமுதாயத்தோடு கலக்க வும் ஒரு ஜாதக அமைப்பு தேவை. தேர் வடம் தொட்டுக் கொண்டு ஆயிரக்கணக்கான பேர் நிற்கும்போது அங்கே அபரிமிதமான மனித சக்தி பொங்கத் தொடங்குகிறது. அவ்வளவு பேரும் அருள் பெற விரும்பியே அங்கு கூடி யுள்ளனர். அவர்கள் அவ்வளவு பேரும் தெய்வத்தையே இழுக்கும் சக்தி தங்களுக்கிருப்பதாகக் கருதுவதும், இழுக்க இழுக்க தெய்வம் ஓடிவருவதும் அருள் அலைகளை அங்கு உருவாக்குகிறது. ஒரே மாதிரியான எண்ணத்தோடு கோயிலுக்கு அடுத்து தேரடியில்தான் மனிதர்களைப் பார்க்க முடியும். இந்த எண்ண ஒற்றுமை, சக்திப் பிர யோகம்... இதனுள்தான் சூட்சுமம் உள்ளது.



இப்படி ஒரு சக்தி அலை தவழும் இடத்தில் நாம் சஞ்சரிக்க நமது ஜாதகத்திலும் இடமிருக்க வேண்டும். நிலக்கிழார் வரையில் அவரது ஜாதகக் கட்டம் அவரை இப்படிப்பட்ட சக்தி அலைமிக்க இடங்களில் அவர் சென்றுவிடாதவாறு தடுத்துக் கொண்டிருந்தது. அதற்கு இசைவாக, கூட்டத்தை அவருக்குப் பிடிக்காதபடி ஓர் உணர்ச்சியை அவருக்குள் உருவாக்கி விட்டிருந்தது.

நமக்குப் பிடித்தால்தானே நாம் செயல்படுவோம்! கடவுளைக்கூட இல்லை என்று எண்ணச் செய்து, தொழ விடாமல் செய்யும் நாத்திக எண்ணங்களும்கூட ஒருவித கோள் செயல்பாடே! அந்தக் கோள் அப்படி ஒருவர் வரை யில் நடந்து கொள்ள கர்மவினை என்பது காரணமாக இருக்கும்.

அது ஒரு சூட்சுமமான கணக்கு அடுக்கு! நிலக்கிழார் வரையில் அவரது கர்மவினை பெரியவரை தரிசித்த மாத்திரத்தில் தீர்ந்து போனது. பெரியவரே வழிகாட்டி. தேர்த் திருவிழாவிலும் பங்கு கொள்ள வாய்த்தது. இதனால் அவரது கணக்கில் அருள் பலம் சேர, வழக்கும் அவருக்கும் சாதகமாக தீர்ப்பானது.

இதை எல்லாம் சூட்சுமமாக உணரத்தான் முடியும். விஞ்ஞானக் கூடத்தில் நிரூபிப்பது போல் நிரூபிக்க முடியாது. அது தேவையும் இல்லை.

ஒரு தேர் - அது இருக்கும் தேரடி - அது ஓடுவதால் ஏற்படும் விளைவுகள்..

அடேயப்பா..! இதன் பின்னால்தான் எத்தனை அற்புதங்கள்!

## 12

# கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கலாமா?

கடந்து முப்பது ஆண்டுகளாக மதுரையில் வசித்து வரும் எனக்கு, இங்கே நிலவிவரும் ஒரு நம்பிக்கை சார்ந்த விஷயம் தெரியும். மதுரை என்றாலே கோயில் நகரம் என்றுதான் கூறுவார்கள். காரணம், பிரமாண்டமாய் காட்சி தரும் மீனாட்சியம்மன் கோயில்தான்!

கோயில் நகரத்தில் கோபுரங்கள்தான் உயரமாக இருக்க வேண்டும். இதற்கு இணையாகவோ, மேலாகவோ யாரும் கட்டடங்கள் எழுப்ப மாட்டார்கள். இதுதான் மதுரைக் குள் நிலவும் ஒரு கட்டுப்பாடு.

இதை அநாவசியம் என்று நான் நினைத்ததுண்டு. மக்கள்தொகைப் பெருக்கத்தாலும், பல தேவைகள் கருதி யும் மாற்றங்கள் ஏற்பட்டபடியே இருக்கின்றன. இந்த மாற்றங்களைத் தடுத்து நிறுத்த முடியாது என்பதே யதார்த்தம். பிறகு எதற்கு இப்படி ஒரு கட்டுப்பாடு?

இறைவனே பெரியவன், ஆலயமே பெரியது என்பதை உணர்த்துவதற்காக இப்படி கட்டுப்பாடுகளை விதித்துக் கொண்டார்களோ என்று கருதினேன்.

ஆகம சாஸ்திரமும், கோபுரத்தில் இருக்கும் கலசத்தின் சக்தி பற்றியும் தெரிந்திராத நிலையில் என்னிடம் இப்படி ஒரு சராசரி எண்ணமே இருந்தது.

தேசாடனம் புரியும் சந்நியாசி ஒருவர் ஒருமுறை என் வீட்டிற்கு வந்திருந்தார். அந்த சந்நியாசி இமயமலையில் நெடுங்காலம் தவமிருந்தவர். திருநெல்வேலி மாவட்டத் தில் இருக்கும் மகேந்திரகிரி நோக்கிச் செல்லும் வழியில் என் இல்லத்துக்கு வந்திருந்தார்.



ஒரு காவி வேட்டி, தோளில் காவித்துண்டு, நிர்மல மான முகம், சடை விழுந்துவிட்ட தலைமுடி இவ்வளவு தான் அவர். அதிகம் பேசவும் விரும்பவில்லை.

நான் பத்து நிமிடம் பேசிய பேச்சுக்கு ஒரு வார்த்தை யில் பதில் தந்தார். அவரிடம் 'மீனாட்சியம்மன் கோயி லுக்குப் போய் வரலாமா?' என்று கேட்டேன். சிரித்தபடியே மொட்டை மாடிக்கு வந்தவர், அங்கிருந்தே மீனாட்சி யம்மன் கோயில் கோபுரத்தைப் பார்க்க முயன்றார். ஆனால், இடையில் கட்டடங்கள் தடையாக இருந்தன. தண்ணீர்த் தொட்டிமீது ஏறி நின்றபோது ஓரளவு பார்க்க முடிந்தது. அங்கிருந்தபடியே தலைக்கு மேல் கைகளைக் கூப்பி சில வினாடிகள் நின்றுவிட்டு இறங்கினார். இறங்கிய வேகத்தில், 'அருளைவிட ஆசைதான் அதிகமா இருக்கு..' என்றார். நான் விளக்கம் கேட்டேன்.

'கலசம்ங்கறதே வாங்கிக் கொடுக்கற வஸ்துதானே? சந்நிதி தேடிப் போய் மனசுல இருக்கறத எல்லாம் கொட்டு றதை அப்படியே நம்மகிட்டருந்து வாங்கி வெளிய விட்டுடுது அது. அதேசமயம் வானத்துல இருந்து வாங்க வேண்டுயதை வாங்கி உள்ளேயும் தருது. எந்த ஊர்ல தர்றது அதிகமா இருக்கோ அது அருள்பலம் உள்ள ஊர்.. விடுறது அதிகமா இருந்தா அது ஆசை உள்ள ஊர். இங்கே விடுறதுதான் அதிகமா இருக்கு..' என்றார்.

'அதனால்தான் கோபுரத்துக்கு இணையாகக் கட்ட டங்கள் அருகில் கூடாது என்கிறார்களா?' என்று கேட்டேன்.

'விடுறது தாக்கும்.. தாங்கிக்க முடியணும்! சாமி காப்பாத்து, சாமி ஆரோக்கியம் கொடு, சாமி எல்லாம் கொடு, சாமி தப்புப் பண்ணிட்டேன் மன்னிச்சிரு. இப்பிடி எவ்வளவு பேர் மூச்சு அந்த சந்நிதி முன்னாடி முண்டுது? அதை எல்லாம் வாங்கி வெளில விடும்போது அதெல்லாம் வானம் ஏறிக் கரையாம கட்டடங்கல்ல முட்டி மோதி திரும்பி பூமிக்கே வந்தா ஊர் தாங்குமா? இதுக்கு என்ன ஆதாரம்னு கேக்கறியா? பருவம் தவறிப் பெய்யற மழையும், ஊருக்குள் விழற கொலைகளும், கஷ்ட ஜீவனங்களும்தான்..'

'கோயிலே இல்லாத ஊர்லயும், இதெல்லாம் இருக்கத் தானே செய்யுது' என்றேன்.

'குடத்துல தண்ணி இருந்து தாகத்துல தவிக்கிற கொடுமையை நான் சொன்னா, தண்ணியே இல்லாம தவிக்கிறவனைப் பத்திக் கேட்கிறயே..' என்று கோபப் பட்டார்.

அவர் அவ்வளவு பேசியதே எனக்குப் பல உண்மை களை உணர்த்துவதாக இருந்தது.

இன்று ஊர் முழுக்க செல்போனுக்கான டவர்கள் அப்பட்டமாக பாதிக்கின்றன. சிட்டுக்குருவி இனத்தையே இதன் கதிர்வீச்சு அழித்துவிட்டது. பல ஆயிரம் கோடி வருவாய் வருவதால் அரசு இந்த டவர்களின் பாதிப்பு பற்றிப் பேச மறுக்கிறது.

இந்த டவர்களும் மின்காந்த அலைகளை விட்டு வாங்கித்தான் செயல்படுகின்றன. இதன் தன்மையை அறிய செல்போன் இருக்கிறது. கோபுரங்களின் தன்மையை அறிய அதுபோல ஒரு கருவி இல்லை. அவ்வளவுதான் வேற்றுமை.



இந்த கோபுரம், இதன் கவசம், இதன் வடிவ அமைப்பு.. எல்லாமே பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நம் நாட்டில் இருந்து வருகிறது.

எந்த அளவுக்கு பூகோள ஞானமும், கதிர்வீச்சுக் களைப் பற்றிய பட்டறிவும் நம்மவர்களுக்கு இருந்திருந் தால் அவர்கள் இதைக் கண்டறிந்திருப்பார்கள்!

'கோயிலில்லாத ஊரில் குடி இருக்க வேண்டாம்' என்று சொன்ன நம் முன்னோர்கள்தான் எத்தனை பெரிய வர்கள்! இதிலும்கூட பிரமிப்பு தட்டும் விஷயங்கள் ஏராளம்! தஞ்சை பெரிய கோயிலாகட்டும், ஏனைய பெரிய கோயில் களையும் எடுத்துக் கொள்ளுங்கள். அவ்வளவும் பிரமாண் டத்துக்கு இலக்கணம் வகுத்தவை.

இன்றைக்கு நாம் ஒரு கோயிலை கட்ட விரும்பி னால் இன்றைய மக்கள் தொகையை உத்தேசித்து இத்தனை பெரிதுதான் கட்டவும் செய்வோம்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ராஜராஜ சோழன் எதற்காக அத்தனை பெரிதாகக் கோயிலைக் கட்டினான்? சில ஆயிரம் பேர்களே உள்ள ஒரு ஊரில் ஒரு ஆலயத்தை எதற்கு இவ்வளவு பெரிதாகக் கட்ட வேண்டும்? அங்கே தான் அவர்களின் தீர்க்க தரிசனம் தெரிகிறது. 'கோயில் என்பது காலங்களை வென்று இருக்கப் போவது.. எது மாறினாலும், கோயில்களில் மாற்றம் வராது.. தெய்வ சாந்நித்யம்தான் பெரியது. அது பேணப்பட்டபடியே இருக்கும்.

நாள் செல்லச் செல்ல மனித சமுதாயம் விரி வடைந்து பெருகும்போது மன அழுத்தம் மற்றும் வாழ்க்கைச் சிக்கல்களும் பிரச்னைகளும் அதிகமாகும். அப்போது

அவர்களின் மனபாரத்தை இறக்கிவைக்க ஒரு இடமாய் ஆலயங்கள் தேவைப்படும்.

அப்படி ஒன்று இல்லாதபோதுதான் மனித இனம் குறுக்கு வழிகளில் சென்று துயரங்களை அதிகப்படுத்திக் கொள்ளும்.

அதுமட்டுமா? கோயில் இருந்தால் தேர் இருக்கும், திருவிழா இருக்கும், குளம் இருக்கும், ஸ்தல விருட்சம் இருக்கும், பிரசாத விநியோகம் இருக்கும். இதெல்லாம் மனிதனை மனிதனாக வைப்பதோடு, தெய்வமாகவும் உயர்த்த துணை செய்யும்.

தனித்தனியே வாழ்பவனும் தேர் இழுக்கும்போதும், திருவிழாக்களில் பங்குபெறும்போதும் ஒன்றுபடுவான்.

இப்படி ஒரு கோயில், அதன் கலசம், அதற்குப் பின்னாலிருக்கும் செறிவான அடுக்குகள்... இவற்றை எண்ணி என் பிரமிப்பு இன்னமும் பல விஷயங்களில் தொடரவே செய்கிறது. குறிப்பாக வேற்றுமையில் நமக்கிருக்கும் ஒற்றுமை! அது எப்படி?

***



## 13

# வேற்றுமையில் ஒற்றுமை!

ஓர் ஆலயம் ஊருக்குள் இருந்தால், அதனால் ஏற்படும் சமூக நன்மைகளையும், மக்களை ஒன்றுபடுத்திப் பார்க்கக் காரணமாக விளங்கும் தேர்த் திருவிழா போன்றவை குறித்தெல்லாம் பார்த்தோம்.

நமது இந்து மதத்தின் அடுத்த முக்கிய சிறப்பு அதன் ஒற்றுமைதான்! சாதாரணமான ஒற்றுமையில்லை.. வேற்றுமையில் ஒற்றுமை!

அந்த ஒற்றுமைக்கு இப்போது அநேக சோதனைகள் வந்துவிட்டன. ஆனாலும், இந்த சோதனைகளை நமது மதம் தாண்டிவிடும் என்பதே என் நம்பிக்கை.

இந்த நம்பிக்கையைக்கூட நான் நமது மதத்துக்குள் இருந்தே பெறுகிறேன். சிற்சில சோதனைகளாக இவை இருக்கலாம். பெரும் சாதனையாக நமது மதம் காலம் காலமாக இருந்துவருவதை உணரும்போது இதெல்லாமே ஒரு குடும்பத்துக்குள் வந்துபோகும் குட்டி மனஸ்தாபமாகத்தான் எனக்குப் படுகிறது.

எது பெரும் சாதனை? அதை முதலில் பார்த்துவிடுவோம். நூற்றுக்கணக்கில் சாதிகள், அடுத்து பல்வேறு மொழிகள், அவைகளுக்கென்று பிரத்தியேகமாக லிபி, காஷ்மீரில் இருந்து கன்னியாகுமரி வரையிலும் அந்தந்த மண்ணின் தன்மைக்கேற்ப கலாசாரங்கள்.

இப்படி நமக்குள்ளே பலவிதமான பிரிவுகள். ஆனாலும், அவ்வளவு பேருமே திருப்பதி, பழனி, சபரிமலை,

அமர்நாத், கைலாயம் என்று மாநிலம் விட்டு மாநிலமும்.. வைணவம், சைவம் என்கிற பிரிவுகள் இருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமலும் லட்சக்கணக்கில் கூடுகிறோம்.

நாம் தமிழகத்தில் இருந்து காசிக்கு போனால் அவர்கள் இங்கேயுள்ள ராமேஸ்வரத்துக்கு வந்து போகிறார்கள். இதெல்லாமே சாதனைதான்!

அமெரிக்கா சென்று அங்கே சில மாதங்கள் தங்கி இருந்தேன். 1987-ம் வருடம் அது. அமெரிக்காவின் 50 மாநிலங்களில் கிட்டத்தட்ட 39 மாநிலங்களுக்குப் பயணம் மேற்கொண்டேன்.

அமெரிக்காவுக்குப் புறப்படுவதற்கு முன் ஒரு சொர்க்கத்துக்குள் நுழைந்திடும் உணர்வும் பரவசமும் என்னுள் இருந்தன.

காரணம், அது ஒரு வல்லரசு நாடு.. பளிச்சென்று மிக சுத்தமாக இருக்கிறது. புழுதி இல்லை. குறைவில்லாத மழை, அதனால் ஈரப்பதமான சூழல், எங்கும் பச்சைப் பசேல் என்று இருக்கிறது. அடுத்து மிகப் பெரிய நிலப் பரப்பு. மிகக் குறைவான மக்கள் தொகை. அதாவது, ஆயிரம் பேர் வசிக்க முடிந்த ஒரு அரண்மனைக்குள் ஐந்தாறு பேர்களே வசிக்கிறார்கள். இது அமெரிக்கா!

இங்கோ ஒருவர் மட்டுமே வசிக்க முடிந்த ஒரு வீட்டுக்குள் நூற்றுக்கணக்கானவர் வசிக்கிறோம்! அதனால் தான் அங்கே இயற்கை அவர்களுக்கு அவ்வளவு சௌகர்ய மாக இருக்கிறது.

நம் ஊரில் பாயும் காவேரியைப் போல் பத்து மடங்கு பெரிய மிஸ்ஸிஸ்ஸிப்பி நதி, வருடத்தின் எல்லா நாளும் நிரம்பி வழிந்து ஓடிக்கொண்டிருக்கிறது. இப்படி குறைந்த



மக்கள்தொகையுடன் நீர்வளமும், நிலவளமும், பெரிதாக இருப்பதாலும் அங்கே நாம் பிரமிக்கும் தூய்மையைப் பேண முடிகிறது.

இப்படியொரு இடத்தில் வேற்றுமையோ, உயர்வு தாழ்வோ இருக்கக் கூடாதுதானே? ஆனால், அங்குள்ள கறுப்பர்களோடு வெள்ளையர்கள் இணக்கம் பாராட்டுவ தில்லை. இந்த கறுப்பர், வெள்ளையர் சிக்கல் காலகால மாக அங்கே இருந்து வருகிறது. இந்த உலகின் மற்ற மதங்களிலும் பல பிரிவுகள் கொண்டு சண்டை போட்டுக் கொள்வதைப் பார்க்கிறோம்.

அப்படியே, நம் பக்கமாய் வந்தால் இங்கேயும் சாதிச் சண்டையும், ஏற்றத்தாழ்வும் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், அவ்வளவு வசதி உள்ளவர்களிடம் இருப்பதை விட மிக மிகக் குறைவாக.. அதுவும் மிகுந்த விஞ்ஞானம் வளர்ந்த ஒரு 30, 40 ஆண்டுகளாகத்தான்.

உண்மையில் நமது நிலப்பரப்பிற்கு, பெரும் மக்கள் தொகைக்கு இங்கே பிரளயம் ஏற்பட்டு மனித சமுதாயமே ஒழிந்திருக்க வேண்டும். ஆனால், அவ்வாறெல்லாம் நாம் நம்மை அழித்துக் கொண்டுவிடாமல் நம்மை வழிநடத் துவது நமது கலாசாரமும் அதன் அற்புதமான உட்பொதிவும் தான்.

இத்தனைக்கும் நமது நாடு அந்நியர்களால் தாக்கப் பட்டது போன்றோ, அபகரிக்கப்பட்டது போன்றோ வேறு எந்த நாட்டுக்கும் நேரிட்டதில்லை. எல்லா விதமான பொருளாதார, கலாசார பாதிப்புகளையும் நம் நாடு பார்த்து விட்டது. பெரும் மழையில் இருந்து கடும் வறட்சி வரை பார்த்துவிட்டது. ஆனாலும் இங்கே இருந்துதான் உலகையே

திரும்பிப் பார்க்க வைத்த பகவத் கீதை, திருக்குறள், ராமாயணம், பாரதம் போன்றவை தோன்றின.

இங்கு பலநூறு மொழிகள். அவ்வளவிற்கு உள்ளும் இறவாத இலக்கியங்கள், இலக்கணங்கள்! பல்வேறுபட்ட கலாசாரங்கள், பழக்கவழக்கங்கள். இப்படி ஒரு மக்கள் பிரிவை ஒரு குடைக்குள் வைத்து அவர்களைப் பரிபாலிப்பது எத்தனை சிரமம் என்று யோசித்தால் தலைசுற்றும், ஆனாலும், நம் தேசத்தின் ஒற்றுமை ஒருபோதும் சிதறாது. காரணம், நம் கலாசாரம்தான்.

இது குறித்து காஞ்சிப் பெரியவர் கூறிய அழகான கருத்துதான் இவ்வேளையில் என் நினைவுக்கு வருகின்றது.

'கடலில் ஒரு கப்பல்! அதில் ஒரு பாய்மரம்! பெரும் காற்றடிக்கும்போது இந்தப் பாய்மரம் ஓட்டை விழுந்து கிழிந்து கப்பலும் கவிழ்ந்து விடுகிறது. இதைத் தவிர்க்க ஒரு பாய்மரத்தையே பல துண்டுகளாக்கிப் பொருத்திப் பயணித்தபோது கப்பல் கவிழவில்லை. பெரும் காற்று, துண்டுப் பாய்மரங்களின் இடையில் புகுந்து வெளியேறி விட்டது.

இதைப் போன்றதே நமது மதத்தின் பலவித தர்மங்கள். ஒரே தர்மமாய் இருந்து கிழிந்து போகாமல், பல தர்மங்களாக இருந்து வளர்ந்தும் வருகிறோம்.

ஆயிரக்கணக்கான சுள்ளிகளைச் சேர்த்துப் பிடித்து ஒரே கட்டாகக் கட்டும்போது அதில் ஒரு சுள்ளி உருவப்பட்டாலும் கட்டு நெகிழ்ந்து மொத்த சுள்ளிகளும் உதிர்ந்து விடும். அதையே நூறு சுள்ளிக்கு ஒரு கட்டு, பின் அந்த கட்டுக்கள் அவ்வளவுக்கும் பொதுவாக ஒரு கட்டு என்று போடப்படும்போது ஒரு கட்டு நெகிழ்ந்தாலும் மற்ற



கட்டுக்கள் தங்கள் நெருக்கத்தை இழக்காது. இறுக்கிக் கட்டுவதும் சுலபம்.

ஒரு ஜன சமூகத்தை ஒரே அமைப்பிலே போட்டுக் கட்டுவது முடியாத காரியம். இதனால்தான் வர்ணம் பிரித்து வைத்தார்கள். ஆனாலும், அவர்களை இந்து என்கிற பொதுவான கட்டுக்குள் சேர்த்தும் வைத்தார்கள். இது ஜனசமூகத்தின் நன்மைக்காக மட்டுமே செய்யப்பட்ட ஒரு தீர்க்கதரிசனமான ஏற்பாடு.

நம்வரையில் நாம் பிரிந்தே ஒற்றுமையாக இருந்து நம் நாகரிகத்தைப் பெரியதாக வளர்த்து வந்திருக்கிறோம். மற்றவர்கள் பிரியாமல் இருப்பதாக நினைத்துக் கொண்டு ஒற்றுமையில்லாமல் இருக்கப்போய்த்தான் அவர்களது நாகரிகங்கள் விழுகின்றன.

எல்லாவற்றையும் ஒன்றாகப் பண்ணி உயர்வாக வைத்திருப்பதும் சாத்தியம் இல்லை. எல்லோரும் பிரிந்து கிடப்பதும் உதவாது. இரண்டுக்கும் மத்யமமான ஒரு வழியைத்தான் நமது தர்மசாஸ்திரம் தந்திருக்கிறது' என்கிறார் மகா பெரியவர். எத்தனை ஆழமான கருத்து இது..!

* * *

14

## வினையின்றி வேறென்ன?

நமது மதத்தின் மிகப் பெரிய விஷயமே 'நீ எதைச் செய்தாலும் அதற்கான பதில் ஒன்று உனக்கு உண்டு' என்பதுதான். இதைத்தான் வினை என்கிறோம்.

அதாவது, 'நல்வினை புரிந்தால் உனக்கான பதில் விளைவும் நல்லதாய் இருக்கும். தீவினை புரிந்தால் தீயதாய் இருக்கும்' என்பதே நமது மதம் வலியுறுத்தும் கோட்பாடு! அதேசமயம், நீ மனம் வருந்தி திருந்தும்போது வினைப் பாட்டை உணராதபடி செய்து இறைவன் ஆட்கொள்கிறான் என்பது நம் கொள்கை.

இந்தக் கருத்துக்கு பல மாறுபட்ட கருத்துகளும் பதில்களும் உள்ளன.

சில மதங்கள் அடுத்து ஒரு பிறப்பு உண்டு என்பதையே ஏற்க மறுக்கின்றன. எல்லா பாவங்களையும் இறைவன் மன்னித்துவிடுவதால் நரகத்துக்கு இடமில்லை என்கிறது ஒரு மதம்.

நாஸ்திகர்கள் இவை அவ்வளவையும் ஒரே தள்ளாக தள்ளிவிட்டு, 'பாவமாவது, புண்ணியமாவது! மண்ணிலிருந்து வந்தோம். திரும்ப மண்ணுக்குள் போகப் போகிறோம். வாழ்வில் இன்பம், துன்பம், இரவு, பகல், ஆண், பெண், நல்லது, கெட்டது என்று எல்லாமே இரண்டு இரண்டாக இருப்பதால்.. பாவம், புண்ணியம் என்றும் இரண்டை கற்பனை செய்து கொண்டு, 'பாவம் செய்தால் நரகம்.. புண்ணியம் செய்தால் சொர்க்கம்' என்று கற்பனையாக பேசித் திரிகிறோம்!' என்கின்றனர்.



தன் கருத்துக்கு வலு சேர்க்கும் விதமாக நாத்திகன் பல உதாரணங்களையும் காட்டுகிறான். 'காட்டிலே மானை அடித்துத் தின்றுதான் புலி ஜீவிக்கிறது. என்றால், புலி பெரும் பாவியா? அது பாவம் புரியக்கூடாது என்றால் அது எப்படி ஜீவிக்க முடியும்? இறைச்சிதான் அதற்கு உணவு என்றாகிவிட்ட நிலையில் அடித்துத் தின்றுதானே அது வாழ்ந்தாக வேண்டும். இது தவளையை முழுங்கும் பாம்புக்கும், பாம்பை விழுங்கும் கழுகுக்கும் கழுகை வேட்டையாடும் வேட்டைக்காரனுக்கும்கூட பொருந்தும். எனவே, பாவம் புண்ணியம் என்பதெல்லாம் பம்மாத்து. வலியவை எளியவைகளை தன்னுள் கொள்ளும். இது உலக இயற்கை! சைவ உணவு உட்கொள்வதாக கூறிக் கொள்ளும் சைவர்களே உண்மையில் தாவரங்களை கொன்றே புசிக்கிறார்கள். தாவரங்களுக்கு உயிரில்லை என்று கூற முடியுமா?' என கேள்விகளால் கேட்டுத் திணறடிக்கிறார்கள்.

உலகில் இப்படிப் பலவிதமான கருத்துகள்!

பூரணமாய் அனைவருக்கும் பொதுவாய் எல்லோரும் ஏற்கும்விதமாய் ஒரு உண்மையை எல்லோருமே தேடிக் கொண்டுதான் இருக்கிறோம். அந்த வகையில், குழப்பமின்றி நம்மை வழிநடத்த ஒரு கர்மக் கொள்கையை போதிக்கிறது நம் மதம். 'நீ எதைச் செய்தாலும் அதற்குண்டானதை அனுபவித்தே தீர்க்க வேண்டும். அதனாலேயே மனிதர்கள் பல பிறவிகள் எடுக்கவும் நேரிடுகிறது' என்பதே அந்த கர்மக் கொள்கை!

'இல்லையில்லை.. மனிதப் பிறப்பு என்பது ஒரே ஒரு முறைதான். இறப்புக்கு பின் இறைவன் தீர்ப்புக்கு கட்டுப்பட்டு சொர்க்கத்துக்கும் நரகத்துக்கும் உயிர்கள் செல்கின்றன. இதைத்தான் 'ஜட்ஜ்மெண்ட் டே' (தீர்ப்பு நாள்) என்கிறோம்' என்கிறது இன்னொரு மதம்.

இதில் நிறைய கேள்விகள் எழுகின்றன. ஏனெனில், கடவுள் அன்பே வடிவானவர்; அவர் மன்னிப்பதை வேண்டுமானால் விரும்புவார்; தண்டிப்பதை விரும்பமாட்டார் என்றால்.. பாவம் செய்தவர்களை அவர் என்ன செய்வார்? அவர்களை தண்டித்து நரகத்துக்கு அனுப்பாமல் மன்னித்து சொர்க்கத்துக்கே அனுப்பிவிடுவார் என்றல்லவா பொருளாகிறது.

இதை கேள்விப்படும் ஒருவன், 'பாவம் செய்தாலும் மன்னிக்கப்பட்டு சொர்க்கம்; புண்ணியம் செய்தாலும் சொர்க்கம் எனும்போது பாவம், புண்ணியம் பற்றி எதற்கு கவலைப்பட வேண்டும்' என நினைக்க மாட்டானா? இந்தக் கோட்பாடே பலவீனமாக அல்லவா இருக்கிறது!

இந்த இடத்தில்தான் நமது கர்மக் கொள்கை வெகு அழகாக பொருந்துகிறது. அதாவது, நமது பிறப்பு என்பதே நல்லவைகளை மட்டுமே செய்து இறைவன் திருவடிகளை அடைவதற்காகத்தான். ஆனால், உலக மாயை காரணமாக நாம் இதை பெரிதாக உணராமல் சில தவறுகளையும் செய்துவிடுகிறோம். சில நன்மைகளையும் செய்கிறோம். இந்த இரண்டுக்குமானதை அனுபவித்துத் தீர்க்கவென்றே அடுத்தடுத்து நமக்கு பிறவிகள் ஏற்படுகின்றன என்பது நமது கொள்கை! அதுதான் சரி என்றும் படுகிறது.

காஞ்சிப் பெரியவர் வாழ்வில் ஒரு சம்பவமே இதற்கு சாட்சியாக கண்முன் விரிகின்றது.



ஒரு வெள்ளைக்கார பெண்மணி பெரியவரை சந்தித்த போது, 'மறு பிறப்புக்கு ஆதாரமுண்டா? உங்களால் அதை எனக்கு புரியவைக்க முடியுமா?' என்று கேட்டிருக்கிறார். பெரியவர் தன் மடத்து சிப்பந்தி ஒருவரை அழைத்து அந்த வெள்ளைக்கார பெண்மணியை ஒரு பிரசவ ஆஸ்பத்திரிக்கு அழைத்துப்போய் அங்கு பிறந்திருக்கும் குழந்தைகளை பார்த்துவிட்டு வரும்படி சொல்லி அனுப்புகிறார்.

அந்த பெண்மணியும் பிரசவ ஆஸ்பத்திரிக்கு சென்று பார்த்தவிட்டு திரும்பி வருகிறார். பெரியவர் அவரிடம் கேள்வி கேட்கத் தொடங்குகிறார்.. 'நீ பார்த்த குழந்தைகள் எப்படி இருந்தன?' 'ஒரு குழந்தை, நல்ல அழகு. இன்னொன்று, மிகவும் ஒல்லியாக சவலையாக இருந்தது. ஒரு குழந்தை, சரியான குண்டு. ஒரு குழந்தைக்கு பிறக்கும் போதே உடம்பில் ஊனம்' என்று அவரும் தான் பார்த்ததை கூறி முடித்தார்.

பெரியவர் திரும்பிக் கேட்கத் தொடங்கினார்.. 'நீ பார்த்த குழந்தைகள் இப்போதுதான் பூமிக்கு வந்திருக்கின்றன. மறுபிறப்புக் கொள்கை இல்லை என்று வைத்துக் கொண்டு சிந்தித்தால் இப்படிப் பிறக்கும் குழந்தைகள் சமமாக ஒன்றுபோல ஏழை பணக்காரன், கறுப்பு வெளுப்பு, முடம் என்று இல்லாமல் அல்லவா பிறக்க வேண்டும்?! கடவுள் படைக்கும்போதேவா பாரபட்சமாக படைப்பார். அப்படிப் படைத்தால் அவர் கடவுளாக இருக்க முடியுமா?' என்று பெரியவர் கேட்டதற்கு அந்த பெண்மணியால் பதில் கூற முடியவில்லை. மெல்ல அவருக்கும் புரியத் தொடங்கியது.

'கருக்கொள்வதற்கு முன்பே இன்னார் வயிற்றில் இன்ன கால கட்டத்தில் என்று ஒரு கணக்கு இருக்கிறது.

இந்தக் கணக்குக்கு பின்னால்தான் நம் கர்மம் இருக்கிறது. இதற்கும் கடவுளுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. கடவுள் பொதுவாக இருந்து நமக்கு தொடர்ந்து ஜென்மங்களை தந்து தன்னை வந்தடைய வழி செய்துகொண்டே இருக் கிறார் என்பதைத் தவிர இதை வேறு எப்படி நினைப்பது?

நமது வினைகளே உயர்வு தாழ்வுக்கு காரணம். நம் வாழ்க்கையில் ஒருவரை உயர் நிலையிலும் தாழ்நிலை யிலும் பார்க்கும்போது அதற்கான லௌகீகக் காரணங் கள் ஒருபுறம் இருந்தாலும் அடிப்படைக் காரணம் அவரவர் கர்மமே என்பது தெளிவாகிறது அல்லவா?' என்று பெரியவர் கேட்க.. அந்தப் பெண்மணியும், 'உங்களின் இந்த கருத்தை என்னால் மறுக்க முடியவில்லை. நான் ஏற்றுக்கொள்கிறேன்!' என்றாராம்.

இந்து மதத்தின் இந்த மறுபிறப்பு கொள்கைக்கு சான்றாக அந்த ஈசனே ஆதிசங்கரராக அவதாரம் எடுத்து வந்ததாக கூறுவார்கள். அதேபோல், ஞானசம்பந்தர் முருகனின் அவதாரம், ராமாயணத்தில் லட்சுமணனே ஆதிசேஷனின் அவதாரம் என்று நிறைய சான்றுகளோடு பேசுவார்கள். நம்பிக்கை உடையவர்கள் இவைகளை மறுக்கப் போவதில்லை. இல்லாதவர்கள் ஏற்கப்போவ தில்லை.

ஆனாலும், பிறக்கும்போதே ஏற்றத்தாழ்வுகளோடு உயிர்கள் பிறப்பதற்கு வினைப்பாடு தவிர வேறு எது காரணமாக இருக்க முடியும்?

* * *



15

# குருவிடம் கடவுளைத் தேடு!

இந்து மதத்தின் அரிய கோட்பாடுகளில் ஒன்று, குருவும் அவரது அருளும்!

இறைவனை அடைய வழிகாட்டுபவர்தான் குரு என்றாலும், 'இறைவனைவிட மேலானவர் குரு' என்கிறது இந்து மதம். புராணங்களிலும், பழங்கதைகளிலும் குரு வின் பெருமையை நமக்கு உணர்த்தும் சம்பவங்களுக்கு ஒரு அளவேயில்லை.

இந்தக் கருத்தை வைத்துக் கொண்டு நாமும் பல அனுமானங்களுக்கு வரலாம். கேள்விகள் எழுப்பலாம்.

கடவுளைவிடப் பெரியவர் குரு என்றால் கடவுள் என்ற ஒருவர் எதற்கு? நாம் குருவையே கடவுளாக கருதி வழிபடலாமே என்பது நம்முள் எழும் முதல் கேள்வி.

'தாராளமாக வழிபட்டுக் கொள்.. குருவிடமே கட வுளைத் தேடு. அவரையே கடவுளாகக் கொள். அவ ரிடமே சரண் அடைந்துவிடு. உனக்கு முக்தி நிச்சயம்!' என்பதுதான் நமக்கு பதிலாகக் கிடைக்கிறது.

'ஒரே சமயத்தில் உங்கள் எதிரில் உங்களின் குருநாத ரும், கடவுளும் வந்தால் இருவரில் யாரை முதலில் வணங்குவீர்கள்?' என்று கபீர்தாசரிடம் கேட்கப்பட்டது. அவர் ஒரு நொடிகூட யோசிக்காமல் 'நான் குருவைத் தான் முதலில் வணங்குவேன். இவரால் அல்லவா கடவுளே என்னுள் நுழைந்தார். எனவே, என் முதல் வணக்கம் கடவு ளுக்குக் கிடையாது..' என்றாராம்.

என்ன ஒரு ஆணித்தரமான பதில்!

அப்படி என்ன இருக்கிறது குருவிடம்? அவரும் நம்மைப்போல ஒரு மனிதப் பிறவிதானே? மனிதப் பிறப்பு எடுத்துவிட்டால் அவர்களை இந்த உலக மாயை விடாதே... பாவமும் புண்ணியமும் ஆட்டிப்படைக்குமே? தப்பும், தவறுமாய் எத்தனையோ குருமார்கள் இருக்கிறார்களே. இவர்கள் எப்படி கடவுளைவிட மேலானவர்களாக ஆகிவிட முடியும்?

ராம-லட்சுமணர்களுக்கு குருவாகத் திகழ்கிறார் விசுவாமித்திரர். அவர்களை அழைத்துச் சென்று 'பலா சுத்பலா' எனும் மந்திரத்தை உபதேசித்து, வானத்தில் முனிவர்களின் தவத்துக்கு இடையூறாக இருந்த அரக்கியர் களையும் அழிக்கிறார். அப்படிப்பட்டவரும் மேனகை யிடம் மயங்கியதைத்தான் உலகமே அறியுமே? இன்றைய நடைமுறை வாழ்வில் நமக்கு ஏனைய கலைகளைச் சொல்லித் தரும் பலப்பல குருமார்கள் உள்ளனர். இவர் களில் மதுப்பழக்கம் உடையவர்கள் உண்டு. கல்வியை விற்கும் சூதாடிகள் உண்டு.

இப்படி மனித வாழ்வின் பலவீனங்களை எல்லாம் கொண்ட ஒருவரை எப்படி கடவுளுக்கும் மேலானவராக கருத முடியும்? குருவே பெரியவர் என்று எந்த அடிப் படையில் நமது மதம் வலியுறுத்துகிறது?

குரு என்ற சொல்லுக்கே 'இருளில் இருந்து வெளிச் சத்திற்கு இட்டுச் செல்பவர்' என்பதுதான் பொருள். ஒளி யுடைய அவரிடம் இருந்து உன் அக இருளை நீக்கிக் கொள்ள... அவரின் ஒளி மட்டும்தான் கண்ணுக்குத் தெரிய வேண்டும். மற்ற வடிவங்கள் உன் கண்ணுக்குத் தெரிந்



தால் உனக்குள்ளே மாணவம் வரவில்லை என்பதே அதன் பொருள்' என்கிறது நமது மதம்.

ஒன்றை வேண்டி நிற்பவன் அதை அடைய வேண் டும் என்றால் அந்த ஒன்றையன்றி வேறு எதிலும் கவனம் செல்லக்கூடாது.

அர்ஜுனன் இதற்கு சிறந்த உதாரணம். பாண்டவர் களுக்கு மட்டுமல்ல, கௌரவர்கள் நூறு பேருக்கும் துரோ ணர்தான் குருநாதர். அவர் வில் வித்தை கற்பிக்கும்போது ஒவ்வொருவரும், கனி தெரிகிறது.. இது தெரிகிறது.. கிளை தெரிகிறது என்று பார்த்துப் பார்த்துக் கூறும்போது, அர்ஜுனன் 'கனி மட்டும்தான் தெரிகிறது' என்கிறான்.

இதைத்தான் 'ஸ்திதப் பிரக்ஞை' என்பார்கள். அதனாலே அர்ஜுனன், துரோணரின் மாணவர்களிலேயே தலைசிறந்தவனாக விளங்கினான்.

இந்த துரோணரோடு பிணக்கு கொள்ளவும், அவர் பொதுமையானவர் அல்ல என்று கூறவும் ஏகலைவன் கதையை உதாரணமாக கூறலாம்.

ஏகலைவன், துரோணரிடம் சேர்ந்து வித்தை கற்க விழைகிறான். ஆனால், இனப்பாகுபாடு அதற்குத் தடை யாக இருக்கிறது. உனக்கு கற்பிக்க என்னால் முடியாது என்று கூறிவிடுகிறார் துரோணர். 'ஏற்றத்தாழ்வு பார்க்கும் நீயெல்லாம் ஒரு ஆசிரியரா?' என்று ஏகலைவன் கேட்க வில்லை. அவரைக் கோபிக்கவும் இல்லை. மாறாக, அவரையே குருவாக மானசீகமாய் நினைத்து வில் வித்தை கற்றுக் கொள்கிறான். இதை ஒரு கட்டத்தில் அறியும் துரோணர், குருதட்சணையாக அவனது கட்டை விரலைக் கேட்டு அவனை சோதிக்கிறார். ஏகலைவனோ துளியும்

தயங்காமல் கட்டை விரலை வெட்டத் துணிகிறான். இது தான் மாணவ லட்சணம்.

அர்ஜுனனிடம் இருந்தது ஸ்திதப் பிரக்ஞை; அதாவது சிதறாத உறுதியான நோக்கு. ஏகலைவனிடம் இருந்ததோ குருவின் மீதான பக்தி.

வைணவ ஆச்சாரியர்களின் தலைவராகத் திகழும் ராமானுஜரின் வாழ்வில் ஒரு சம்பவம்.

குருவின் மூலமாக மந்திரோபதேசம் பெற்ற பிறகே அதை உபாசிக்க வேண்டும். பிறர் சொல்வதைக் கேட்டோ எழுதி வைத்திருப்பதை வாசித்தே உபாசிப்பது உபாசனை ஆகாது. அதனால் ஒரு பயனும் இல்லை என்பதால், திருவரங்கத்தில் இருந்து திருக்கோஷ்டியூர் வந்து அங்குள்ள நம்பி எனும் குருநாதரிடம் மந்திரோபதேசம் பெற முயல் கிறார் ராமானுஜர்.

ஒவ்வொரு முறை அவர் வரும்போதும் நம்பி அவரை ஏற்காமல் 'அடுத்த முறை பார்க்கலாம்' என்று தவிர்த்து விடுகிறார். இப்படி ஒரு முறை அல்ல பதினெட்டு முறை! பிறகே அவருக்கு 'ஓம் நமோ நாராயணா' எனும் முக்திக்கு வித்தான அஷ்டாட்சர மந்திரத்தை உபதேசம் செய்கிறார்.

அப்படிச் செய்யும்போது 'இதை நீ யாருக்கும் கூறக் கூடாது. அப்படி நீ கூறினால் குருவின் கட்டளையை மீறிய பாவம் உன்னை வந்து சேரும். நரகத்துக்குத்தான் செல்வாய். எச்சரிக்கை!' என்று கூறியே உபதேசம் செய் கிறார். ஆனால், ராமானுஜர் தனக்கு உபதேசிக்கப் பெற்ற மந்திரத்தை திருக்கோஷ்டியூர் கோயில் கோபுரத்தின் மீது ஏறி நின்று ஊர் மக்களை எல்லாம் அழைத்து, 'உங்களுக்கு முக்தி தரும் வழியை நான் காட்டுகிறேன். உங்களுக்கான



மந்திரத்தையும் உபதேசிக்கிறேன்!' என்று 'ஓம் நமோ நாரா யணா' எனும் அஷ்டாட்சர மந்திரத்தை ஊருக்கே கேட்கும் படி உபதேசிக்கிறார்.

தன் கட்டளையை மீறியதால், நம்பி, ராமானுஜர் மேல் கோபம் கொள்கிறார். 'நீ குருவுக்கு துரோகம் செய்துவிட்டாய். நரகத்துக்குப் போகப் போகிறாய்..' என்கிறார்.

அதற்கு ராமானுஜரோ, 'ஸ்வாமி.. நான் ஒருவன் நரகம் போனாலும், இத்தனை பேர் சொர்க்கம் போவார் களே.. அதுவல்லவா பெரிது!' என்று பதில் தருகிறார். அதைக் கேட்டு நம்பியே திகைத்துப் போகிறார். 'நீ குருவுக்கெல்லாம் குருவானவன். இந்த உண்மையை நான் அறியத் தவறிவிட்டேன்' என்று சிஷ்யனான ராமா னுஜரைத் தொழுகிறார் நம்பி.

ராமானுஜரோ, 'இல்லை, எப்போதும் நான் உங்கள் மாணாக்கனே! என்னைப் பெரிதும் சோதித்த பிறகே மந்திர உபதேசம் செய்தீர்கள். அதனாலேயே நானும் அந்த மந்திரத்தின் அருமை பெருமைகளை ஆழமாய் உணர்ந் தேன். ஒருவேளை உங்களை முதலில் சந்தித்தபோதே நீங்கள் மந்திரோபதேசம் செய்திருந்தால் நானும் அதை எனக்குள் மட்டுமே வைத்து உபாசித்திருப்பேன். அப்படி, என்னைப்போலப் பல முறை முயல்பவர்களுக்கே இந்த மந்திரம் என்றால், முயலவே தெரியாதவர்கள் இருப்பார் களே.. அவர்களுக்கெல்லாம் இது கிட்டாமல் போய்விடுமே.. நாம் ஒருவன் நரகம் போனாலும், மற்றவர்களுக்கெல்லாம் முக்தியை தந்துவிடுமே என்றுதான் துணிந்து உபதேசித் தேன். நீங்கள் உபதேசித்திருக்காவிட்டால் இப்படியெல் லாம் நடந்திருக்குமா? இன்று நாடே அஷ்டாட்சரத்தை

அறியும். காரணம் நீங்கள்.. கருவிதான் நான்!' என்கிறார் ராமானுஜர்.

திருக்கோஷ்டியூர் நம்பி ஒரு கட்டுப்பாடுள்ள குருவாக நடந்து கொண்டார். ராமானுஜரோ தன் உள்ளொளியால் தன்னையே பணயம் வைக்கும் ஒரு குருவாக உலகுக்கு கிடைத்தார்.

குருவருள் என்பது முரண்பாடுகளை கொண்டிருந்தாலும், பெரும் திருவருளுக்கு அதுவே காரணமாக இருக்கும். இதை எல்லாம் ஆழமாக உணர்ந்தே நமது இந்து மதம் மாதா, பிதா, குரு, தெய்வம் என்கிற வரிசையில் தெய்வத்தைக் கடைசியில் வைத்தது.

தாய் நம்மைப் பெற்றெடுத்திருக்கிறாள். நீ என் வயிற்றில் வரக்காரணம் இவர்தான் என்று தந்தையைக் காட்டுகிறாள். இந்த இருவரால் நாம் இந்த மண்ணுக்கு வந்துவிட்டோம். பால் தருவாள் தாய். பொருள் தருவான் தந்தை. வாழ இது போதுமா? அறிவுக்கண் வேண்டுமே? அது தானாகவே திறவாது. அதற்கு ஒருவர் வேண்டும். அவர்தான் குரு!

தாயும் தந்தையும் குருவிடம் நம்மை ஒப்படைக்க, குரு தன் அருளாலும் ஆற்றலாலும் இறைவனை நமக்குக் காட்டி அவனோடு இறுதியாக நம்மைக் கொண்டு சேர்க்கிறார்.

இந்த குரு எப்படிப்பட்டவராக இருந்தாலும் அவரிடம் நாம் அர்ஜுனன் போல, ஏகலைவன் போல, ராமானுஜர் போல நடந்துகொண்டால் நாமே நல்ல மாணவராவோம்.

ஆணவமோ எதையும் கேள்வி கேட்கும். சந்தேகப்படும். மாணவமோ பணிவைத் தரும்; நம்பிக்கை



வளர்க்கும்; இறுதிவரை மாணவ மனோபாவமுடன் இருக்க வேண்டும் என்பதை உணர்த்தவே அவ்வைப் பாட்டியும், கற்றது கை மண்ணளவு என்றாள். குருவின் பெருமையை உணர்த்தவே அந்த ஈசன் குருவாக வந்து நிறைய திருவிளையாடல்களும் புரிந்தான். அருணகிரிநாதரும் அந்த முருகனையே 'குருவாய் வருவாய் - அருள்வாய் முருகா' என்றார்.

எனவே, குருவிடம் கடவுளைத் தேடுவோம்!

* * *

## 16

இந்துக்களிடம் எவ்வளவோ சடங்குகள், சம்பிர தாயங்கள் உள்ளன! திருமணம் என்றால் இப்படித்தான் நடக்க வேண்டும், அதேபோல் ஒருவரின் இறப்பிற்கு பிறகான சவ அடக்கம் (அ) தகனக்கிரியைகூட இப்படித் தான் நடக்க வேண்டும் என்பது வரை ஒரு இந்து வாழ்ந்து முடிப்பதற்குள் ஏராளமான சடங்குகளை அவன் காண்கிறான்.

பொதுவாக எல்லா மதத்தைச் சார்ந்தவர்களிடம் சடங்கு சம்பிரதாயங்கள் இருக்கவே செய்கின்றன. அதை வைத்து கூட்டிக் கழித்துப் பார்த்தால் இந்த சடங்குகளும் சம்பிரதாயங்களும் மனித சமூகத்தின் முகிழ்ந்த அன்பாலும் அறிவாலும் உருவாக்கப்பட்டிருப்பதும் புரிய வருகிறது. அம்மட்டில் ஒவ்வொரு மதத்தின் சடங்கு சம்பிரதாயத் திலும் ஒரு ஆழ்ந்த உட்பொருள் இருக்கவே செய்கிறது. அவைகளில் இந்துக்களிடம் காணப்படும் சில சடங்கு களிலும் சம்பிரதாயங்களிலும் மிக மிக ஆழ்ந்த நுட்ப மான பொருளும் - ஒரு வகையில் மனிதன் மகிழ்வோடு வாழ்ந்திட அதுவே ஆதாரமாக இருப்பதும்தான் விந்தை.

ஆணும் பெண்ணும் இல்லறத்தின் பொருட்டு இணை வதையே திருமணம் என்கிறோம். அந்த நாளில் இந்த திருமணங்கள் ஒரு வாரம் முதல் 10 நாட்கள் வரை ஊரும் உறவும் கூட்டி நடத்தும் ஒரு சடங்காக இருந்தது. இன்று திருமணச் சடங்கு வெகுவாக சுருங்கி இரண்டு நாட்க ளுக்கு வந்திருக்கிறது. முதல் நாள் மாப்பிள்ளை அழைப்பு மறுநாள் காலையில் முகூர்த்தம் - மதியம் விருந்து - மாலையில் மணமக்களுக்கான கண்ணூஞ்சல் மற்றும்



களிப்பான சில செயல்பாடுகள் - இரவு அவர்களுக்கான முதல் இரவு என்கிற ஒரு வரையறை பெரும்பாலும் எல்லோராலும் பின்பற்றப்படுகிறது.

அன்று ஒரு வாரம் 10 நாட்கள் வரை நீண்டதற்கு சரியான காரணங்கள் இருந்தன. இன்று நமக்கெல்லாம் தூரம் ஒரு பொருட்டில்லை. காசிருந்தால் கன்னியாகுமரி யில் வாழும் ஒருவர் 4 மணி நேரத்தில் காரிலோ பஸ் ஸிலோ மதுரைக்கு வந்து அங்கு விமானம் பிடித்து அதிக பட்சம் மூன்று மணி நேரத்தில் தலைநகராம் டெல்லிக்கே சென்றுவிட முடியும்.

அதாவது, மிக அதிகபட்சமாக எட்டு மணி நேர பயணம்தான் குமரியிலிருந்து டெல்லிக்கே. ஆனால், அன்று இந்த எட்டு மணி நேரத்தில் மிக அதிகபட்சமாய் ஒரு குதிரையிலோ, இல்லை மாட்டுவண்டியிலோ இருபது இருபத்தைந்து மைல் தூரம்தான் பயணிக்க முடியும்.

எனவே, ஊர்விட்டு ஊர் திருமணத்திற்காக வருபவர் கள் பல நாட்கள் பயணம் செய்து திருமண வீட்டை அடைவார்கள். அதே காலம் அவர்கள் திரும்பிச் செல்லும் போதும் தேவைப்படும். அது சமயங்களில் ஒரு மாத கால அளவாகக்கூட இருக்கலாம். இப்படி மாதக்கணக்கில் பயணம் செய்து வருபவர்கள் சில மணி நேரங்களில் முடிந்துவிடும் ஒரு சம்பவத்துக்கா வருவார்கள்?

எனவே, உற்றார் உறவினர் கூடி மகிழவும் அன்பைப் பரிமாறிக் கொள்ளவும். கவலைகளை எல்லாம் மறந்து விருந்துண்டு மகிழவும் ஒவ்வொரு நாளைக்கு ஒரு சடங்கு என்றும், அதில் ஒவ்வொரு விதமான உறவு முறை கொண்ட வர்களுக்கு உரிமை அளித்தும் சடங்குகளை உருவாக்கி

யிருந்தனர். இதில் மாமனுக்கு ஒரு நாள், அத்தைக்கு ஒரு நாள், சித்தப்பனுக்கு ஒரு நாள், நண்பர்களுக்கு ஒரு நாள் என்று அவைகளும் அடுக்கடுக்காய் பிரிக்கப்பட்டிருந்தன. அனைத்துக்கும் தொடக்கமாக ஒரு முகூர்த்த வேளையில் பந்தக்கால் நடப்பட்டது. விளைந்த மூங்கிலின் நுனியில் மாவிலை, வேப்பிலை, அரச இலைகளை கொத்தாக கட்டி அதை சடங்குகள் நடைபெறும் இடத்தின் கன்னி மூலையில் நட்டு வைத்து வணங்கிவிட்டு திருமணச் சடங்குகளை தொடங்குவார்கள். இந்து மதமாய் இருப்பினும் ஐவகை நிலப்பரப்பான குறிஞ்சி, முல்லை, பாலை, நெய்தல், கரிசல் இவைகளில் வாழுகின்றவர்கள் அந்த நிலப்பரப்பின் இயற்கைத் தன்மைக்கேற்ப இந்த சடங்குகளில் சிலவற்றைச் சேர்த்துக் கொண்டும், சிலவற்றை நீக்கிக் கொண்டும் திருமணச் சடங்குகளை பிரத்தியேகமாக வடிவமைத்துக் கொண்டனர். எல்லாச் சடங்குகளிலும் மஞ்சள் அரிசியை தூவி ஆசி வழங்கும் ஒரு விஷயம் மாறாமல் இன்று வரை உள்ளது. எவ்வளவோ தானியங்களும் பொருட்களும் இருக்க, ஆசி வழங்கும்போது மஞ்சள் அரிசி எதற்கு என்பதன் பின்னாலே நிறைய சூட்சுமங்கள் உள்ளன.

இந்துக்களின் வாழ்வில் அரிசி என்பது பசியைப் போக்கி பெரும் நிறைவைத் தரும் ஒன்றாகும். மஞ்சள் மருத்துவ குணம் உடையது - மங்கலத்தின் சின்னம் இது! கோள்களில் குருவின் தன்மையை பிரதிபலிப்பது. அரிசி சந்திரனைப் பிரதிபலிப்பது... மஞ்சள் அரிசி என்பது குருச்சந்திர சேர்க்கை... ஒருவர் ஜாதகத்தில் குருவும் சந்திரனும் சேர்ந்திருந்தால் அது குருச்சந்திர யோகமாக செயல்பட்டு அந்த ஜாதகருக்கு எந்த நாளும் வற்றாத செல்வம் இருக்கச் செய்யும்.



திருமணமான தம்பதியருக்கும் வற்றாத செல்வம் சேர்ந்திட மகிழ்வோடு குருச்சந்திர கலப்பான அட்சதையை தூவி வாழ்த்துவது என்பது இதன் காரணமாகவே வந்தது. இப்படி திருமணச் சடங்குகள் ஒவ்வொன்றின் பின்னாலும் மிக ஆழ்ந்த உட்பொருள் உள்ளது.

குறிப்பாக ஆசி வழங்குதல் என்பது இந்துக்களிடம் காணப்படும் மிகப் பலமான ஒரு விஷயம். ஆசீர்வாதம் என்பர். அதாவது, சீர் என்றால் சரியாகவும் ஒழுங்காகவும் இருப்பது என்று ஒரு பொருள் உண்டு. செல்வம் என்றும் ஒரு பொருள் உண்டு. அடுத்து தொடர்ந்து வருவது என்றும் இதற்கு ஒரு பொருள் உண்டு. குறிப்பாக, பாசத்தோடும் பரிவோடும் வழங்கப்படுவது இது.

இந்த சீருடன் 'ஆ' என்னும் சொல் சேரும்போது அது பெரிய சீர் என்றாகிறது. அதாவது, ஒரு மனிதன் பொருட்களை சீராக பெறுவதைவிட பெரியது ஆசீர்வாதம் எனப்படும் ஆசிகள். உள்ளம் குளிர, மனம் நெகிழ கைகளை சிரசின் மேல் வைத்து வாழ்த்துவதே ஆசீர்வாதமாகும்! திருமண வேளையில் தாலி கட்டப்படும் தருணத்தில் எப்படி அத்தனை பேரும் சிரசின் மேல் கைகளை வைத்து ஆசியை வழங்க முடியும்? முடியாது என்பது நிதர்சனம். ஆனால், அந்த தருணத்தை விடவும் கூடாது. என்ன செய்யலாம்? எப்படிச் செய்யலாம் என்று சிந்தித்து நம் பெரியோர்கள் கண்ட வழிதான் மஞ்சள் அரிசியான அட்சதையை தூவி வாழ்த்துவது. நம் உள்ளங்கையில் தங்கியிருந்து நம்முடைய உள்ள நெகிழ்ச்சியை தன்னுள் ஏற்றுக்கொண்டு நம் சார்பாக பறந்து சென்று தம்பதிகள் சிரசின் மேல் விழுந்து அவர்களை நாம் தீண்டி மகிழ்ந்த நிறைவையும் தந்து நமது ஆசிகளையும் அவர்களிடம் சேர்த்து விடுகிறது.

திருமணச் சடங்கைத் தொடர்ந்து தம்பதிகள் அடுத்து காணும் சடங்கு பிள்ளைப்பேற்றுக்கு அடிகோலும் சீமந்தம் வளைகாப்பு சடங்காகும்.

வயிற்றில் உருவான கருவானது முழு வளர்ச்சி கண்டு ஒரு முழு உருவைப் பெற்று முடிவது எட்டாம் மாதத்தில். அதாவது குழந்தை என்னும் செல்வமாகிய ஸ்ரீயானது அந்தம் ஆகிய முடிவை வயிற்றுக்குள் கண்டு விட்டது. இதையே ஸ்ரீஅந்தம் என்று சொல்லப்போய் காலப்போக்கில் மருவி சீமந்தம் என்றாகிவிட்டது.

இவ்வேளையில் தாயின் மனநிலையில் துளியும் பேதலிப்பு கூடாது. அது குழந்தையின் உள்ளப்பாங்கை பாதிக்கும்.

'தன் வயிற்றில் வளர்வது ஆணா பெண்ணா? அது கறுப்பா சிவப்பா? அது எந்தவிதமான ஊனமும் இல்லாமல் இருக்குமா? நல்ல நட்சத்திர கதியில் பிறக்குமா? பிரசவத் தின்போது வேறு இடர்ப்பாடு எதுவும் வந்துவிடுமா? இப்படி ஒவ்வொரு பெண்ணின் மனமுமே கர்ப்ப காலத்தில் கேள்விகளில் சிக்கி உழலும். இந்த உழற்சி சிலரிடம் மிகக் குறைவாக இருக்கும். சிலரிடம் அதிகமாக இருக்கும். இல்லாமல் மட்டும் இருக்காது. ஒரு வகையில் இது மிக இயற்கையான ஒரு விஷயமும்கூட. வயிற்றில் சிசுவோடு அந்த குழந்தையைப் பற்றி எந்த ஒரு எண்ணமுமின்றி இருக்க எந்தப் பெண்ணாலும் முடியாது. அப்படி இருந் தால் அவள் மரக்கட்டைக்கு சமமாவாள்.

இப்படி மனஉழற்சியோடு இருப்பவர்களுக்கே ஆறுதலும் உற்சாகப்படுத்தலும் அவசியம். அதோடு கருவுக்குள் அந்தம் கண்டுவிட்ட குழந்தைக்கு கேட்கும் திறன், யோசிக்கும் திறன் மற்றும் அசைவது போன்றவை இதற்கு பிறகே வேகமாய் நிகழும். இதை எல்லாம் உத்தேசம் செய்தே வளைகாப்பு சீமந்தத்தை ஒரு பெரு விசேஷ நிகழ்வாக வடிவமைத்தார்கள்.



நிறையப் பிள்ளைகளைப் பெற்று நன்கு வாழ்ந்து கொண்டிருக்கும் சுமங்கலிப் பெண்களெல்லாம் ஒன்று கூடி கருக்கொண்ட அந்த பெண்ணுக்கு பூச்சூடி பொட் டிட்டு, சந்தனம் பூசி, திருஷ்டி கழித்து அந்த பெண்ணின் புடவை முந்தானையில் பூ பழம் வைத்து முடிந்து கொள்ளச் செய்து ஆசீர்வாதமும் செய்வதே அந்தச் சடங்காகும். வரிசையாக ஒருவருக்கு பத்து பேர் இதை செய்து, அதே வேளையில் குலவையிட்டு, பாட்டும் பாடி அந்த பெண் ணின் நிமித்தம் கோலாட்டம், கும்மி என்று சுற்றி வந்து ஆடிடும்போது அதைக் கண்டு அந்த பெண்ணின் மனம் பெரிதும் மகிழும்.

இறுக்கமெல்லாம் தளர்ந்து, மனஉழற்சியே துளியும் இன்றி மிகமிக சந்தோஷமாக அவள் மேடையில் அமர்ந் திருப்பாள். அப்படி அவள் இருக்கும்போது அவளது ரத்த ஓட்டத்திலும் ஜீவஅணுக்கள் தங்கு தடையின்றி பாய்ந்து தொப்புள்கொடி வழியாக பிள்ளையின் உடம்பிலும் புகுந் திடும். புக வேண்டும் என்பதே இச்சடங்கின் உளவியல் நோக்கமாகும். ஏன் என்றால், ஒரு குழந்தை சவலை யாகவோ, இல்லை ஊனமாகவோ பிறந்துவிட்டால் காலா காலத்துக்கும் அது அந்த பிள்ளையை மட்டுமின்றி தாய் தந்தையரையும் மிக பாதித்துவிடும்.

எனவேதான் ஆரோக்கியமான பிள்ளைப்பேறு ஒரு வரம் என்றனர். அந்த வரத்தை பரிபூரணமாக கருவுற்ற பெண் பெற்றிட வேண்டும் என்று கருதியே இந்த

சடங்குகளை நம் முன்னோர்கள் வடிவமைத்தார்கள். இவ்வேளையில் கருவுற்ற பெண்ணின் கைகளில் கண்ணாடி வளையல்களை அடுக்கி அழகு பார்ப்பார்கள். அந்த கண்ணாடி வளையல்களை சில நாட்களுக்காவது அவர்கள் கழட்டாமல் இருக்க வேண்டும். வேகமாக எழுந்தாலோ, கையை அசைத்தாலோ கண்ணாடி வளையல் உடைந்துவிடும். எனவே, நிதானமாக நடந்து கொள்ள முயல்வார்கள். அதேசமயம் கைவளையல்களின் சப்தம் கையருகே உள்ள வயிற்றில் இருக்கும் குழந்தையின் காதுகளில் ஒலித்து கேட்கும் திறனையும், அதன் காரணமாக அசைவையும், அதை வைத்தே பிள்ளை வயிற்றினுள் ஆரோக்கியமாக இருப்பதையும் அனுமானித்து விட முடியும்.

இப்படி ஒவ்வொரு செயல்பாட்டின் பின்னேயும் ஆழ்ந்த உட்பொருளும், ஆரோக்கியத்துக்கான காரணங்களும் பொதிந்துள்ளன.

இப்படி திருமணம் தொட்டு பிள்ளைப்பேறு வரை சடங்குகள் தம்பதிகளை வழிநடத்திச் செல்கின்றன. அவர்களுக்கு பக்கபலமாகவும் இருக்கின்றன. இந்த சீமந்த காலத்தில் இருந்து பிள்ளை பிறந்து அதற்கு பெயர் வைக்கும் வரையில் கருவுற்ற பெண்ணின் கணவன் தீட்சை என்னும் பெயரில் முடி வளர்க்க வேண்டும். இந்த காலத்தில் தலைமுடியைத் திருத்திக் கொள்வதோ இல்லை முகச்சவரம் செய்து கொள்வதோ கூடாது. ஏன் கூடாது என்பதற்கு பின்னாலே பிரமிப்பூட்டும் பொருட்செறிவு இருக்கிறது.

அது மட்டுமல்ல...



குழந்தை பிறந்த பிறகு அதன் தலைமுடியை குல தெய்வத்தின் கோயிலில் காணிக்கையாக செலுத்தும் வழக்கம் நம் இந்து மதத்தில் அனேகமாக எல்லா வருணத்தவர்களிடமும் இருக்கிறது.

தலைமுடியை இன்று அற்பமாக கருதும் ஒரு நிலை காணப்படுகிறது. கோபத்தில் யாரையாவது திட்டும் போதுகூட 'போடா மசுரே...' என்று மயிர் என்னவோ மிக மிக கேவலமான ஒற்றைப்போல நினைத்து பேசி விடுகிறோம்.

ஆனால், தலைமுடியில் மும்மூர்த்திகளும், அதாவது சிவா விஷ்ணு பிரமனே இருக்கிறார்கள் என்பது வேதாந்த ரகசியமாகும்.

தலைமுடிக்கு கேசம் என்றும் பெயருண்டு. இதை க அ ஈசம் என்று பிரித்து பொருள் கொள்ள வேண்டும். 'க' என்றால் பிரம்மனை குறிக்கும் 'அ' என்றால் விஷ்ணுவைக் குறிக்கும், ஈச என்பது சிவபெருமானைக் குறிக்கும். மூன்றும் ஒன்றான நிலையில் கேசவம் என்போம். கேசவம் என்பது அந்த மகாவிஷ்ணுவை குறிக்கும். அவனே கேசவன். அவனுக்குள் மும்மூர்த்திகளிலிருந்து முப்பத்து முக்கோடி தேவர்கள் உட்பட ஈரேழு பதினான்கு உலகமும் அடக்கம் என்கிறது விஷ்ணு புராணம்.

கேசவன் உலகையும் உயிர்களையும் காப்பவன். கேசம் சிரசையும் மேனியையும் புறத்தொடர்பு கொண்டு காக்கிறது. உடலில் எல்லா பாகங்களும் மறைந்திருந்து வளரும். கேசம் மட்டும் புறத்தில் வளர்வதாகும்.

படைப்பது காப்பது அழிப்பதை மூவினைச் செயல்பாடு என்கிறோம். இது ஒவ்வொரு தலைமுடி

யிடமும்கூட காணப்படுகிறது. வியர்வையை வெளியேற்றி காத்து புதுப்புதுச் செல்கள் உருவாகும்போது படைத்தும் பழைய செல்களை அழித்தும் இது வினை புரிகிறது.

எனவே, இதனை தெய்வீகத்தோடு இணை வைத்து சிந்தித்தனர் நமது சான்றோர்கள்.

அது மட்டுமா...?

* * *



## 17

இந்த தலைமுடியை அவர்கள் இணைப்புச் சாதனமாகவும் கருதினர். தலைமுடியின் வேர் பாகம் உடம்புக்குள்ளேயும் அதன் வளர்ச்சி கண்ட நுனி பாகம் பிறத் தொடர்பிலும் உள்ளது. இதை கோவிலுக்கு சென்று அங்கே முடி காணிக்கை செலுத்துவது என்னும் சடங்கு மூலம் தாயின் கருவறையில் தோன்றியதை - உலகிற்கு தாயான இறைவனின் கருவறைத் தொடர்போடு இணைத்து இன்று தன் சிரசின் முடிவாகிய முடியை தருகிற இந்த உடல் நாளை உன்னை வந்து சேரட்டும் என்று கூறாமல் கூறி முடி மழிப்பதை ஒரு உன்னதச் சடங்காகவே கருதினர். இதுவே பின் பலவகைகளில் மாற்றங்கள் கண்டு சாவுச் சடங்குகளின் போதும் பின்பற்றப்படுகிறது. அங்கேயும் தாய் தந்தையர் பொருட்டு மூத்தபிள்ளை அல்லது அவர்களின் வாரிசுகள் தலைக்கு மொட்டை போட்டுக் கொள்வது என்பது தாய் தந்தையர் தெய்வகதி அடைந்துவிட்டனர் என்பதற்காகவும் இறைவனுக்கு முடிகாணிக்கை கொடுத்தது போலவே இதுவும் இறைவனுக்கு இணையான அவர்களுக்கான காணிக்கை என்றானது.

தலைமுடியை ஒரு அழகுப்பகுதியாக மட்டும் கருதுவது அடிப்படையான சிந்தனை. அதற்கு மேலாக அதை கடவுளுக்கு இணையாக கருதுவது பண்பட்ட ஞானமாகும். இதனால்தான் அந்த கருவறையில் உள்ள இறைவன் திரு உருவை தொட்டு பூசனைகள் புரிவோரை

பட்டர்கள் என்கிறோம். நம் சிரசின் மீதுள்ள இறைவன் உறையும் தலைமுடியைத் தொட்டுத் திருத்தம் செய்பவர்களை அம்பட்டர்கள் என்கிறோம். உண்மையில் முடிதிருத்துவோர் பெரிதும் வணக்கத்துக்குரியவர்கள் என்பதே அடிப்படை உண்மையாகும்.

தலைமுடியில் இறைவன் உறைவதால்தான் நம் பெண்கள் அதை விரித்துப் போட்டுக் கொள்ளக்கூடாது... தைலம் பூசி அழகாய் பின்னிவிட்டுக் கொண்டு அதற்கு பூ வைத்துக் கொள்வது என்பதெல்லாம் தோன்றியது. இது ஒரு வகை பூஜை... இப்பூஜைக்குரியவர்களையே பூவையர்கள் என்கிறோம்.

இந்து மதத்தின் சடங்குகளுக்குள் உட்புகுந்தால் அதன் ஆழ்ந்த பொருட்செறிவு மிகுந்த ஆச்சரியம் தருவதோடு பெரும் சிந்தனைகளையும் தோற்றுவிக்கும்.

இந்த சடங்குகளுக்கு பின்னாலே பூகோள ரீதியான விஷயங்களுக்கும் - கால ரீதியான விஷயங்களுக்கும் ஒரு தொடர்பும் இருப்பதையும் உணரலாம்.

குறிப்பாக நவராத்திரி என்பது இந்துமத சடங்குகளில் மிக உன்னதமான ஒரு நிகழ்வாகும். இது கால ரீதியாக புரட்டாசி எனும் மாதத்தில் வருகிறது. இந்த மாதத்தில்தான் இந்திய தேசம் முழுக்கவே அதாவது காஷ்மீரில் இருந்து கன்னியாகுமரி வரை ஏறத்தாழ ஒரேவிதமான சீதோஷ்ண நிலை இருக்கும். வெய்யில், காற்று, மழை என்னும் மூன்றிடமும் ஒரே சீரான தன்மை இருக்கும். இந்த நாளின் நவராத்திரி கால நாட்களான ஒன்பது நாட்களும் சக்தி அம்சம் மிகுந்த காலமாகும். உடம்பை பேண எப்படி



பயிற்சி அவசியமோ அப்படி மனோசக்தி பெற அதற்கான பயிற்சி போன்றது இந்த நவராத்திரி கால பூஜை. இந்த நாட்களில் வீட்டையே கோவிலாக்கி ஒருபடி மேலே போய் தேவலோகமாக்கி எல்லா தெய்வச் சிலைகளையும் வைத்து ஒவ்வொரு நாளும் ஒரு தானியத்தில் சுண்டல் செய்து நிவேதனம் செய்து அதை விநியோகிப்பது என்பது ஒரு முக்கிய நிகழ்வாகும்.

எந்த ஒரு இல்லத்தில் நவராத்திரி கொண்டாட்டம் என்பது ஆண்டுக்கு ஆண்டுக்கு கூடுதல் சிறப்போடும் மிக மிக மேம்பாட்டோடும் ஈடுபாட்டோடும் நடத்தப்படுகிறதோ அந்த இல்லம் காலகாலத்திற்கும் தன்னுள் வசிப்பவர்களை மகிழ்வோடும் ஆரோக்கியத்தோடும் வைத்திருக்கும்.

காரணம் இந்த நாளில் செய்யும் பூசனைகளுக்கு பின்னே உண்ணும் நவதானிய சுண்டல் வகையறாக்கள் ஒவ்வொன்றுமே ஒரு கோளின் சக்தியை உடையவை. அதை உண்ணுவதால் அந்த கோளின் நல்லாதிக்கம் நம் உடலில் நிலைபெறும். அதை விநியோகம் செய்வதாலும் தர்மம் செய்த பலன் கிட்டும் சக்தியை வகைப்படுத்தி நவ சக்தி என்போம். அந்த நவசக்தியும் நமக்கும் ஊற்றெடுக்கும்.

இந்த நாட்களில் பெரும் திரளாக அக்கம் பக்கத்தவர்கள் வந்து செல்வார்கள். அவர்கள் கொலுவை பார்த்து மகிழும்போது விடும் மூச்சுக்காற்றுக்கு பின்னாலும் பல சூட்சமங்கள் உள்ளன. அவை பாசிடிவான அலைக்கதிர்களை இல்லம் முழுக்க தோற்றுவிக்கும்.

கலை என்னும் சொல்லுக்கு பின்னாலே ஒரு பெரும்

பொருள் உள்ளது. மனதுக்கு மகிழ்ச்சி தருவது கலை. இப்படியும் சொல்லலாம்... மனம் வருத்தப்படும்போது கவலைப்படுவதாக கூறுவோம். துன்ப உணர்வானது வலைவீசி நம்மை கவ்விக் கொண்டதனால் அதன் பொருட்டே கவ்விக் கொண்ட அந்த வலைதான் கவலை என்றானது. கவலையை அறுத்து மகிழ்ச்சி தருவது கலை தான். அதுதான் மனத்துன்பத்தை கலைக்கிறது. கலைப்ப தாலும் அது கலை என்றானது. இந்தக் கலைக்குள் தான் பாட்டு, இசை, நடனம், சிற்பம் வடிப்பது, அலங்கரிப்பது, சுவையாக சமைப்பது போன்ற அவ்வளவும் வருகிறது. இவை அவ்வளவும் நவராத்திரி நாளில் மேலோங்கி நிற்கிறது.

அக்கம் பக்கத்தாரோடு பெரும் இணக்கம், கூடி உண்ணுதல், பாடி மகிழ்தல், பூஜித்து மனதை சுத்தமாக வும் உறுதியாகவும் வைத்துக் கொள்ளுதல் என்று அவ்வளவு விஷயங்களுமே ஒரு நாளல்ல - ஒன்பது நாட்களும் நடைபெறுகிறது. அதுவும் காஷ்மீரில் தொடங்கி கன்யாகுமரி வரை... எப்பேர்ப்பட்ட தீர்க்கதரிசனமிருந்தால் இப்படி ஒரு அற்புதமான பண்டிகை காலம் உருவாக்கப் பட்டிருக்க முடியும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

அதேபோலதான் ஆடி மாதம் அமாவாசை நாளில் கடலில் நீராடி பித்ருக்களுக்கு திதி கொடுப்பதை நமது மதம் வலியுறுத்துகிறது.

இது மிகுந்த கால ஞானமுடைய செயல்.

அமாவாசை நாளில் சந்திரனும் சூரியனும் ஒரு புள்ளியில் கூடுகின்றனர். ஆடி மாதத்தில் பூகோள ரீதியாக இந்த அமாவாசை தினத்தில் பெரும் ஆகர்ஷண சக்தியோடு



பல விளைவுகள் விண்ணில் ஏற்படுகின்றன. அதன் காரணமாக இந்த உலகின் பஞ்சபூதங்களில் ஒன்றான நீரும் - அதைக் கொண்ட கடலிலும் அதன் எதிரொலிகள் உருவாகின்றன. கடல் என்பதற்கு மிகப் பெரியது என்றும் ஒரு பொருள் உண்டு. உலகில் உண்மையில் பெரியது அளவில் வடிவில் ஆழத்தில் என்று எல்லாவற்றிலும் கடல் தான். இதில் நாம் இறங்கி நிற்கும்போது நாமும் இதன் தொடர்புடைய ஒரு அம்சமாகிறோம். கடல் மிசை நிகழும் ஆகர்ஷிப்பு மற்றும் விசை மாற்றங்கள் அதன் மிசை நிற்கை யில் நம்மையும் தொற்றி நம் மனவெளியிலும் அன்று பெரும் ரசவாத மாற்றங்கள் நிகழ்கின்றன. அப்படி ஒரு நாளில் அதை ஒவ்வொரு உயிரும் அடையச் செய்த ஏற்பாடுதான் கடல் நீராடல் மற்றும் ஆற்று நீராடல்கள்.

நமது மதத்தில் நீராட்டுக்கு ஒரு பெரும் இடம் உண்டு. இந்த நீராடல் என்பது குளம், ஆறு, கடல் எனும் மூன்று இடங்களில் நிகழ்வது. குளத்தில் நீராடும்போது சக்தியை பெறுகிறோம். ஆற்றில் நீராடும்போது பாவங் களை விடுகிறோம். கடலில் நீராடும்போது உடல் ரீதியாக / மனரீதியாக பெரும் மாற்றங்களுக்கு ஆளாகி அன்று திதி என்னும் நன்றி உணர்வை கொடுக்கிறோம். பெறுதல், விடுதல், கொடுத்தல் என்னும் இந்த மூன்றையும் வகைப் படுத்தி வைத்து அது அதற்கென கால நேரங்களையும் கண்டறிந்து அந்த வேளையில் அவை நிகழும்படி செய்த வர்கள்தான் நமது சான்றோர்கள்.

கும்பமேளா, மகாமகம் போன்றவை நம் பெரும் பாவங்களை போக்கி நமக்கு பேரருள் தருபவை. அன்று குளத்தில் நீராடுதல் மூலம் சக்தி பெறுகிறோம். ஆடிப் பெருக்கு மற்றும் துலாக்காவேரி நாட்களில் ஆற்றில்

நீராடும்போது பாவம் விடுக்கிறோம். அமாவாசை நாளில் கடல் நீராடும்போது நாம் நம்மையை கொடுக்கிறோம்.

இந்த நீராடல்கள் குறித்து மட்டுமே ஒரு நூல் எழுதலாம். இதன் பின்னே அவ்வளவு சிறப்பான சங்கதிகள் ஒளிந்துள்ளன.

இவைகளை சாதித்தவர்கள் நம் முன்னோர்களாகிய சான்றோர்கள்.

குரங்கில் இருந்து பிறந்தவன் மனிதன் என்பது டார்வின் தத்துவம். குரங்கு மனிதனாகி பரிணாம வளர்ச்சி பெற்று வளர வளரத்தான் மொழி எழுத்து பிறந்தது, நாகரிகங்கள் வளர்ந்தன. சக்கரம் என்று ஒன்று கண்டறியப் படவும் மனிதன் வேகமாக இடம்பெயர முடிந்து அவன் நடக்க முடிந்த அளவு அவனது நாடு என்பது போய் கடக்க முடிந்த அளவு அவன் நாடு என்றானது என்கிறோம்.

அந்த வகையில் பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்பே மனித இனம் தோன்றி இன்று இந்த அளவிற்கு நாகரீக வசதிகளோடு நாம் வாழ்ந்தபடி உள்ளோம். இது ஒரு விஞ்ஞானப் பார்வை. இதன்படி பார்த்தாலும் சரி, நமக்குள் ளேயே ஆழ்ந்து சிந்தித்தாலும் சரி மனித இனம் தவறுகளில் இருந்து பாடம் கற்றுத்தான் இந்த அளவு வளர்ச்சி கண்டுள்ளது என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

ஒவ்வொரு விஞ்ஞான கண்டுபிடிப்புக்குப் பின்னாலும் பெரும் போராட்டமும் தோல்விகளும் ஒளிந்திருக்கின்றன.

எத்தனை முறை ஒரு சிலந்தியின் கூட்டை நாம் சிதைத்தாலும் அது தனக்கென ஒரு வலையை பின்னிக் கொண்டு அதில்தான் வாழ்கிறது. இதை பார்த்தே விடா முயற்சி செய்து வெற்றி பெற்றவர்கள் பலர் உண்டு.



ஒரு நாற்காலியோ, பேனாவோ, கெடிகாரமோ எடுத்த எடுப்பில் பூரணமாக இன்று உள்ளது போல உருவாகி விடவில்லை. பல மாற்றங்களுக்கு பின்பே இன்றுள்ள நிலையை அது அடைந்துள்ளது. இது அப்படியே நமது முன்னோர்களின் வழிகாட்டுதலுக்கும் பொருந்தும்.

எவ்வளவு நீண்ட கால அளவும் ஒரு நெடிய பாரம்பரியமும் இருந்திருந்தால் நம்மவர்கள் வாழ்வின் ஒவ்வொரு சிறிய விஷயத்திலும் ஆத்த செறிவோடு இப்படிப்பட்ட நிகழ்வுகளை கண்டறிந்திருக்க முடியும்?


நினைக்கும்போதே பிரமிப்பாக இருக்கிறதல்லவா?

ஆம்... நெடிய பாரம்பரியம்... எப்போது தோன்றியது என்பதே தெரியாத சனாதனமுடையது தான் நம் மதம். இந்து மதம் என்பது சிந்து நதிக்கரை தொட்டு வந்து ஒரு சில நூற்றாண்டுகளுக்கு முன் வந்த பெயர். இடைக்காலத்தில் வந்த பெயர்தான் இது. உண்மையில் இதுதான் உலகின் முதல் மதமாக இருக்க வேண்டும். அப்படி இருந்தாலே இப்படிப்பட்ட கால ஞானமும் ஆழ்ந்த பொருள் கொண்ட கோட்பாடுகளும் ஏற்பட்டிருக்க முடியும்.

திரும்பிப் பார்த்தால் இதில்தான் எத்தனை ஞானிகள்! மகான்கள்! யுக புருஷர்கள்! யோகிகள் அவர்களின் அனுபவமும் அறிவும் ஞானமும் தந்த பெரும் புதையல் குறித்து சிந்திக்க எனக்கு கிட்டிய ஒரு வாய்ப்புதான் இந்த 'என் இனிய இந்து மதம்'.

அத்துணை ஞானியர்க்கும், மகான்களுக்கும், யுக புருஷர்களுக்கும், யோகியர்க்கும் என் வந்தனங்களும் வணக்கங்களும் சென்று சேர்வதாக!

(முற்றும்)


திருமகள்
நிலையம்